

சாசன மாலை

சாசன மாலை

பதிப்பாசிரியக் குழுவினரால்
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1
1960

நூன்முகம்

நம் நாட்டில் கல்லிலும் செம்பிலும் பொறிக்கப்பட்ட தமிழ் மொழிச் சாசனங்கள் கி.பி. ஆறும் நூற்றுண்டின் நடுப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன. அதற்கு முன்னும், கிறிஸ்து அப்தத்தின் ஆரம்பத்துக்கு முன்னும் பின்னுமான நூற்றுண்டுகளில் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுக்கள் உள்ளன. அவை ஒன்றிரண்டு வரிகளில் அமைந்த சிறிய சொற்றெடர்களே.

போர்களில் வீர மரணம் எய்திய வெற்றி வீரர் பெயரையும் சிறப்புக்களையும் கல்லில் பொறித்து, அதனை நாட்டி வழிபடும் வழக்கம் பழந்தமிழ் நாட்டில் உள்ளமையைத் தொல்காப்பிய நூலாலும், பாட்டு, தொகைகளில் காணும் சில குறிப்புக்களாலும் உணரலாம்.

> காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல்,
> சீர்த்தகு சிறப்பின் பெரும்படை, வாழ்த்தல், என்று
> இருமூன்று வகையின் கல் (தொல். பொருள். 2:5)

என்பது தொல்காப்பியம்.

> பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
> பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்

என்பது அகநானூறு (131).

> செல்லும் தேஎத்துப் பெயர் மருங்கு அறிமார்
> கல் எறிந்து எழுதிய நல் அரை மராஅத்த
> கடவுள் ஓங்கிய காடேசு கவலை

என வரும் மலைபடுகடாம் அடிகளிலும் (394-396), கல்லில் பெயர்கள் முதலியன பொறித்தல் சுட்டப்பெறுகின்றது. வீரர் புகழைக் கல்லில் பொறித்துப் போற்றிய மக்கள் அரசனது ஆணை முதலிய வேறு பல பொதுச் செய்திகளையும் கல், செம்பு, முதலியவற்றில் பொறித்து வரலாயினர்.

சாசனங்களுள் பெரும்பாலனவும் தானம், காணிக்கை முதலியவை அளிக்கப் பெற்ற செய்திகளையே அறிவிப்பன; எனினும், வேறு வகைகளும் உள்ளன. அவையாவன: நில விக்கிரயம், பரிவர்த்தனை, கோயில், மடம், குளம் நிறுவியமை, திருப்பணிகள், சரித்திர நிகழ்ச்சிகள், இலக்கியச் செய்யுட்கள், பக்திப் பாடல்கள், தருமோபதேசம் போன்றவை.

ஏட்டில் எழுதி வைப்பது, சிலருக்கே பயன்படக் கூடும். மேலும், ஏடுகள் வெகு விரைவில் பழுதடையக் கூடியவை. எனவே, நீண்ட காலம் நிலைத்து நிற்கும்பொருட்டும், பலரும் அறிய வேண்டும் என்னும் கருத்தாலும், அவற்றைக் கல்லிலும் செம்பிலும் பொறித்து வந்தார்கள்.

தமிழ் நாட்டில் இதுவரையில் பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட சாசனங்கள் கிடைத்துள்ளன. நம் நாட்டுச் சாசனச் செல்வத்தின் ஒரு பகுதியே இது. இன்னும் பிரதி செய்யப்படாத சாசனங்கள் ஏராளமாக அங்கங்கே இருக்கின்றன.

சாசனங்கள் பெரும்பாலும் உரைநடையிலேயே அமைந்துள்ளன. சில செய்யுளாகவே அமைந்துள்ளன. மற்றும் சிலவற்றுள் செய்யுள் உருவத்தில் உள்ள மெய்க் கீர்த்தி முதலிலும், உரைநடைப் பகுதி பின்னரும் காணப்படுகின்றன. இன்னும் சில சாசனங்களிலே ஆரம்பத்திலும் முடிவிலும் ஸம்ஸ்கிருத சுலோகங்களும் அமைந்துள்ளன. தமிழ்ப் பகுதியிலும் இடையில் ஸம்ஸ்கிருதச் சொற்கள் விரவிவரக் காணலாம். ஸம்ஸ்கிருதப் பகுதியும் வடமொழிச் சொற்களும் கிரந்த எழுத்துக்களிலே பொறிக்கப் பெற்றிருக்கின்றன.

நம் நாட்டின் பழைய வரலாற்றைப் பல துறைகளிலும் ஆராய்ந்து அறிந்து கொள்வதற்குச் சாசனங்கள் மிகச் சிறந்த ஆதாரங்களாம். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் அவை இன்றியமையாதவை. ஏடுகளோ, காலக்கிரமத்தில் பிரதி செய்வோர்களால் புகுத்தப் பெற்ற திருத்தங்களையும் பிழைகளையும் கொண்டவை. சாசனங்களோ, அவை எழுதிப் பொறிக்கப் பெற்ற காலத்தில் தமிழ்மொழி எந்த உருவில் வழங்கிவந்தது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

குடுத்து, படிக்கி, முன்னூறு, பணிமார, சிலவு, ஆலையம், போன்ற பல சொல் வடிவங்கள் இப்பொழுது இரயில் நிலையம் முதலிய பொது இடங்களில் காணும் அறிக்கைகளை நினைவூட்டுகின்றன. ஆயினும், அவற்றில் எதுகை, மோனை, நயம் வாய்ந்து பொருள் சிறந்து விளங்கும் கட்டுரைத் தொடர்களும் பல காணப்படுகின்றன. கற்தச்சன், ஆட்தேவை, என்றுற்போன்ற தொடர்கள் கடின சந்திகளை நீக்குவதில் முன்னோர் முனைந்துள்ளமையைப் புலப்படுத்துகின்றன. இங்ஙனமே, இலக்கியத்தில் வழங்கும் சொற்கள் பல இலக்கிய உருவிலும், வேறுசில வடிவில் வேறுபட்டும் காண்கின்றன. இத்தகைய சொற்கோவைகள் மொழியின் வளர்ச்சிப் போக்கைக் கண்டுகொள்வதற்குத் தக்க கருவிகளாகும். ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் உள்ள மாவலி வாணாதிராயன் சாசனம் திவ்யப்ரபந்தப் பாசுரங்களை இடைமடுத்து எழுதப் பெற்றிருக்கின்றது. சாசனங்களில் எடுத்தாளப் பெறும் இது போன்ற இலக்கிய மேற்கோள்கள் முதலியன இலக்கிய வரலாற்றைத் தெரிந்துகொள்ள உதவுவன.

எனவே, சாசனங்களைப் பற்றி எல்லோரும் ஓரளவு அறிந்து கொள்வதற்கு உதவியாக இந்தத் தொகுப்பை வெளியிடுகிறோம். காலமுறையிலும், வமிச வாரியிலும் பிரதேசங்களை ஒட்டியும் அல்லாமல், சாசனங்கள் தெரிவிக்கும் விஷயங்கள் பலவற்றிலும் வகைக்கு ஒன்றிரண்டாகத் தேர்ந்து தொகுக்கப் பெற்றிருக்கிறது. அவற்றில் காணும் ஸம்ஸ்கிருதப் பகுதிகள் சேர்க்கப் பெறவில்லை. தமிழ்ப் பகுதிகள் மட்டுமே கொடுக்கப் பட்டுள்ளன. இன்னும், அவை எளிதில் விளங்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு முக்கியமான இடங்களில் சந்தி பிரித்து, குறியீடுகள் அமைக்கப்பெற்றுள்ளன. சாசனங்களிலே எகர ஒகரங்களுக்குக் குறில், நெடில் வேறுபாடு காணப்படாது; ஆயினும் படிப்பவர்களுக்கு விளங்குவதற்காகக் குறில், நெடில் வேறுபடுத்திக் காட்டப்பெற்றுள்ளன. இடையிடையே வரும் ஸம்ஸ்கிருதச் சொற்கள் தமிழ் எழுத்திலேயே தரப் பெற்றுள்ளன. தமிழ் எண்களும் இக்காலத்தில் பலருக்குப் புரிவதில்லை ஆதலின், சாசனங்களில் வரும் தமிழ் எண்கள் இப்பொழுது வழக்கத்தில் பயின்று வரும் எண்களாக மாற்றி அமைக்கப் பெற்றுள்ளன. மேலும், பணம், நெல், போன்ற சில சொற்களைக் குறிப்பதற்குச் சாசனங்களில் மேற்கொள்ளப்பெற்றுள்ள தனிக் குறியீடுகளும் தரப்பெறவில்லை. இத்தகைய குறியீடுகள் அமைந்த இடங்களில் அவை குறிக்கும் சொற்களாக மாற்றித் தரப்பட்டிருக்கின்றன. சாசனத் தொடக்கத்தில் காணும் மெய்க்கீர்த்தி முதலியவைகளைச் செய்யுள் உருவில் அமைத்துக் கொடுக்கவில்லை. அவற்றைச் செய்யுள் வடிவில் அமைப்பதிலே சிற்சில பகுதிகளில் கருத்து வேறுபாடும் உண்டு. எனினும், எதுகை, மோனை, பொருள் செல் கதி ஆகியவற்றை ஒட்டி, காமா முதலிய குறியீடுகள் இட்டுப் பிரித்துக் காட்டியிருக்கிறோம்.

இதில் அடங்கியுள்ள சாசனங்களில் நாலைந்தைத் தவிர மற்றவை எல்லாம் அரசாங்க வெளியீடுகளிலிருந்தே தொகுக்கப்பெற்றுள்ளன. அவற்றுள், படங்கள் வெளியாகியுள்ளவற்றிற்குப் பாடங்களை அவற்றோடு ஒப்பு நோக்கியே கொடுத்திருக்கிறோம். அதனால் ஒன்றிரண்டு இடங்களில் இந்தத் தொகுதியில் காணும் பாடம் வேறாக இருக்கும்.

இந்த வெளியீட்டைப் பற்றி முக்கியமான செய்தி ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறோம். சாசனங்களை அறிமுகப்படுத்தவே இதை வெளியிடுகிறோம். இதையே ஆதாரமாகக் கொண்டு ஆராய்ச்சியை மேற்கொள்ளலாகாது என்று மட்டும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

மிக முற்பட்ட சாசனங்கள்

வெண் கொஸிபன் குடுபித கல் கஞ்சணம்

[திருநெல்வேலி ஜில்லா மருகால்தலையில் உள்ளது.]

எடுயூர் அரிதின் பாளி

[மதுரை ஜில்லா கருங்காலக்குடியில் உள்ளது.]

எஓமி நாடு குமுடூர் பிறந்த கவுடி ஈதெனுக்கு சிறு பொசில் இளயர் செய்த அதிட்டானம்

[திருச்சிராப்பள்ளி ஜில்லா சித்தன்னவாசலில் உள்ளது.]

எருகொடூர் ஈழ குடும்பிகன் பொலாலையன் செய்த ஆய்சயன நெடுசாதனம்

[மதுரை ஜில்லா திருப்பரங்குன்றத்தில் உள்ளது.]

[மேலே கொடுத்துள்ள நான்கு சாசனங்களும் பிராமி எழுத்தில் உள்ளன. இவை கி.மு. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் பொறிக்கப் பெற்றிருத்தல் கூடும்.]

பல்லவ சிம்ம வர்மன்

(கி.பி. 6-ஆம் நூற்றாண்டு)

'கோ விசைய சிம்ஹவர்மற்கு யாண்டு ஆறாவது, வெண்குன்றக் கோட்டத்துப் பெரு நகர நாட்டு நாட்டார் காண்க. தம் நாட்டு அமண் சேர்க்கை பருத்திக்குன்றில் வஜ்ர நந்திக் குரவர்க்குப் பள்ளிச்சந்த மாகக் கொடுத்தோம்; தாங்களும் படாகை நடந்து, கல்லும் கள்ளியும் நாட்டி, அறையோலை செய்து கொடுத்து, விடுதக' என்று நாட்டார்க்குத் திருமுகம் விட—நாட்டாரும் திருமுகம் கண்டு, தொழுது, தலைக்கு வைத்து படாகை நடந்து, கல்லும் கள்ளியும் நாட்டி, நாட்டார் விடுந்த அறை யோலைப் படிக்கு எல்லை: கீழ்பால் எல்லை ஏந்தலேரியின் கீழைக் கடற்றின் மேற்கும், ஓமைக் கொல்லை எல்லை; இன்னும் தென்பால் எல்லை வேள் வடுகன் கேணியின் வடக்கும், கடற்றின் எல்லை, இன்னும் நீலபாடி எல்லை, இன்னும் விலாடன் குற்றேத்தத்து எல்லை; இன்னும் மேல் பால் எல்லை மாவேத்தத்துவதியின் கிழக்கும், மும்மூலை ஏத்தத்து எல்லை, இன்னும்

ஆற்றெல்லே; இன்னும் வடபால் எல்லே பெருங்கொல்லேயின் தெற்கு, இன்னும் பாண்டியன் கயத்து எல்லே, இன்னும் முருக்கங்கேணி எல்லே. இவ்விசைத்த பெருநான்கு எல்லே யகத்தும் அகப்பட்ட நிலம்: நீர் நிலமும் புன்செய்யும், களரும் கன்று மேய் பாழும், காடும் பீடிலிகையும், கிடங்கும் கேணியும், மனேயும் மனேப் படப்பும், உடும்போடி ஆமை தவழ்ந்தது எல்லாம், உண்ணிலன் ஒழிவின்றி, கோவும் பொறியும் மாற்றி, குடி நீக்கி, இவ்வூர் பெற்ற வஜ்ர நந்திக் குரவர்க்கே பள்ளிச் சந்தமாக தாமரிலும் பதிஞறரைப் பட்டி நிலம் கொடுத்தோம். இந் நிலத்திற்கு எல்லே: கீழ்பால் எல்லே புலிகிழார் பட்டியின் மேற்கும், தென்பால் எல்லே முள்ளெறி பாத் தெல்லேயின் வடக்கும்,மேல்பால் எல்லே போக்கு வாய்ச் செறுவின் கிழக்கும், வடபால் எல்லே பல்லாங்குழிக் காவின் தெற்க்கும், இந்நான்கு எல்லேயகத்தும் அகப்பட்ட பூமியும் பருத்திக்குன்றில் வஜ்ர நந்திக் குரவர்க்கே பள்ளிச்சந்தமாக பரதத்தி சென்றது, நரபயன் ஆணத்தியால். ஸித்தம்.

[தஞ்சாவூர் ஜில்லா, திருத்துறைப்பூண்டித் தாலுகா, பள்ளன் கோயில் கிராமத்தில் கிடைத்த செப்பேடுகள்.]

பல்லவ மகேந்திர வர்மன்-I

(கி.பி. 600-630)

ஸ்ரீ
தொண்டையந் தார்வேந்தன் நரேந்திரப் போத்தரையன்
வெண்பேட்டின் தென்பால் மிக மகிழ்ந்து கண்டான் —
சரமிக்க வெஞ் சிலேயான் சத்துருமல்லேச்வரம் என்று
அரனுக்கு இடமாக ஆங்கு.

இவ்வூர் பிரம்ம மங்கலவன் செல்லன் சிவதாசன் சொல்லியது.

[தென்னுர்க்காடு ஜில்லா, செஞ்சி தாலுகா, தளவானூர்க் குடைவரைக் கோயில் தூணில் உள்ளது.]

பல்லவ பரமேச்வர வர்மன்

(கி.பி. 8-ஆம் நூற்ருண்டு)

ஸ்வஸ்தி ஸ்ரீ பரமேச்சுரப் போத்தரையர்க்கு யாண்டு மூன்ருவது, அவினூர்த் திரு அகத்தீச்வரத்து மஹாதேவர் அடியான் மணியன் திருப்பணி போதவதற்கும் திரு அமிதுக்கும் ஒட்டிப் பொலியூட்டு வைத்த பரிசாவது: கொறுத்தலே நாச்சன் மண்டையாழ்வா...ரேத்தது மகிழரேத்தது மேல் உடைய அஞ்னூற்றுக் காடியும், ஊருணி அகத்துப் பொற்குன்றச் சடங்கவியாரேத்தது மேலே பிராய செறுவின் றலே உடைய

கலம் நெல் முப்பதின் காடியும், பொன் கழஞ்சும், இச் செறுவினுள் பொற்றத்தனூர் கூறுயதும் கொடுஞ் செறுவு தலச்சமாடாக நெல் அஞ்பதின் காடிக்கும் பொலி ஊட்டுண்ண, உடையது கொறுத்தலே பொற்க்கத்தியார் மகனிடை ஊருணி அகத்து கையீடொற்றி உடைய கலம் பொன் அறு கழஞ்சும், நெற் பதிறுற் காடியும், கையீடொற்றி கொறுத்தலேப் பொற்ருழியார்ரிடை ஊருணி அகத்துக் கொண்டனங் குழி இவருடைய நிலத்தின்றலேயும் கருப் பெத்தது இவருடைய மூன்று செறுவின்றலேயுமாக உடைய கலம் அறுகழஞ்சும், நெல் அறுபதின் காடியும், மிக்கொண்டணங் குழி நடுவில் இரண்டு குழியின்றலேயும் கொண்டணங்கிழவர் போழ நன்தியாரிடை உடைய நாற்பதின் காடி நெல்லும், பிண்டி ஊட்டிப் பட்டித் தேவபூதி அங்க மணி பெற்ற செறுவின்றலே உடைய நெல் நா(நா)ற்பதின் காடியும், கொறுத்தலேப் பொற்கத்தியார் மகநிழுக்கங் காட்டுப் பட்டி நிலத்திலும் ...லமான பட்டித்தலே உடைய அஞ்ஞூற்றுக் காடியும், கொறுத்தலேப் பொன்னிலனு ரேதத்துப்பட்டி நிலந் தலேச்சை மாடாக உடைய நெல் அஞ்ஞூற்றுக் காடியும், அழிசுப் பொற்றிண்டத் திருவேதியார் தலேப் பாடக்கத்து ஆறு செறுவின்றலே உடைய கலம் அறு கழஞ்சு பொன்னும், இவரிடயே வடபாலே பள்ளச் செறுவின்றலே முப்பதின்காடி நெல்லும், பொலி ஊட்டு அழிசூர் சிற்றயன் தலேப் பாடகத்து மூன்று செறு வின்றலேயும் அறுபதின் காடி நெல்லாலும், பதின் அஞ் காடி நெல்லும், பொலி ஊட்டுவதாகவும். இன் நெல் முதலால் பதின் காடியால் ஒரு காடி நெல் பொலி ஊட்டுவதும், பொன் கழஞ்சின்வாய் அறு கால் நெல் பொலி உண்பதாகவும், சபையும் பன்மாஹேச்வரரும். இத் தர்மம் ரக்ஷித்தார் அடி என் தலே மேலன. கால் கடு தட்டம்.

[தென் ஆர்க்காடு ஜில்லா திருவதிகையில் திருவீரட்டானன் கோயிலில் உள்ளது.]

பராந்தகன் நெடுஞ்சடையன்

(கி.பி. 770)

கொல் யானே பல ஓட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்த பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி என்னும் பாண்டியாதிராசனுல், நாக மாமலர்ச்சோலே நளிர் சினேமிசை வண்டு அலம்பும் பாகனூர்க் கூற்றம் என்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டு, சொற்கண்ணுளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க, கேள்வி அந்தணுளர் முன்பு, 'கேட்க!' என்று எடுத் துரைத்து, வேள்விசாலே முன்பு நின்று, 'வேள்விகுடி' என்று அப் பதியைச் சீரோடு திரு வளரச் செய்தார்; வேந்தன் அப்பொழுதேய் நீரோடு அட்டிக் கொடுத்தமையால், நீடுபுக்தி துத்தபின், அளவு அரிய ஆதிராசரை அகல நீக்கி, அகலிடத்தைக் களப்ரன் என்னும்

க்லியரைசன் கைக்கொண்டு அதனை இறக்கியபின், படுகடல் முளைத்த பருதிபோல் பாண்டியாதிராசன் வெளிற்பட்டு, விடு கதிர் அவிர் ஒளி விலக வீற்றிருந்து, வேலை சூழ்ந்த வியலிடத்து, கோவும் குறும்பும் பாவுடன் முருக்கி, செங்கோலோச்சி, வெண்குடை நீழல், தங்கு ஒளி நிறைந்த தரணிமங்கையைப் பிறர்பால் உரிமை திறவிதின் நீக்கி, தன்பால் உரிமை நன்கனம் அமைத்த, மானம் போர்த்த, தானை, வேந்தன், ஒடுங்கா மன்னர் ஒளி நகர் அழித்த கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னன்—மற்று அவற்கு மகன் ஆகி, மகீதலம் பொது நீக்கி, மலர் மங்கையொடு மணன் அயர்ந்த, அற்றம் இல், அடர் வேல் தானை ஆதிராசன், அவனிசூளாமணி, எத்திறத்தும் இகல் அழிக்கும் மத்த யானை மாறவர்மன்—மற்று அவற்கு, மருவினிய ஒரு மகன் ஆகி, மண் மகளை மறுக் கடிந்து, விக்ரமத்தின் வெளிற்பட்டு, விலங்கல் வேல் பொறி வேந்தர் வேந்தன், சிலைத் தடக்கைக் கொலைக் களிற்றுச் செழியன், வானவன், செங்கோல் சேந்தன்—மற்று அவற்குப் பழிப்பு இன்றி வழித் தோன்றி, உதயகிரி மத்யமத்து உறு சுடர் போல, தெற்றென்று திசை நடுங்க, மற்று அவன் வெளிற்பட்டு, சூழியானை செல உந்திப் பாழிவாய் அமர் கடந்து, வில்வேலிக் கடல்-தானையை நெல்வேலிச் செரு வென்றும்; விரவிவந்து அடையாத பரவரைப் பாழ் படுத்தும்; அறுகாலினம் புடை திளைக்கும் குறுநாட்டவர் குலம் கெடுத்தும்; கைந்நலத்த களிறு உந்திச் செந்நிலத்துச் செரு வென்றும்; பார் அளவும் தனிச்செங்கோல் கேரளனைப் பலமுறையும், உரிமைச்சுற்றமொடு அவர் யானையும் புரிசைம் மதில் புலியூர், பகல் நாழிகை இறவாமை, இகலாழியுள் வென்று கொண்டும்; வேலாழியும் வியன்பறம்பும் ஏலாமை சென்று எறிந்து அழித்தும்; ஹிரண்ய கர்ப்பமும் துலாபாரமும் தரணி மிசைப் பல செய்து, அந்தணர்க்கும் அசக்தர்க்கும், 'வந்தணைக!' என்று ஈத்தளித்த, மகரிகை அணி மணி நெடு முடி அரிகேஸரி, அஸமஸமன், சிரீ மாறவர்மன் — மற்று அவற்கு மகன் ஆகிக் கொற்றவேல் வலன் ஏந்தி, பொருது ஊரும் கடல்-தானையை மருதூருள் மாண்பு அழித்து, ஆய்வேளை அகப்பட ஏயென்னுமை எறிந்து அழித்து, செங்குடியும் புதான்கோட்டும் செரு வென்றவர் சினம் தவிர்த்து, கொங்கு அலரும் நறும் பொழில்வாய்க் குயிலோடு மயில் அகவும் மங்கலபுரம் என்னும் மகாநகருள் மகாரதரை எறிந்து அழித்து, அறைகடல் வளாகம் பொதுமொழி அகற்றி, சிலையும் புலியும் கயலும் சென்று நிலை அமை நெடு வரையிடவயிற் கிடாஅய், மண் இனிது ஆண்ட தண்ணளிச் செங்கோல் தென்ன வானவன், செம்பியன், சோழன், மன்னர் மன்னன், மதுர கருநாடகன், கொல் நவின்ற நெடுஞ் சுடர் வேல் கொங்கர்கோமான், கோச் சடையன்—மற்று அவர்க்குப் புத்திரன் ஆய், மண் மகளது பொருட்டாக, மத்த யானை செல உந்தி, மான வேல் வலன் ஏந்தி, கடு விசையால் எதிர்ந்தவரை நெடுவயல்வாய் நிகர் அழித்து, கறுவு அடைந்த மனத்தவரைக் குறுமடைவாய்க்

கூர்ப்பு அழித்து, மன்னிகுறிச்சியும் திருமங்கையும் முன் நின்றவர் முரண் அழித்து, மேவலோர் கடல் தானேயோடு ஏற்று எதிரேய் வந்தவரைப் பூவலூர்ப் புறங்கண்டும்; கொடும் புரிசைந் நெடுங் கிடங்கின் கொடும்பாளூர்க் கூடார் கடும் பரியும் கருங் களிறும், கதிர் வேலில் கைக்கொண்டும்; [செழும் புரவிப்] பல்லவனேக் குழும்பூருள் தேசு அழிய, எண் இறந்த மால் களிறும் இவுளிகளும் பல கவர்ந்தும்; தரிய லராய்த் தறித்தவரை, பெரியலூர், பீடு அழித்தும்; பூ விரியும் பொழிற் சோலேக் காவிரியைக் கடந்திட்டு, அழகு அமைந்த வார் சிலேயின் மழ கொங்கம் அடிப்படுத்தும்; ஈண்டு ஒளிய மணி இமைக்கும் எழில் அமைந்த நெடும் புரிசைப் பாண்டிக்கொடுமுடி சென்றெய்தி, பசுபதியது பந்ம பாதம் பணிந்து ஏத்தி, கனக ராசியும் கதிர் மணியும் மனமகுழக் கொடுத்திட்டும்; கொங்கரவ நறுங் கண்ணிக் கங்கராஜனெடு ஸம்பந்தஞ் செய்தும்; எண் இறந்தன கோஸஹஸ்ரமும் ஹிரண்யகர்ப்பமும் துலா பாரமும் மண்ணின்மிசைப் பல செய்து, மறைநாவினேர் குறை தீர்த்தும்; கூடல், வஞ்சி, கோழி, என்னும் மாட மா மதில் புதுக்கியும்; அறை கடல் வளாகம் குறையாது ஆண்ட மன்னர் மன்னவன், தென்னவர் மருகன், மான வெண்குடை மான்தேர் மாறன்—மற்று அவற்கு மகன் ஆகி, மால் உருவின் வெளிப்பட்டு, கொற்றம் மூன்று உடன் இயம்ப, குளிர் வெண்குடை மண் காப்ப, பூமகளும் புலமகளும் நா மகளும் நலன் ஏத்த, கலியரைசன் வலி தளர, பொலிவினெடு வீற்றிருந்து, கருங்கடல் உடுத்த பெருங்கண் ஞாலத்து, நாற் பெரும் படையும் பாற் படப் பரப்பி, கருதாது வந்து எதிர் மலேந்த காடவனேக் காடு அடைய, பூ விரியும் புனல் கழனிக் காவிரியின் தென் கரைமேல், தண் நாக மலர்ச் சோலேப் பெண்ணுகடத்து அமர் வென்றும்; தீ வாய் அயில் ஏந்தித் திளேத்து எதிரேய் வந்திறுத்த ஆய் வேளேயும் குறும்பரையும் அடல் அமருள் அழித்து ஓட்டி, காட்டுக் குறும்பு சென்று அடைய, நாட்டுக் குறும்பில் செரு வென்றும்; அறைகடல் வளாகம் ஒருமொழிக் கொளீஇய, சிலேமலி தடக் கைத் தென்ன வானவன், அவனேய், ஸ்ரீவரன், ஸ்ரீமநோகரன், சினச் சோழன், புனப் பூழியன், வீதகன்மஷன், விநய விச்ருதன், விக்ரமபாரகன், வீரபுரோகன், மருத்பலன், மான்ய சாசனன், மனூபமன், மர்த்திதவீரன், கிரிஸ்திரன், கீதிகிந்நரன், க்ருபாலயன், க்ருதாபதானன், கலிப்பகை, கண்டக நிஷ்டூரன், கார்ய தக்ஷிணன், கார்முக பார்த்தன், பராந்தகன், பண்டித வத்ஸலன், பரிபூர்ணன், பாபபீரு, குரையுறு கடற்படைத் தானே குணக்ருகியன், கூடநிர்ணயன், நிரை உறு மலர் மணி நீள் முடி நேரியர்கோன், நெடுஞ் சடையன், மற்று அவன் தன் ராஜ்ய வத்ஸரம் மூன்றுவது செலாநிற்ப— ஆங்கு ஒரு நாள், மாட மா மதில் கூடல் பாடுநின்றவர் ஆக்ரோதிக்க, கொற்றவனே மற்று அவரைத் தெற்றென நன்கு கூவி, 'என்னேய், நும் குறை?' என்று, முன்னுகப் பணித்தருள — 'மேல்நாள் நின் குரவரால், பால்முறையின் வழுவாமை, மாகம் தோய் மலர்ச் சோலேப் பாகனூர்க்

கூற்றத்துப் படுவது; ஆள்வ தானை அடல் வேந்தேய்! வேள்விகுடி என்னும் பியருடையது; ஒல்காத வேல் தானையோடு ஓத வேலி உடன் காத்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பரமேசுவரனுல், 'வேள்விகுடி' என்னப்பட்டது; கேள்வியில் தரப்பட்டதனை, துளக்கம் இல்லாக் கடல்-தானையாய, களப்பிரரால் இறக்கபட்டது' என்று, நின்று அவன் விஜ்ஞாயாப்யஞ் செய்ய —'நன்று, நன்று!' என்று முறுவலித்து, 'நாட்டால், நின் பழமையாதல் காட்டி நீ கொள்க' என்ன, நாட்டால் தன் பழமை ஆதல் காட்டினுன். அங்கு அப் பொழுதேய் காட்ட, 'மேல் நாள் எம் குரவரால் பான்முறையில் தரப்பட்டதை எம்மாலும் தரப்பட்டது' என்று செம்மாந்து அவன் எடுத்தருளி, விற் கைத் தடக் கை விறல் வேந்தன், கொற்கை கிழான், காமக்காணி நற் சிங்கற்குத் தேரோடும் கடல்-தானையான் நீரோடட்டிக் கொடுத்தமையின், மற்று இதற்குப் பெரு நான்கு எல்லை தெற்றென விரித்து உரைப்பின், புகர் அறு பொழில் மருங்கு உடுத்த நகரூர் எல்லைக்கும் மேற்கும்; மற்று இதற்குத் தென் எல்லை, குளந்தைவங் கூழ்வந்தை செய்க்குங் களந்தைக் குளத்தில் ஆறுக்கு வடக்கும்; மற்று இதற்கு மேல் எல்லை, அற்றம் இல்லாக் கொற்றன் புத்தூர் ஒடுமை இருப்பைச் செய்யிடை மேல் தலைப் பெருப்பிற்குக் கிழக்கும்; மற்று இதற்கு வடபால் எல்லை, காயலுள் கமலம் மலரும் பாயலுள் வடபாலைப் பெருப்பிற்குத் தெற்கும்; இவ் வியைத்த பெரு நான்கு எல்லையிற் பட்ட பூமி, காராண்மை மீயாட்சி உள்ளடங்க, மேல் எம் குரவரால் கொடுக்கப்பட்ட பரிசே எம்மாலும் கொடுக்கப்பட்டது. மற்று இதற்கு ஆணத்தி குற்றம் இன்றிக் கூறுங் காலை, கொங்கரவன் னறுங்கண்ணிக் கங்கராஜனது கன்யாரத்னம், கொங்கர் கோற்குக் குணர்ந்து கொடுப்ப, ஆர்ப்பரு அடல் தானைப் பூர்வ ராஜர் புகர்ந்து எழுந்து, வில் விரவும் கடல்-தானை வல்லவனை வெண்பைவாய், ஆள் அமருள் அழிந்து ஓட வாள் அமருள் உடன் வவ்விய ஏனப்பொறி இகல் அமருள் இடியுரும் என வலன் ஏந்தி, மலைத்த தானை மதவிகலன் மன்னர்கோன் அருளில் பெற்றும், கொல் வளைக்கும் வேல் தானைப் பல்வளைக்கோன் குணரப்பட்டு, பொர வந்தவர் மதம் தவிர்க்கும் கரவந்தபுரத்தவர் குலத் தோன்றல், மா ஏந்தும் கடல்-தானை மூவேந்த மங்கலப் பேரரையன் ஆகிய வைத்யக சிகாமணி மாறங்காரி —

இப் பிரமதேயமுடைய கொற்கை கிழான் காமக்காணி சுவரஞ் சிங்கன், இதனுள் மூன்றில் ஒன்றும் தனக்கு வைத்து, இரண்டு கூறும் ஐம்பதின்வர் பிராம்மணர்க்கு நீரோடட்டிக் கொடுத்தான். இதனுள் மூர்த்தி எயினன் சவை ஒடொத்தது நான்கரைப் படாகார முடையன. இதனுள் தனக்கு வைத்த ஒரு கூற்றிலும் தம்பிமார்க்கு நான்கும் தன் சிற்றப்பனுர் மக்களுக்கு ஆறும் சவை ஓடொத்த படாகாரங் கொடுத்

தான். இப்பிரசஸ்தி பாடின சேநாபதி ஏனாதி ஆஇன சாத்தஞ்சாத்தற்கு மூன்று கூற்ருருமாய்த் தங்களோடு ஒத்த நான்கு படாகாரம் கொடுத்தார்.

[இதை அடுத்து ஆறு ஸம்ஸ்கிருத சுலோகங்கள் உள்ளன.]

'மற்று இதனைக் காத்தார் மலரடி என் முடி மேல' என்று கொற்றவனேய் பணித்தருளி, தெற்றெனத் தாம்ர சாசனம் செய்வித்தான். இய்து எழுதின சுத்த கேசரிப் பெரும்பணைக்காரனுக்குப் பெருமக்கள் அருளால் பெற்றது ஒரு இல்ல வளாவும், இரண்டு மாச் செய்யும், ஒரு புன்செய்உம் பெற்ருன். இவை யுத்த கேசரிப் பெரும்பணைக்காரன் எழுத்து.

[வேள்விகுடிச் செப்பேடுகள்]

பாண்டியன் மாறஞ் சடையன்

(கி.பி. 770)

கோ மாறஞ் சடையற்கு உத்தர மந்திரி களக்குடி வைத்யன் மூவேந்த மங்கலப் பேரரையன் ஆகிய மாறங்காரி இக்கற்றளி செய்து, நீர்த்தளியாதேய் ஸ்வர்க்காரோகணஞ் செய்த பின்னே, அவனுக்கு அநுஜந் உத்தர மந்த்ரபதமெய்தின பாண்டி மங்கல விசையரையன் ஆகிய மாறன்னெஇனன் முகமண்டபஞ் செய்து, நீர்த் தளித்தான்.

[மதுரை ஜில்லா, மதுரைத் தாலுகா, ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலில் உள்ளது.]

பாண்டியன் மாறஞ் சடையன்

(கி.பி. 773)

ஸ்ரீ கோ மாறஞ் சடையற்கு ராஜ்ய வர்ஷம் ஆருவது செல்லாநிற்ப, மற்றவற்கு மஹா ஸாமந்தனுகிய கரவந்த புராதிவாசி வைஜ்யன் பாண்டி அமிர்த மங்கல அரையனு இன சாத்தங் கணபதி திருத்துவித்தது திருக்கோஇலும் ஸ்ரீ தடாகமும் இதனுளறமுள்ளதும். மற்றவற்கு தர்ம பந்நி ஆகிய நக்கங் கொற்றியாற் செயப்பட்டது, துர்க்காதேவி கோஇலுஞ் ஜேஷ்டை கோஇலும்.

[திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலில் உள்ளது.]

கோ மாறஞ் சடையன்

(கி.பி. 9-ஆம் நூற்றுண்டு)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ மாறஞ்சடையற்கு யாண்டு முப்பத்தஞ்சு ; நாள் நானூற்றுப் பத்து ஒன்பது. இந் நாளால், களக்குடி நாட்டு ப்ரம்ம தேயம் மானநிலெ நல்லூர் மஹாஸபையோம் பெருங்குறி சாற்றி, ஸ்ரீ கோவர்த்தனத்துக் கூடி இருந்து, இவ்வூர் மஹாஸபையோம் கூடி மன் றுடுவதனுக்கு செய்த வ்யவஸ்தையாவது: இவ்வூர் பங்குடையார் மக்கள் ஸபையில் மன்றுடுகிறது. ஒரு தர்மம் உட்பட மந்திர ப்ராம்ம ணம் வல்லார் ஸுவ்ருத்தராய் இருப்பாரை ஒரு பங்கினுக்கு ஒருத்தரே ஸபையில் மன்றுடுவ்தாகவும். விலெயும் ப்ரதிக்ரஹமும் ஸ்திரீதனமு முடையார் ஒரு தன்மமுட்பட மந்திர ப்ராம்மணம் வல்லாராய் ஸுவ்ருத்தராய் இருப்பாரே மன்றுடுவதாகவும். இதன்மேற்பட்டது விலெயாலும் ப்ரதிக்ரஹத்தாலும் ஸ்திரீதனத்தாலும் ச்ராவணெ புகுவார் முழுச்சிராவணெ அன்றி கால் சிராவணெயும் அரைச் சிராவணெயும் முக்கால் சிராவணெயும் புகவும் பணிக்கவும் பெறுதாராகவும். பங்கு விலெக்கு கொள்வார் ஒரு வேதம் எல்லா இடமும் ஸபரிசிஷ்டம் பரிக்ஷை தந்தார்க்கே ச்ராவணெ பணிப்பதாகவும். இப்பரிசு அன்றி, ச்ராவணெ புக்காரையும் பின்னெயும் இக்கச்சத்தில்பட்ட பரிசே மன்று வதாகவும். இப்பரிசினுல், முழுச்சிராவணெ இல்லாதாரை எவ்வகைப் பட்ட வாரியமும் ஏற்றப் பெறுதாராகவும். இப்பரிசு செய்கின்றுரும் அன்றென்று குத்துக்கால் செய்யப்பெறுதாராகவும். குத்துக்கால் செய் வாரையும் குத்துக்கால் செய்வார்க்கு உறவாயுடநிப்பாரையும் வெவ் வெற்று வகை ஐய்யஞ்சு காசு தண்டங் கொண்டு, பின்னெயும் இக் கச்சத்தில் பட்ட பரிசே செய்வ்வதாகவும். இப்பரிசு பணித்து வ்ய வஸ்தை செய்தோம் மஹாஸபையோம். மஹாஸபையார் ப. . . . . .

[திருநெல்வேலி ஜில்லா, திருநெல்வேலித் தாலூகா மானூர் அம்பலவாணர் கோயிலில் உள்ளது.]

இராஜகேசரிவர்மன்

(கி.பி. 884)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராஜகேசரிபர்மர்க்கு யாண்டு பதிநாலாவது, சிங்கபுர நாட்டுக் கீழ்வழி விடால் மாதேவி ஆராந்தி மங்கல முடைய குணகீர்த்திபடாரர் வழி மாணுக்கியார் கனகவீரக் குரத்தியாரையும், அவர் வழி மாணுக்கியாரையும், தாபசிகள் நாநூற்றுவர்க்கும் கொள்ளா தமையில், இக் கோயிற் பிள்ளெகள் ஐந்நூற்றுவர்க்கும் வழிஇலாரும் காத்தூட்டுவோமானேம். எங்களுடைய ஸ்வரக்ஷை. இது இரக்ஷிப்பார் அடிநிலெ எங்கள் தலெமேலன. மாதேவி அராந்தி மங்கலமுடைய கனகவீரக் குரத்தியார்த் தங்க. . . ர் மகளாதனமையில் முக்கியரும்

இது காப்பார். அவர்கள் ஸ்வரக்ஷை. இதனை இரக்ஷிப்பார் அடிநிலை என் தலைமேலன. . . டநுங் காழாநும் முதலாகிய மாதேவி ஆராந்தி மங்கலமுடைய கநகவீரக் குரத்தியார் தங்கள் மகளாராதினமையில், இது வெல்லாம் தாங்கள் காவல். இதனைத் தீங்கு நினைத்தார் கங்கை இடைக் குமரியிடை எழுநூற்றுக் காதமுஞ் செய்த பாவம் கொள்வார். காவலனுக்குப் பிழைத்தாராவர்.

[வட ஆர்க்காடு ஜில்லா, வெடால் கிராமத்தில் உள்ளது.]

இராஜகேசரிவர்மன்

(கி.பி. 896)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராஜகேசரிபர்மர்க்கு யாண்டு 27-வது, களத்தூர்க் கோட்டத்துத் தன் கூற்றுத் திருக்கழுக்குன்றத்து ஸ்ரீமூல ஸ்தானத்துப் பெருமான் அடிகளுக்கு இறையிலியாக ஸ்கந்த சிஷ்யன் குடுத்தமையில், அப்படியே வாதாவி கொண்ட நரசிங்கப் போத்தரையரும் அப்பரிசே ரக்ஷித்தமையில், அண்டுரையன் குணவன் மகன் புத்தன் விண்ணப்பத்தினுல், பூர்வ ராஜாக்கள் வைத்தபடியே வைத்தேன், இராஜகேசரி பற்மனேன். இத் தற்மம் ரக்ஷித்தான் அடி என் முடி மேலின.

[செங்கற்பட்டு ஜில்லா, திருக்கழுக்குன்றத்தில் பக்தவத்சலர் கோயிலில் உள்ளது.]

தேனிமலை

ஸ்வஸ்தி ஸ்ரீ மலையத்வஜந் தேனூர் மலை இல் தவம் செய்யக் கண்டு, இருக்குவேள் வந்திந்து, அவிப்புறஞ் செய்த பள்ளிச்சந்தம் நாலே கால். இவ்வறம் காத்தான் அடி நித்தம் சென்னி அள.

[திருச்சிராப்பள்ளி ஜில்லா, திருமெய்யம் தாலூகா, தேனி மலையில் உள்ளது.]

பராந்தகன்-I

(கி.பி. 922)

ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப் பரகேசரிபன்மர்க்கு யாண்டு 15-ஆவது, வாணகோப் பாடிப் பெண்ணை வடகரைக் காந்தளூர் நாட்டு, விச்சூர் உடைய ஆர்க்குன்றன் அன்பெருக்கடி திருவண்ணுத்து மஹாதேவர்க்கு ஒரு நொந்தா விளக்கினுக்கு வைத்த சாவா மூவாப் பேராடு தொண்ணூறு. இவை பன் மாஹேச்வர ரக்ஷை.

[வட ஆர்க்காடு ஜில்லா, திருவண்ணமலைக் கோயிலில் உள்ளது.]

பராந்தகன்-I

(கி.பி. 944)

ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப் பரகேசரிபன்மற்க்கு யாண்டு முப்பத்தெட்டாவது, படுவூர்க் கோட்டத்து, பெருந்திமிரி நாட்டு, விளாப்பாக்கத்து, திருப்பான்மலை அரிஷ்டநேமி பிடாரர் மாணுக்கியார் பட்டினிக் குரத்தி அடிகளேன் கண்ட கிணறு இது. இவ்வூர் இருபத்து நால்வரே இரக்ஷிப்பதாகவும். இம் மணையும் இக் கிணறும் பெண்பள்ளி யாவதாகவும். இத்தர்மம் கெடுத்தார் கெங்கை இடைக் குமரி இடைச் செய்தார் செய்த பாவத்திர்படுவார். ஊர் பணிக்க, எழுதினேன், இவ்வூர்க் கருமான் இலாடாச்சனேன்.

[வட ஆர்க்காடு ஜில்லா, வாலாஜாபேட்டைத் தாலூகா, விளாப் பாக்கத்துக் கோயிலில் உள்ளது.]

கன்னர தேவன்

(கி.பி. 962)

ஸ்வஸ்தி ஸ்ரீ கன்னரதேவர்க்கு, யாண்டு 22, வேசாலிப்பாடி வடகரை வாகூர்நாட்டு மன்றுடிகளே, வாகூர் ஸ்ரீமூலட்டானத்துப் பெருமானுக்கு நாங்கள் வைத்த தன்மம்: கட்டிலேறப்போம்போது, ஒரு ஆடு குடுத்துக் கட்டிலேறுவோமாகவும், புறநாட்டிநின்று வந்து இஞ்ஞாட்டிற் கட்டிலேறு மன்றுடிவசம் ஒரு ஆடு குடுப்பதாகவும், குடாது திறம்பினுமைக் கணப்பெருமக்களும் தேவரடியாரும் இரண்டு ஆடு பிடித்துக் கொள்ளப் பெறுவதாகவும், ஒட்டிக்குடுத்தோம் இஞ் ஞாட்டு மன்றுடிக(ள்)ளோம். இத்தன்மம் சந்திராதித்தவல் நிற்பதாக நிறுத்திக் குடுப்போமானும் இஞ்ஞாடு மதகு செய்கின்ற மதகரோம். ஸ்ரீ.

[புதுச்சேரி ராஜ்யம், பாகூரில் உள்ளது.]

மதுராந்தக உத்தம சோழன்

(கி.பி. 983)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோநேரின்மை கொண்டான், மணையில் கோட்டத்து, மணையில் நாட்டார்க்கும், பிரம்மதேயக் கிழவர்க்கும், தேவதானப் பள்ளிச் சந்தக் கணிமுற்றூட்டு வேட்டப்பேற்று ஊர்களிலார்க்கும், நகரங்களிலார்க்கும், யாண்டு 14-வது நாள் 216-னுல்— கச்சிப்பேட்டு நம் வீட்டினுள்ளால் பொன்மாளிகை ஆதி பூமியில் நாமிருக்க, சோழ

மூவேந்த வேளான், திருமால்பேற்று மஹாதேவற்க்கு மணயில் கோட்டத்து மணயில் நாட்டுச் சிற்றியாற்றூர் சங்கப்பாடி கிழான் காணி நீக்கிப் புரவு மூவாயிரக் காடியும், இரவு ஐஞ்னூற்று அறுபத்தொரு காடியும், பொன் இருபத் தறு கழஞ் சரையே மஞ்சாடியும், தேவதான இறையிலியாய் இப்புரவும் இரவும் பொன்னும் தேவர்க்கு இறுப்பதாக, இக் கோட்டத்துப் புரிசை நாட்டுப் பிரம்மதேயப் புதுப்பாக்கத்து சபையாற்க்குத் தேவதான பிரம்மதேசமாக, தொண்டைமாஞற்றூர்த் துஞ்சின உடையாற்க்கு இருபத்தொன்ருவது குடுத்து, இருபத்திரண்டாவது பிடாகை நடந்து சாசனஞ் செய்து குடுத்து, வரிஇலிடாதேய் கிடந்த இவ்வூரை, மதிரையும் ஈழமும் கொண்ட கோப் பரகேசரி பந்மற்கு யாண்டு நாலாவது, தேவதான பிரம்மதேயமாக வரியிலிட்ட இதனுல், புரவும் இரவும் பொன்னும் புதுப்பாக்கத்து சபையாரேய், தேவற்க்கு இறுத்து வரா நின்ருர்கள். இச் சிற்றியாற்றூர் சங்கப்பாடி கிழான் காணியால் முதலாய் வருகின்ற புரவு மூவாயிரக் காடியும், மதிரையும் ஈழமும் கொண்ட கோப் பரகேசரிபந்மற்கு யாண்டு முப்பத்தாருவது திருமாற்பேற்று மாதேவற்கேய் தேவதான இறையிலியாக வரியில்லிட்டு, இப்பரிசு குடுத்த இச்சங்கப்பாடி கிழான் காணியைப் புதுப்பாக்கத்து சபையார் பற்றியுண்டு, தேவர்க்கு இறையிருதொழிகின்ருர்கள் என்று தேவகன்மிகளும் உண்ணுழிகையுடையாரும் பன்மாயேச்வரரும் வந்து, ‘அனியாயமிடுகிருர்கள்’ என்று நமக்குச் சொல்ல, திருமால்பேற்றித் தேவகன்மிகள் உண்ணுழிகை உடையார்களையும் பன்மாயேச்வரரையும் புதுப்பாக்கத்துச் சபையாரையும் அழைத்து, நாம் ஆராய்ந்த இடத்து, புதுப்பாக்கத்து சபையார் சிற்றியாற்றூர் சங்கப்பாடி கிழான் காணியால் தேவற்கு இறையிருதேய் தேவ தானங்களை அனுபவித்து வருகின்றமைய் இசைந்தமையில், புதுப்பாக்கத்துச் சபையாரைத் தண்டம் கொண்டு, இச் சங்கப்பாடி கிழான் காணியால் புரவு மூவாயிரக் காடியும் திருமால்பேற்று மாதேவர்க்குப் புதுப்பாக்கத்து சபையாரேய் இறுப்பதாக, ‘இவர்களுக்கே யாண்டு 14-ஆவது முதல் தேவதான பிரம்ம தேயமாய், இதனுல் புரவு மூவாயிரக் காடியும், சிற்றியாற்று ஊரால் முன்னிறுத்து வருகின்ற புரவு மூவாயிரக்காடியும், இரவு ஐஞ்னூற்று அறுபத்தொரு காடியும், பொன் இருபத்தறு கழஞ் சரையே மஞ்சாடியும், ஆகப் புரவு ஆருயிரக் காடியும், இரவு ஐஞ்னூற்று அறுபத்தொரு காடியும், பொன் இருபத்தறு கழஞ்சரையே மஞ்சாடியும், திருமால்பேற்று மாதேவர்க்குப் புதுப்பாக்கத்து சபையார் இறுப்பதாக, தேவதான பிரம்மதேயமாய் இறையிலியாக வரியிலிட்டுக் கொள்க!’ என்று நாம் சொல்ல, நம் கருமம் ஆராய்கின்ற பருத்திக்குடையான் கொதுகுலவன் சாத்தநான பரகேசரி மூவேந்த வேளானும், நடுவிருக்கைப் பயலைத்தியம்பக பட்டனும், சிக்கருடையான் நக்கன் கணிச்சஞன சோழ மூவேந்த வேளாநும், ஆணத்தியும், வாய்க் கேழ்வியுமாய்க் கேட்டு, ‘நம் ஓலையெழுதும் அண்ணுற்றூருடையான் உத்தர மந்திரி

பட்டாலகன் எழுத்தினுலும், நம் ஓலை நாயகன் சோழ மூவேந்த வேளான் ஒப்பினுலும், புக்கத்திட்டின்படி வரியிலிட்டுக் கொள்க!' என்று நம் கருமம் ஆராய்கின்ற பரகேசரி மூவேந்த வேளான் ஏவ, புரவுவரிச் செம்பியன் உத்தர மந்திரியான இறையான்குடித் தலைமகன் தண்டிபூதியும், பவ்வத்திரிக் கிழவன் அடிகள் நக்கனும், பேரரை-சூருடையானுன உதய திவாகரனும், வீராபரண மூவேந்த வேளானுன கழனிவாயிலுடையான் வென்ருன் கற்பகமும், வரிப் பொத்தகம் திருநாலூர் கிழவன் தாழி சந்திர சேகரனும், முகவெட்டி பழனக் குடையான் அரையன் . . . யிலும், வித்தாருடையான் அடிகள் வீர சோழனும், இறையான்சேரி உடையான் பங்கன் கடம்பனும், முக்குறும் புடையான் கிருஷ்ணன் இராசாதித்தனும், தொண்டை நாட்டுப் புரவு வரிச் சாத்தனூருடையான் நின்ருனக்கனும், சிறுகுடையான் அரையன் சிவக்கொழுந்தும், செம்பாக்கமுடையான் குன்ருடி திருப்பொரியும், வரிப் பொத்தக கணக்கு. . மேனுரணமங்கலமுடையான் . . யான் ருழியும், நெற்குன்ற முடையான் பரஞ்சோதி பட்டாலகனும், வரியிலிடு உடையூருடையான் சுவரன் சாத்தனும், பட்டோலைக் குறிச்சியுடையான் இராசவினையாபரணனும் இருந்து — யாண்டு 14-வது நாள், 218-ஞல், திருமாற்பேற்று மஹாதேவர் தேவதானம் இறையிலியான தங்கள் நாட்டுச் சிற்றியாற்றூர் சங்கப்பாடிகிழான் காணியால், புரவு மூவாயிரக் காடியும், புரிசைநாட்டுப் பிரம்மதேயம் புதுப்பாக்கத்து சபையாரே இறுப்பதாக இவர்களுக்கு தேவதான பிரம்மதேயமாய், இதனுல் புரவு மூவாயிரக் காடியும், சிற்றியாற்றூரே இவர்கள் முன்னிறுத்து வருகின்ற புரவு மூவாயிரக் காடியும், இரவு ஐஞ்னூற்று அறுபத்தொரு காடியும், பொன் இருபத்தறு கழஞ்சரையே மஞ்சாடியும், ஆக நெல்லு ஆருயிரத்து ஐஞ்னூற்று அறுபத்தொரு காடியும், பொன் இருபத்தறு கழஞ்சரையே மஞ்சாடியும், திருமால்பேற்று மஹாதேவர்க்கு புதுப்பாக்கத்து சபையாரே இறுப்பதாக இவர்களுக்குத் தேவதான பிரம்மதேயம் வரியிவிட்டுக் குடுத்தோம். இவை . . . ஆதித்தன் ஆன மீனவன் மூவேந்த வேளான் எழுத்து. . . . டையான் நக்கன். . . .சோழ மூவேந்த [வேளான் எழுத்து.]

[வட ஆர்க்காடு ஜில்லா, வாலாஜாபேட்டைத் தாலூகா, திருமால் புரத்தில் உள்ளது.]

ராஜராஜன்-I

(கி.பி. 1010)

ஸ்வஸ்தி ஶ்ரீ. ஏதத் விச்வ ந்ருப ச்ரேணி மௌலி மாலோப லாலிதம் சாசனம் ராஜ ராஜஸ்ய ராஜகேஸரி வர்மண:

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொள, காந்தளூர்ச் சாலை கலம் அறுத்தருளி; வேங்கை

நாடும், கங்க பாடியும், தடிகை பாடியும், நுளம்ப பாடியும், குடமலை நாடும், கொல்லமும், கலிங்கமும், எண் திசை புகழ்தர ஈழமண்டலமும், இரட்ட பாடி ஏழரை இலக்கமும், திண் திறல் வென்றித் தண்டால் கொண்ட—தன் எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும் தொழுதக விளங்கும் யாண்டே, செழியரைத் தேசுகொள் கோ ராஜகேசரிபன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தாருவது நாள் இருபதினல், உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால், இருமடி சோழனின் கீழைத்திருமஞ்சன சாலை தானஞ் செய்தருளா விருந்து, 'பாண்டிய குலாசனி வளநாட்டு, தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வர முடையார்க்கு நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார் குடுத்தனவும், ஸ்ரீ விமானத்தில் கல்லிலே வெட்டுக!' என்று திருவாய் மொழிஞ்சருள, வெட்டின. *(1)* யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் முன்னூற்றெருபத்திரண்டினல், உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த ஸ்ரீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்கை தேவர் ஒருவர், ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எண்ணூற் றிருபத்தொன்பதின் கழஞ்சேய் முக்காலேய் மூன்று மஞ்சாடி. *(2)* நாளதினலேய் குடுத்த பொன்னின் பத்மாசன ஸ்ரீ பலித் தாலம் ஒன்று, மேற்படி கல்லால் நிறை தொளாயிரத்துத் தொண்ணூற்றைங் கழஞ்சரையே நாலு மஞ்சாடி. *(3)* யாண்டு இருபத்தாருவது நாள் பதினலினல், உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று, ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற்றெண்பதின் கழஞ்சு. *(4)* நாளதினலேய் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று, மேற்படி கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற்று நாற் கழஞ்சரையேய் இரண்டு மஞ்சாடி. *(5)* நாளதினலேய் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று, மேற்படி கல்லால் நிறை நானூற்று எண்பத்து நாற்கழஞ்சே கால்.

(இதை அடுத்து, மேலும் நூறு அணிகளின் விவரங்களும், அவற்றின் எடை முதலியனவும் இதே போலக் கொடுக்கப்பட்டுள்ளன.)

[தஞ்சாவூர் ஜில்லா, தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் உள்ளது.]

ராஜேந்திரன்-I

(கி.பி. 1035-1036)

திருமன்னி வளர, இருநில மடந்தையும், போர்ச் சயப் பாவையும், சீர்த் தனிச் செல்வியும், தன் பெருந்தேவியர் ஆகி இன்புற; நெடிது இயல் ஊழியுள் இடைதுறை நாடும், தொடர்வன வேலிப் படர் வனவாசியும், சுள்ளிச் சூழ் மதில் கொள்ளிப்பாக்கையும்; நண்ணற்கு அரு முரண் மண்ணைக்கடக்கமும்; பொரு கடல் ஈழத்து அரசர்தம் முடியும், ஆங்கு அவர்

தேவியர் ஓங்கு எழில் முடியும், முன் அவன் பக்கல் தென்னவன் வைத்த சுந்தர முடியும், இந்திரன் ஆரமும், தெண் திரை ஈழ மண்டலம் முழுவதும்; எறிபடைக் கேரளன் முறைமையின் சூடும் குலதனமாகிய பலர் புகழ் முடியும், செங்கதிர்மாலையும், சங்கு அதிர் வேலைத் தொல் பெருங் காவல் பல் பழந் தீவும், செருவிற் சினவி இருபத்தொரு கால் அரசு களைகட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத் தீவு அரண் கருதி இருத்திய செம்பொன் திருத்தகு முடியும்; பயங்கொடு பழி மிக முயங்கியில் முதுகிட்டு ஒளித்த சயசிங்கன் அளப்ப அரும் புகழொடு பீடு இகல் இரட்டபாடி ஏழரை யிலக்கமும்; நவநிதிக் குலப்பெரு மலைகளும்; விக்கிரம வீரர் சக்கரக்கோட்டமும்; முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்; காமிடை வளைஇய நாமணைக்கோணமும்; வெஞ் சின வீரர் பஞ்சப்பள்ளியும்; பாசுடைப் பழன மாசுணி தேசமும்; அயர்வு இல் வண் கீர்த்தி ஆதிநகர் அகவையில் சந்திரன் தொல்குலத்து இந்திரரதனை விளை அமர்க்களத்துக் கிளையொடும் பிடித்து, பல தனத்தொடு நிறை குலதனக் குவையும், கிட்ட அருஞ் செறி மிளை ஒட்டவிஷையமும்; பூசுரர் சேரும் நற் கோசலை நாடும்; தன்மபாலனை வெம் முனை அழித்து, வண்டு உறை சோலைத் தண்டபுத்தியும்; இரணசூரனை முரண் உகத் தாக்கி, திக்கு அணை கீர்த்தித் தக்கணலாடமும்; கோவிந்தசந்தன் மா இழிந்து ஓட, தங்காத சாரல் வங்காள தேசமும்; தொடு கழற் சங்கு வோடு அடல் மகிபாலனை, வெஞ்சமர் வளாகத்து அஞ்சுவித்தருளி, ஒண் திறல் யானையும் பெண்டிர் பண்டாரமும், நித்தில நெடுங் கடல் உத்திர லாடமும், வெறி மலர்த் தீர்த்தத்து எறி புனல் கங்கையும்; அலை கடல் நடுவுள் பல கலம் செலுத்திச் சங்கிராம விசையோத்துங்க வர்மன் ஆகிய கடாரத்து அரசனை வாகையம் பொரு கடல் கும்பக் கரியொடும் அகப்படுத்து, உரிமையின் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும், ஆர்த்து அவன் அக நகர்ப் போர்த்தொழில் வாசலில் விச்சாதிரத் தோரணமும், மொய்த்து ஒளிர் புனை மணிப் புதவமும் கன மணிக் கதவமும், நிறை சீர்விசயமும், துறை நீர்ப் பண்ணையும்; வன்மலையூர் எயில் தொல் மலையூரும்; ஆழ் கடல் அகழ் சூழ் மாயிருடிங்கமும்; கலங்கா வல் வினை இலங்காசோகமும்; காவல்அம் புரிசை மேவிலிம் பங்கமும்; விளைப் பந்தூருடை வளைப்பந்தூரும்; கலைத் தக்கோர் புகழ் தலைத்தக்கோலமும்; தீதமர் வல்வினை மாதமர்லிங்கமும், கலாமுதிர் கடுந் திறல் இலாமுரி தேசமும்; தேன் நக்க வார்பொழில் மானக்க வாரமும்; தொடுகடல் காவல் கடுமுரண் கிடாரமும்; மாப்பொரு தண்டால் கொண்ட, கோப் பரகேசரிவன்மரான, உடையார், ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு, யாண்டு 24-ஆவது—ஜநநாதவளநாட்டுக் குறுக்கை கூற்றத்து பிரம்மதேயம், திருக்கோவலூர் ஆன ஸ்ரீ மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து, திருவிடைகழி ஆழ்வார்க்கு இவ் ஊர் சபையோம் விற்றுக் குடுத்த நிலமாவது: இவ் ஊர் மேல்வாய்ப்புலத்துக் கொல்லை நிலம் தடி மூன்றினால் கருத்து நிலம் எழுமாவரைக்கும் கீழ்பார்க்கு

எல்லை, இத் தேவர் தேவதாநத்துக்கு மேற்க்கும்; தென்பாற்கு எல்லை பெருந்தூம்பினின்றும் கிழக்கு நோக்கிப் பாய்ந்த வாய்க்காலுக்கு வடக்கும்; மேல்பாற்கு எல்லை பெருங்களத்துக்குப் பாய்ந்த வாய்க்காலுக்குக் கிழக்கும்; வடபாற்கு எல்லை பெருங்களத்துச் செய்க்கும் இத் தேவதானத்துக்குத் தெற்கும் — இவ் இசைத்த பெரு நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலம் மிகுதிக் குறை உள்ளடங்கக் கருத்து நிலம் எழுமாவரை. இன் னிலம் எழுமாவரையும் இத் தேவற்க்கு விற்றுக் குடுத்தோம், சபையோம். இந் நிலம் விற்றுக் குடுத்துக்கொள்ள உடைய விலைத் திரவியமும் இறை திரவியமும் இத் தேவர் பண்டாரத்தேய் தேவகன்மிகள்பக்கல் கைச் செல்லக் கொண்டு,இறையிலி விற்றுக் குடுத்தோம், திருக்கோவலூர் சபையோம். இன்னிலமும் இத் தேவர் பண்டாரத்துப் பொன்னிட்டுக் கொண்ட பசு ஆறும் கைக் கொண்டு, இத் தேவர் அய்ப்பசித் திருநாள் சேவிக்க வந்த ஸ்ரீ வைஷ்ணவற்க்கு ஒன்பது நாளும் சோறிடக் கடவோமாகவும். இத் தேவர் பண்டாரத்தில் தேவகன்மிகள்பக்கல் நாங்கள் கொண்ட பொன் பதின்கழஞ்சுக்கு விட்ட நத்தமாவது: இவ்வூர் நடுவில் அம்பலத்துக்கு வடக்கு, இத்தேவர் திருவாசலுக்கு கிழக்கிட்டு வடக்கு நோக்கி ஆற்றுக்குப் போன தெருவுக்கு கிழக்கும்; இத்தெருவினின்று கிழக்கு நோக்கிப் போன வடக்கில் தெருவுக்கு தெற்கும்; மேற்கிட்டுத் தென் மடலாக ஒருச்சிறகன் தெருவுக்கு கீழ்மேல்கோல் ஒன்பதுக்கு தென் மடல் கோல் முப்பத்தெட்டில், வடக்குசார கிழக்கு நோக்கிப்போன தெருவுக்கு இரு கோல் நீக்கி, கோல் முப்பத்தறு கோலும், நடுவிற் தெருவுக்கு மேற்கும்; நடுவி நாராசத்துக்கும் ஏரிக்கும் போன மேலைத் தெருவுக்குக் கிழக்கும்; தெற்கில் திருமதுளுக்குந் திரு வீதிக்கும் தெற்கும்; —இந் நான்கு எல்லைக்கும் உட்பட்ட நத்தமும், இப் பெண்ணை ஆற்றுக்குத் திருமஞ்சணத்துக்குப்போம் திருவிடைகழிவதி அகலம் கீழ்மேல் முக்கோலும்; இன்னும், இவ்ஆழ்வார் திரு நந்தவானம் நரசிம்ஹ பந்மனுக்கு கீழ்பாற்கெல்லை இத்திருவிடைகழிவதிக்கு மேற்கும், சுப்ரமணிய பிள்ளையார் முட்டி குழிக்கு தெற்கும், திரு விக்கிரமன் அண்ணுவன் கொல்லைக்கு கிழக்கும், பெண்ணை ஆற்றுக்குத் தெற்கும், இந் நான்கெல்லைக்கும் உட்பட்ட புன்சை குழி 300-ம் செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் ஆக்க இவ்வூற் திருமேற் கோயிலாழ்வார் திருநந்தவானத்துக்கு மேற்கில் மங்கலக் கேணியும், இவைத்துக்கு விலை திரவியமாக இவ் ஆழ்வார் பண்டாரத்து தேவகன்மிகள்பக்கல் கொண்ட பொன் முக்கழஞ்சுக்கும், சந்த்ராதித்தவற் செல்ல விற்றுக் குடுத்தோம் இவ்வூற் சபையோம். ஸ்ரீ வைஷ்ணவ ரக்ஷை.

[தென் ஆர்க்காடு ஜில்லா, திருக்கோவலூர்த் திருவிக்கிரமப் பெருமாள் கோயிலில் உள்ளது.]

கொங்கு கலிமூர்க்க் விக்கிரம சோழன்

(கி.பி. 11-ஆம் நூற்றாண்டு)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோக் கலிமூர்க்க ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்க்குத் திருவெழுத்திட்டுச் செங்கோலோச்சி, வெள்ளி வெண்குடை மிளிர ஏந்தி, நாடு வளம் படுத்து, நைய குடி ஓம்பி, ஆறில் ஒன்று கொண்டு அல்லவை கடிந்து, கோவீற்றிருந்து, குடி புறங்காத்து, பெற்ற குழவிக்கு உற்ற நற்றாய் போல, திருமிகு சிறப்பிற் செல்லாநின்ற திருநல்லியாண்டு 41 நாற்பத்தொன்றாவது: வடகரைத் திருக்கழுமலநாட்டு, நந்திய நல்லூருடையான் வீரசங்காதன் சூற்றியதேவன் வானவன் உத்தர மந்திரியான நாநா தேசிய நாட்டுச் செட்டிபக்கல், தென்கரை நாட்டு பிரம்மதேயம் ஸ்ரீ வீரசங்காத சதுர்வேதிமங்கலத்து ஸபையோம், இவர் பக்கல் கொண்ட பொன் பரகேசரிக்கல்லால், துலைநிறைச் செம்பொன் ஐம்பத்தைய்ங் கழஞ்சு. இப் பொன் ஐம்பத்தைய்ங் கழஞ்சினால் வந்த அளவாய் செல, கார் பசானம் ஆண்டெடுத்து, நூற்றிருபதின் கலமும் கொண்டு, திருவலஞ்சுழி பரமேச்வரர் கோயிலிலே, பிராம்மணர்க்கு உண்ண வைச்ச கலம் மூன்றுக்கு, நிசதம் பரகேசரிக்காலால்க் குறுணியாக மூன்று கலத்துக்கும் நிச்சம் மூன்று குறுணியால் நெல் ஆண்டெடுத்துத் தொண்ணூற்றுக்கலமும், நிச்சம் அடும் பிராம்மணனுக்கு நிச்சம் பரகேசரி அஞ்ஞாழியால் ஆண்டெடுத்து பதினெண்கலனே இருதூணிக் குறுணியும், ஆட்டொரு புடவைக்கு நெல்க் கலனே முக்குறுணியுமாக, நெல் நூற்றிருபதின் கலத்தாலும், இக் கலம் மூன்றுக்கும் கும்மாய முள்ளிட்டு, மூன்று கரியும் ஒரு கலத்துக்கு காணத்தால் அரை....ம் ஒரு பிடி அரை நெய்யும் [கிழாநம்] பேரால் இரண்டு பாக்கும் அஞ்சு வெற்றிலையும், இப்படி சந்திராதித்தியவத் நிற்க மூன்று கலமும் ஊட்டுவதாநோம், ஸபையோம், வானவன் உத்தர மந்திரியார்க்கு. தர்ம்மம் ரக்ஷிப்பான் ஸ்ரீபாதம் என் தலை மேலே. இது பந் மாஹேச்வர ரக்ஷை.

[கோயம்புத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலுகா, பிரமியம் திருவலஞ்சுழிநாதர் ஆலயத்தில் உள்ளது.]

குலோத்துங்க சோழன்-I

(கி.பி. 1090)

புகழ்மாது விளங்க, ஜெயமாது விரும்ப, நிலமகள் நிலவ, மலர்மகள் புணர, உரிமையின் சிறந்த மணிமுடி சூடி, வில்லவர் குலைதர, மீனவர் நிலை கெட, விக்கலர் சிங்கணர் மேல்கடல் பாய, திக்கு அனைத்தும் தன் சக்கரம் நடாத்தி, வீரசிங்காதனத்து, புவன முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோ இராஜகேசரிபன்மரான சக்கர வர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 20வது—

ஆயிரத்தளியான ஆகவமல்ல குலகாலபுரத்துக் கோயிலினுள்ளால், திரு மஞ்சன சாலையில், பள்ளிப் பீடம் காலிங்கராஜனில் எழுந்தருளி யிருக்க, 'கிடாரத்தரையன் கேய மாணிக்க வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து சோழ குலவல்லி பட்டனத்து எடுப்பித்த ராஜேந்திர சோழப் பெரும் பள்ளிக்கும், ராஜராஜப் பெரும் பள்ளிக்கும், பள்ளிச்சந்தமான ஊர்கள் பழம்படி யந்தராயமும் வீர சேஷையும் பன்மை பண்டை வெட்டியும் குந்தாலியும் சுங்கமேருமும் உள்ளிட்டன வெல்லாம் தவிர்ந்தமைக்கும், முன்பு பள்ளிச்சந்தங்கள் காணியுடைய காணி ஆளரைத் தவிர இப் பள்ளிச் சங்கத்தார்க்கே காணியாகப் பெற்றமைக்கும், தாம்ர சாசனம் பண்ணித்தரவேண்டும்' என்று, கிடாரத்தரையர் தூதன் ராஜ வித்யாதர ஸ்ரீ சாமந்தனும் அபிமானோத்துங்க ஸ்ரீ சாமந்தனும் விண்ணப்பம் செய்ய, 'இப்படி சந்தி விக்கரகி ராஜ வல்லபப் பல்லவரையனோடுங்கூட இருந்து, தாம்பிர சாசனம் பண்ணிக் குடுக்க' என்று அதிகாரிகள் ராஜேந்திர சிங்க மூவேந்த வேளார்க்குத் திருமுகம் ப்ரஸாதஞ் செய்தருளி வரத் தாம்பிர சாசனஞ் செய்தபடி:

கடாரத்தரையன் கேய மாணிக்க வள நாட்டு, பட்டனக் கூற்றத்து, சோழ குல வல்லிப் பட்டனத்து எடுப்பித்த ராஜராஜ பெரும் பள்ளிக்கு பள்ளிச்சந்தம்: கேய மாணிக்க வள நாட்டுப் பட்டனக் கூற்றத்து ஆனை மங்கலம் நிலன் தொண்ணூற்றேழே இரண்டு மாக் காணி அரைக் காணியும், முன்புடைய காணி ஆளரைத் தவிர இப் பள்ளிச்சங்கத் தார்க்கே காணியாகவும், இது காணிக்கடன் நெல்லு எண்ணுயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து முக்கலனே இருதூணிக் குறுணி முன்னுழியினுல், நிச்சயித்த நெல்லு நாலாயிரத்து ஐஞ்ஞூற்றுக் கலமும்; ஆனைமங்கலத்துப் பிரமதேயம் நிலம் பன்னிரண்டே முக்காலினுல் நெல்லு... நானூற்றுக் கலம், நிச்சயித்த நெல்லு ஐஞ்ஞூற்று அறுபதின் கலமும்; இந்நாட்டு முஞ்சிகுடி நிலம் இருபத்தேழே முக்காலே முக்காணி அரைக் காணியினுல் காணிக்கடன் நெல்லு இரண்டாயிரத்தெழுநூற்றெழுபத் தொன்பதின் கலனே தூணி நாழுழி, நிச்சயித்த நெல்லு ஆயிரத் தெண்ணூற்றுக் கலமும்; திருவாரூர்க் கூற்றத்து ஆமூர் நிலம் நூற்றுரே மாகாணியில் காணிக்கடன் நெல்லுப் பதினுயிரத்தறுநூற்றுக் கலனே இரு தூணிக் குறுணி அறுநாழி, நிச்சயித்த நெல்லு ஐய்யாயிரத்தெண்ணூற்றம்பைதின் கலமும்; அள நாட்டு வட குடியான நாணலூர் நிலம் எழுபதே முக்காலே நான்மா வரையினுல், காணிக் கடன் நெல்லு ஆருயிரத் தைஞ்நூற் ருெருபத்து நாற்கலனே ஐங்குறுணி ஒரு நாழி, நிச்சயித்த நெல்லு இரண்டாயிரத் தெண்ணூற்று நாற்(ப்) பதின் கலமும்; இந் நாட்டுக் கீழ்ச் சந்திரப் பாடி நிலம் பத்தே இரண்டு மாக் காணி அரைக்காணி முந்திரிகை கீழ் முக்காலினுல், காணிக் கடன் நெல்லு ஆயிரத் தொருபத் திரு கலனே ஐங் குறுணியும்; இந்நாட்டுப் பாலையூர் பிரும்மதேயம் நிலம் அறுபதே முக்காலினுல் நெல்லு மூவாயிரக்

கலம்; நிச்சயித்த நெல்லு ஆயிரத் தைஞ்ஞூற்றுக் கலமும், ஜெயங் கொண்ட சோழ வள நாட்டுக் குறும்பூர் நாட்டுப் புத்தகக் குடி நிலம் எண்பத்தேழேகாலினுல் காணிக்கடன் நெல்லு எண்ணுயிரத் தெழு நூற் றிருபதின் கலனே தூணி நாழுழி, நிச்சயித்த நெல்லு ஆருயிரத் தொருநூற் றெழுகலமும்; விசய ராஜேந்திர சோழவள நாட்டு இடைக் கழி நாட்டு உதைய மார்த்தாண்ட நல்லூர் நிலம் மூன்றே மூன்று மாவினுல் நெல்லு நூற்றுமுப்பத்தைங் கலனே முக்குறுணி முந்நாழி. இது புன்செய் வரிசைப்படி இறைக்கட்டுத் திருவாய்மொழிந்தருளினபடி நெல்லு எழுபத்தெண் கலனேய் ஐங்குறுணி. இதில் இப்பள்ளிக்குப் பாதியும்..

......இப்படி செய்து குடுக்க வென்று திருவாய்மொழிந்தருளித் திரு முகம் பிரசாதஞ் செய்தருளி வந்தது. தாம்பிரசாசனம் பண்ணிக் குடுக்க வென்று சந்து விக்கிரிஹகள் ராஜவல்லபப் பல்லவரையரும் அதிகாரிகள் ராஜேந்திர சிங்க மூவேந்த வேளாரும் சொல்ல, இத் தாம்பிர சாசனம் எழுதினேன் உட்க்கோடி விக்கிரமாபரணத்தெரிந்த வலங்கை வேளைக்காரரில் நிலை உடைய பணையான் நிகரிலி சோழன் மதுராந்தகனேன். இவை என் எழுத்து.

[சிறிய லெய்டன் பட்டயம்.]

இலங்கை அரசன் விசயபாகு

(கி.பி. 12-ஆம் நூற்ருண்டு)

நமோ புத்தாய. ஸ்ரீ லங்கா த்வீபத்து, சூர்ய வம்சத்து, இக்ஷ்வாகு வின் வழிவந்த, அநேக சத்துரு விசயம் பண்ணி, அனுராதபுரம் புக்கு, புத்த சாசனம் ரக்ஷிக்க வேண்டி, சங்க நியோகத்தால் திருமுடி சூடி, அருமநத்தில் நின்றும் சங்கத்தாரை அழைப்பித்து, மூன்று நிகாயத்து சங்க சுத்தி பண்ணுவித்து, மூன்று துலாபாரம் மூன்று நிகாயத்துக்கு குடுத்து, தசராஜ தர்மத்தால் ஐம்பத்தய்யாண்டு இலங்கை முழுதும் ஒருகுடை நிழற்றித் திரு விராஜ்யஞ் செய்தருளி, எழுபத்து மூவாண்டு திரு நக்ஷத்திரஞ் செலுத்தின கோ ஸ்ரீ சங்கபோதி பத்மரான சக்ரவர்த்தி கள் ஸ்ரீ விசயபாகு தேவரநுவாகல் தேவ சேன விரத்தர்க்கு நியோ கித்துப் புலநறியான விசய ராஜ புரத்து எடுப்பித்த மூலஸ்தானமாகிய அபயகிரி மகா விகாரத்து, அக்ராயதனமான உத்தொருள் மூலையில் மூவுலகுக்குஞ் சிகாமணியாகிய தளதாபாத்ர .... தாது ஸ்வாமி தேவர்களுக்கு நித்ய வாச பவநமான ப்ரதமாபிஷேகத்துக்கு மங்கல கிரகமான ஆட்டாண்டு தோறுந் திரு நயனமோக்ஷம் பண்ணி, அஞ்சன நீறுக்கும் கண்ணுளஞ் செய்யும் மங்கல மகாசிலாமய புத்ததேவர்க்கு, கந்தகுடியான தளதாய்ப் பெரும்பள்ளி உங்கள் ரக்ஷையாக வேண்டு மென்று, சகல சாஸ்திராகம சீலாசார சம்பன்னரான ராஜகுரு உதூருள் மூலையில் வ்யாரிணி முகலன் மகாஸ்தவிரர் ராஜாமத்யரோடும் கூட

எழுந்தருளி யிருந்து, எங்களை அழைத்து அருளிச் செய்தமெயில், மாதந்திரத்தோம் கூடி, எங்களுக்கு மூதாதைகளாயுள்ள வளஞ்சேயரை யும் எங்களோடு கூடிவரும் நகரத்தாருள்ளிட்டோரையும் கூட்டி, மூன்றுகைத் திருவேளைக்காறன் தளதாய்ப் பெரும்பள்ளியென்று திரு நாமஞ் சாத்தி, எங்களறமாய் எங்கள் காவலாய் நிற்கவேண்டுமென்று, அறங்காவலுக்கு படைப் படையால் ஓரோ சேவகரையும் ஓரோ வேலி நிலமுமிட்டுக் குடுத்து, இப்பள்ளி நோக்கின ஊர்களும் பரிவாரமும் பண்டாரமும் அபயம் புக்காரையும் பட்டுங் கெட்டுங் காக்கக் கடவோ மாகவும் — அழிவு பட்டிடங்கள் அழிவு சோர்ந்ததும் எங்கள் அந்வய முள்ளதனையும் எஞ்ஞான்றும் இதுக்கு வேண்டுவனவெல்லாம் செய்வோ மாகவும் — பண்ணின இந்த வ்யவஸ்தை சந்திராதித்தவரை நிற்பதாகக் கைய் விஞ வேற்றிச் செம்பிலுங் கல்லிலும் வெட்டுவித்துக் குடுத்தோம், வலங்கை இடங்கை சிறுதனம், பிள்ளைகள் தனம், வடுகர், மலையாளர், பரிவாரக் கொந்தம், பல கலனையுமுள்ளிட்ட திருவேளைக்காரரோம். இப்படித் திரம்புவானும், திரம்பச் சொல்லுவானும், திரம்பச் சம்ம தித்தானும், மாதந்திரத்துக்குப் பிழைத்து படைப்பகையன் பஞ்ச மகா பாதகஞ் செய்தானும், தேவர் பூதர் மாதவத்தோர்க்குக் குடுத்தன கொள்ளும் கொடும்பாவியும், புத்த தர்ம சங்க ரத்நங்களுக்குப் பிழைத் தானும், புகுந் நரகம் புகுவான். அற மறவற்க. ஸ்வஸ்தி ஸ்ரீ.

[இலங்கை, பொலன்னருவாவில் உள்ளது.]

குலோத்துங்கன்-II

(கி.பி. 12-ஆம் நூற்றாண்டு)

பூ மேவு வளர் திருப் பொன் மார்வு புணர, நா மேவு கலைமகள் நலம் பெரிது சிறப்ப, விசய மா மகள் வெல் புயத்து இருப்ப, இசையும் செல்வியு(ம்) எண் திசை விளங்க, நிருபர் வந்து இறைஞ்ச, நீள் நில மடந்தையைத் திருமணம் புணர்ந்து, சீர் வளர் தருமம் மணி முடி சூடி, மல்லை ஞாலத்துப் பல்லுயிர்க்கு எல்லாம் எல்லை இல் இன்பம் இயல் வினில் லெய்து வெண்குடை நிழற்றச் செங்கோலோச்சி, வாழி பல் ஊழி ஆழி நடப்ப, செம்பொன் வீரசிம்ஹாசனத்துப் புவன முழுதுடை யாளொடும் வீற்றிருந் தருளிய கோ இராஜகேஸரி பந்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு மூன்றுவது —செயங்கொண்ட சோழ மண்டலத்து, பல்குன்றக் கோட்டத்துத் தென்நாற்றூர் நாட்டுச் சீயமங்கலத்து ஆளுடையார் தந்மீச்வர முடையார் கோவிலிலே, சம்புபுரத்திருக்கும் பள்ளி செல்வன் இவ் வூரிருக்கும் பள்ளி வேணாட்டரையனைக் கைப்பிழையால் எய்து செத்த மையில், நாட்டவரும் சம்புவராயரும் கூடி, 'இவன் இவ் வேணாட்டரை யனுக்காகச் சாவ வேண்டாம்; கைப் பிழை புகுந்தது. இதுக்குத் தூணாண்டார் கோயிலிலே அரை விளக்கு வைக்க'ச் சொல்ல, அரை விளக்குக்கு பசு பதினாறுருவும் பொறித்து விசியன் செல்வனேன்

சந்திராதித்த வரை செல்வதா(....) வ்வறம் இறங்காமற்க் காத்தார் சிரிபாதம் தலே மேலன. இது சிரி மாயேசுவரர் தன்மம்.

[வட ஆர்க்காடு ஜில்லா, சீயமங்கலம் ஸ்தம்பேசுவரர் ஆலயத்தில் உள்ளது.]

இராஜாதிராஜன்-II

(கி.பி. 1176)

ஸ்வஸ்தி ஸ்ரீ, கடல் சூழ்ந்த பார்மாதரும் (பூமாதரும்) கலேமாதரும் அடல் சூழ்ந்த போர்மாதரும் சீர்மாதரும் அமர்ந்துவாழ, நாற்கடல் சூழ் புவியேழும் பாற்கடல்சூழ் புகழ் பரப்ப, ஆதியுகம் ஆம் என்னச் சோதிமுடி புனேந்தருளி, அறுசமயமும் ஐம் பூதமும் நெறியில்நின்று பாரிப்ப, தென்னவரும் சேரலரும் சிங்களரும் முதலாய மன்னவர்கள் திறை சுமந்து வந்தீண்டிச் சேவிப்ப, ஊழியூழி ஒரு செங்கோல் ஏழு பாரும் இனிதளிப்பச் செம்பொன் வீர சிங்காசனத்து, உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோ இராஜகேசரி பன்மரான த்ரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது, நாள் நூற்றைம்பத்தேழினுல், திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான், ஜெயங் கொண்ட சோழ மண்டலத்து மேன்மலேப் பழையனூர் நாட்டுப் பழையனூர், பழையனூர் உடையார், திருவாலங்காடுடையார் கோயிலில் தேவகன்மிக்கும் ஸ்ரீ மாஹேச்வரக் கண்காணி செய்வார்களுக்கும்:

பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பனுன அண்ணன் பல்லவராஜன் ஈழத்தான் பராக்கிரமபாகு ஆழ்வான் போதே துடங்கி, சோழ ராஜ்யத்துக்கு விரோதமாயிருப்பன பலவடிகளாலுஞ் செய்யப்பார்த்து, இதுக்கு உறுப்பாகப் பாண்டி நாட்டிலே படையுற விட்டு .... குலசேகரனேயும் மதுரையில் நின்றும் வெள்ளாற்றுக்கு வடகரையிலே போதப்பண்ணின படியாலே, [வினேக்கேடுகளு]ம் செய்யப் பார்த்த இடத்து, இதுக்குப் பரிகாரமாக, குலசேகரர்க்கு வேண்டுவனவும் செய்து, முதலிகளும் படைகளும் போகவிட்டு, ஈழத்தான் படையையும் இப்படைக்குக் காரணவரான இலங்காபுர தண்டநாயக்கனும் ஜெக த்ரயத் தண்டநாயக்கனும் உள்ளிட்டாரையும் கொன்று, மதுரை வாச லிலே இவர்கள் தலேகளேத் தெய்ப்பித்து, இவ்வூரிலே குலசேகரரையும் புகவிட்டுச் செல்லாநிற்க, ...கு விரோதமா யிருப்பன செய்யப் பார்த்து, இவன் தன் படை நிலேயான ஊராத்துறை, புலேச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம், மட்டிவாழ் உள்ளிட்ட ஊர்களிலே படைகழும் புகுத விட்டு, படவுகளும் செய்விக்கிறபடிக் கேட்டு, இதுக்குப் பரிகாரமாக ஈழத்தான் மருமகனுராய் ஈழராஜ்யத்துக்கும் கடவராய் முன்பே போந்திருந்த சீவல்லவரை அழைப்பித்து, இவர்க்கு வேண்டுவனவும் செய்து, இவரையும் இவருடனே வேண்டும் படைகளும், ஊராத்துறை,

வல்லிகாமம், மட்டிவாழ் உள்ளிட்ட ஊர்களிலே புகவிட்டு, புலைச்சேரி மாதோட்டம் உள்ளிட்ட ஊர்களும் அழித்து, ஈழத்தானினவாய் இவ்வூர்களில் நின்ற ஆனைகளும் கைக் கொண்டு, ஈழ மண்டலத்தில் கீழ்மேல் இருவதின் காத மேற்படவும் தென் வடல் முப்பதின் காத மேற்படவும் அழித்து, இத் துறையில் இவன் மனிச்சராயிருந்தாரில் கொல்வாரையும் கொன்று, பிடிப்பாரையும் பிடித்து, இவர்களையும், சரக்காய்க் கைக் கொண்டனவும், பிடித்த ஆனைகளும், அழைப்பித்து, இவன் நமக்குக் காட்டி ஈழ மண்டலத்துக் காரியம் எல்லாப் படியாலும் இவன் அழியச் செய்வித்த படிக்கும், பாண்டியனுற் குலசேகரர் தமக்கு முன்பு செய்த நன்மைகளும் பாராதே, ஈழத்தானுடனே சம்பந்தம் பண்ணவும், இவனும் இவரும் கூட நின்று சோழ ராஜ்யத்திற்கு விரோத மாயிருப்பன செய்யவும் கடவதாக நிச்சயித்து, இதுக்கு உறுப்பாகப் பாண்டி நாட்டு ஏழகத்தாரிலும் மறச் சாமந்தரிலும் நமக்குச் சேர்வு பட்டு நின்று பணி செய்கிற இராஜராஜக் கற்குடி மாராயனும், இராஜ கம்பீர அஞ்சுகோட்டை நாடாழ்வானும் உள்ளிட்டாரை அத்துறைகளில் நின்றும் வெள்ளாற்றுக்கு வடகரையிலே போதப் பண்ணி, இலங்காபுரி தண்ட நாயக்கனும் ஜெகத்ரயத் தண்ட நாயக்கனும் உள்ளிட்டார் தலைகளாய் மதுரை வாசலிற் தைச்ச தலைகளும் வாங்கிப் போகடுவித்து, எல்லாத் தீமைகளும் செய்யக் கடவதாகக் கருதிச் செய்கிற படியும் ஈழத்தான் குலசேகரருடன் கூட நின்று உதவி செய்கை சூட்டி, இவருடன் சார்வு பட்டு நின்ருர்க்கு வரக்காட்டின ஓலைகளும் வஸ்த்துக்களும் வழியிலே இவை [எல்லாப்] படியாலும் சோழ இராஜ்யத்துக்கு விரோதமாய் இருக்கையாலே, இவனை அங்கு நின்றும் போக்கி, முன்பே பிடித்து, மதுரைக்குக் காரணவரான பராக்கிரம பாண்டியர் மகனுர் வீரபாண்டிய தேவரை மதுரை [கோயிலில் இடக்கடவதாக இவனுக்கு நாம் சொல்லி, பெலங்களையும் வேண்டுவாரையும் போக விடுவனவும் விட்டு] இவ் வத்துவாலும் குதிரையாலும் வேண்டுவனவையிற்றில் நமக்குச் சொல்லிச் செய்ய வேண்டுவனவும் செய்வித்து, அல்லாதன இவனே மிகுதிப்பட நேர்ந்தும் செய்து, சுருக்கி[ன]நாளைக்குள்ளே மதுரை..(னைப் போக்கி, வீரபாண்டிய தேவரை மதுரையில் புக விட்டபடிக்கும், இவனுக்கு அருமொழி) தேவ வளநாட்டு, நென்மலி வளநாட்டு, இராஜராஜன் பழையனூரிலே பதிற்று வேலி நிலம் பன்னிரண்டாவது முதல் அந்தராயம், பாட்டம் உட்பட இறையிலியாக இட்டு, இப்படி உடையார் திருவாலங்காடுடைய .... மூவேந்தவேளான். இவை நீல கங்கரையன் எழுத்து. இவை தீபத்தரையன் எழுத்து. இவை கனகராஜன் எழுத்து. இவை மலையப்பிராஜன் எழுத்து. இவை மழவ .....து. இவை வில்லவராயன் எழுத்து.

[திருவாலங்காடு, வடாரணியேச்சுரர் ஆலயத்தில், நடராஜர் கோயில் பிராகாரத்தில் உள்ளது.]

கொங்குச் சோழமன்னன் விக்கிரம சோழ தேவன்

(கி.பி. 12-ஆம் நூற்றுண்டு)

ஸ்வஸ்தி சிரீ திரு மயிலாப்பில் வடுவிலா வணிகந் வெண்ணைக் கூத்தநம்பி குன்றநான இராஜாதிராஜந் சிரவணச் சிலேட்டியும், புளியந் வயிரனும், ஆடவலான் உலகநும், இத்தூம்பும் இக் கழநியும் திருத்தித் தூம்புமிட்டோம், சிரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு பதின்மூன்ரு விது.

[சேலம் ஜில்லா, ஊத்தங்கரைத் தாலுகா, கம்பயநல்லூரில் உள்ளது.]

வீர பாண்டிய தேவன்

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இரவிவன்மர், திரிபுவனச்சக்கரவர்த்திகள், ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு, யாண்டு 4-வதுக்கு எதிராம் ஆண்டு, ஜயங்கொண்ட சோழ மண்டலத்து, வெண்குன்றக் கோட்டத்து, பெருநகர் நாட்டுப் பெருநகர் ஆளுடையார் பிரம்மீச்வரமுடைய நாயனுர் கோயிலில், இவ்வூர் இருப்பைபாக் கிழான் தாழி காக்கு நாயகன் ஏறி அருளப் பண்ணின முதலியார் காக்கு நாயகர்க்கு காக்கு நாயகன் விசையன் செம்பியதரையன் வைத்த சந்தி விளக்கு ஆறு. இவ் விளக்கு ஆறுக்கும் இக் கோயில் சிவப்பிராமணரோம் முன்னுள் சேற்றுப் பேட்டில் திரிநுந்தா விளக்குப்பட்டி நாற்பத் தெண்ணுயிரவன் ஒற்றியாக வைத்து வாங்கின பணம் நாற்பதுக்குப் பலிசையேற்றிப் பணம் அறுபதும், உபையம் ஆகக் கைக் கொண்டு, இவ்விளக்கு ஆறும் சந்திராதித்த வரை இடக் கடவோம், இக்கோயில் சிவப்பிராமண ரோம். இது பன்மாஹேச்வர ரக்ஷை.

[செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சிபுரம் தாலுகா, பெருநகரில் உள்ளது.]

கொங்குநாட்டுச் சோழர்கள் ஆட்சிக்காலம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் நரையனூர் நாட்டு உடைய பிராட்டிச் சதுர்வேதி மங்கலத்து உடையார் அழகிய சொக்கனுர் கோயில் தேவர்கன்மி கோயில் கணக்கற்கு, இந் நாயினுற்கு இவ்வூரில் தேவதானம் வீர சோழன் மன்னறையில் நிலம் மூன்று மாக் காணியும், அமர புயங்கர மன்னறையில் பூலுவர், காத்தூண்காணியில் நிலம் இரண்டு மாவும், இன்னுயிநார் திருக் காமக் கோட்டநாச்சியாற்கு தேவதானமான அமர பயங்கரன் மன்னறை

யில் நிலம் ஆறு மாவும், வீர சோழன் மன்னறையில் விஷவிருத்தி நிலம் ஒருமாவும், குமணராயன் நிலம் அரை மா அரைக் காணியும், குலோத் துங்க சோழன் மன்னறையில் நகுலராதித்த தேவன் நிலம் அரைமாவும்,— ஆக நிலம் பதின்மூன்று மா காணி அரைக் காணியும், முன்பு ஐய்யன் சுந்தர பாண்டிய தேவர் நாளில் செய்த படியே, இந்நிலத்துக்கு ஒட்டச்சு, ஆராய்ச்சி, எலவை, உகவை, காணிக்கை, வாசல் விநியோகம், வேண்டுகோள், மண்டல முதன்மைப்பேறு, முதல் எழுத்து விநியோகம், கடமை, அந்தராயம் உள்பட்டவை எப்பேற்பட்டவையும் முதலடங்க(ல்) கழித்து, இரண்டாவதுமுதல் இறையிலியாக தந்தோம். இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாககொண்டு, சந்திராதித்தவரை செல்வதாக கல்லி லும் செம்பிலும் வெட்டிக் கொள்க. இவை குமணூருடையான் எழுத்து. யாண்டு 3-வது, நாள் 5. வாணுதராயன் எழுத்து. உ

[கோயமுத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலுகா, கொழிஞ்சிவாடி கிராமத்தில் உள்ளது.]

குலோத்துங்கன்-III

(கி.பி. 1204)

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள், மதிரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 27-வது — பாண்டிஞடு கொண்டாஞன சம்புவராயனும், செங்கேணி அத்திமல்லன் வீராண்டான் எதிரிலி சோழச் சம்புவராயநும், அத்திமல்லன் பல்லவாண்டாஞன குலோத் துங்க சோழச் சம்புவராயனும், கிளியூர் மலையமாந் பெரியுடையாஞன இராசராசச் சேதிராயனும், கிளியூர் மலையமான் ஆகார சூரநான இராச கம்பீரச் சேதிராயனும், குந்தன் நம்பூரலான யிராசராச நீல கங்கரையனும், அம்மை அப்பன் மருந்தன்ஞன இராசராச மூவேந் தரையனும், பாவம் தீர்த்தாஞன இராஜேந்திர சோழச் சம்புவராயன் மலையன் நரசிங்க பந்மஞன கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வானும், சோமன் திருவண்ணுமலை உடையாஞன குலோத்துங்க சோழ பிருதிவி கங்கனும், சோமன் வரந்தருவாஞன் சோளேந்திர சிங்கப் பிருதிவி கங்கனும், இவ் அனைவோம், எங்களில் இசைந்து, கல்வெட்டின படி யாவது: நாங்கள் ஒரு காலமும் இராஜ காரியத்துக்குத் தப்பாமே நின்று சேதிராய தேவர் அருளிச் செய்தபடியே பணி செய்யக் கட வோமாகவும். இப்படி செய்யும் இடத்து, மகதை நாடாழ்வாஞன வாணகோவரையனும், குலோத்துங்க சோழ வாண கோவரையனும், பக்கல் ஆளாதல் ஓலையாதல் போகக்காட்டுதல், உறவு பண்ணுதல், அறுதி செய்தல், செய்யக்கடவோ மல்லாதோமாகவும். இவர்கள் அநுதாரத்துள்ளார் பக்கல் ஆளாதல் ஓலையாதல் போகக் காட்டிச் சிலகாரியம் பார்த்தல், உறவு அறுதி செய்தல், செய்யக்கடவோ

மல்லாதோ மாகவும். இவர்களும் இவர்கள் அநுதாரத்துள்ளார் பக்கலி நின்றும் ஆளாதல், ஓலையாதல், வந்ததுண்டாகில், தேவர் சீபாதத்திலே போகக் காட்டக் கடவோமாகவும். இராசராச சேதிராயர் பக்கல் இராசகாரியத்துக்கும், சேதிராயதேவர் கருமம் எங்களில் ஒருவர் காரியத்துக்கு விரோதமாயிருப்பன சொல்லி, ஆளாதல், ஓலையாதல், போகவிடக்கடவோ மல்லாதோமாகவும். இவரும் அனுதாரத்துள்ளார் பாடு நின்றும் இப்படி சொல்லி வந்தது உண்டாகில், இப்படிக்கு இசை யாதே சேதிராய தேவர்.....ட்டக்கடவோமகாவும். நாங்கள் அனைவரும் எங்களில் ஒருகாலமும் ஒருவர் வேறுபடாதே, இராஜ காரியத்துக்குத் தப்பாதே நின்று, சேதிராய தேவர் அருளிச் செய்தபடி பணி செய்யக் கடவோமாகவும். எங்களில் ஒருவர் வேறு பட நின்று, இராஜ காரியத்துக்கும், சேதிராய தேவர் காரியத்துக்கும், எங்கள் காரியத்துக்கும், விரோத மாகச் சில காரியம் பார்த்தாருண்டாகில்.....ய்து தேவரும் நாங்களும் இவனை அறச் செய்யக் கடவோமாகவும். எங்களிலே ஒருவரை வாண கோவரையனுதல், குலோத்துங்க சோழ வாணகோவரையனுதல் இராசராச காடவராயனுதல், வினை செய்தாருண்டாகில், படையும் குதிரையும் முதலுக்கு நேராகக் கொண்டு....தக் கடவோமாகவும். இப்படிக்கு ஒரு காலமும் தப்பாதே நின்று செய்யக் கடவோமாகவும். இப்படி செய்திலோமாகில், வாண கோவரையனுக்கு கடைகா..பறை யற்க்கு செருப்பு எடுக்கிறோம். இப்படி சம்மதித்து உடையார் திரு வண்ணமலை உடைய நாயனுர் கோயிலிலே கல்வெட்டிக் குடுத்தோம், இவ் அனைவோம்.

[வட ஆர்க்காடு ஜில்லா, திருவண்ணமலைக் கோயிலில் உள்ளது.]

குலோத்துங்கன்-III

(கி.பி. 1214)

ஸ்வஸ்தி ஸ்ரீ திருவாய்க் கேழ்வி முன்னுக: திரிபுவன சக்கர வர்த்திகள், மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளி, வீராபிஷேகமும் விசையாபிஷேகமும் பண்ணி அருளின, திரிபுவன வீர தேவர்க்கு யாண்டு 37 ஆவது — மிதுன நாயற்று பூர்வ பக்ஷத்து நவமியும், நாயற்றுக்கிழமையும், பெற்ற அத்தத்து நாள் — ஜெயங் கொண்ட சோழமண்டலத்து, காலியூர்க் கோட்டத்து, தனியூர் உத்தரமேலூரான ஸ்ரீ ராஜேந்திர சோழ சதுர்வேதி மங்கலத்து மஹா சபையோம் எழுத்து: நம் ஊர் உடையார் திருப்புலிவனமுடைய நாயனுற் குத் திருநுந்தா விளக்கு எரிப்பதாக எங்கள் பூர்வ புருஷர்கள் பலர் பக்கலும் பொன் கொண்டு, பொலியூட்டுக்கு எரிக்கக் கடவார்களாக, முன்னுளில் கல்வெட்டின திரு (நுந்தா) விளக்குகள் ராஜ மார்த்தாண்டனுகிய அபரா ஜித விக்கிரம வந்மற்கு யாண்டு 14-ஆவது நாளில், சூரிய கிரகணத்திந்

நாள், ராஜ மார்த்தாண்டனுகிய அபராஜித விக்கிரம வந்மர் பக்கல் கைக்கொண்ட பொன் நிறை செம்பொன் நூற்றுக் கழஞ்சுக்கு எரிக்கக் கடவதாக, உடையார் திருப்புலிவனமுடையார் கோயிலிலும் நடுவிற் கோயிலிலும் கல் வெட்டின நிலே விளக்கு நாலும் — நடுவிற் கோயிலிற் கல்வெட்டினபடி கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னர தேவற்கு பதினெட்டாவது, இக் கோட்டத்து, விற்பேடு நாட்டு வெள்ஷாற்று வங்கிப் புறத்து உருத்திர வேழம்பைச் சிறுநங்கைச் சானிக்காக வங்கிப் புறத்துத் திண்டவி க்ரமவித்தனுகிய சண்டேச்வர தாசன் பக்கல், இவளுக்கு தன்மமாகக் கொண்ட பொன் பன்னிரு கழஞ்சரைக்கும் எரிக்கக் கடவோமான திருநந்தா விளக்கு ஒன்றும்—மதுரை கொண்ட கோப் பரகேசரி வன்மர்க்கு, பதின்மூன்ருவது நாளில், நம் ஊர்ப் பாணியாத்து வாமதேவ க்ரமவித்தர் வைத்த திருநந்தா விளக்குக்கு, இவர் பங்குவழி வடபிடாகை மருதத்தூரில் மேல் பக்கத்து தலேப்பாடகத்து விட்ட நிலம் விற்றுக் கொண்டு எரிக்கக் கடவதாகக் கல்வெட்டின திருநன்தா விளக்கு இரண்டும் — இத் தேவற்குப் பதிநாலாவது நாளில், இவ் ஊர் ஆளும் கணத்தாருள் முடியுறை ..க நந்தி க்ரமவித்த பட்ட ஸோமயாஜியார் பக்கல் கை கொண்ட பொன் பன்னிரு கழஞ்சரைக்கு எரிக்கக் கடவோமாகக் கல்வெட்டின திருநந்தா விளக்கு ஒன்றும் — ஆகத் திருநந்தா விளக்கு எட்டும் கல்வெட்டுப்படியே எரிக்க வேணும் என்று, இத் திரிபுவன வீர தேவற்கு முப்பத்தேழாவது நாளிலே, ஸ்ரீ மாஹேச்வரர் சொன்னமையில், இத் திருநந்தா விளக்கு எட்டும் எங்கள் பூர்வ புருஷர்கள் முன்பு கல் வெட்டின படியே எங்களுக்கும் எரிக்க வேண்டுகையால், இவ் விளக்குக்கு நித்தத் தேவை யிறுக்க முடியாமையில், ஸ்ரீ மாஹேச்வரரையும் ஸ்தானத்தாரையும் இசைவு கொண்டு, முன்பு எழுந்தருளுவித்து, வருகிற சித்திரைத் திருநாள் திருக் கொடித் திருநாளும் திருவோணத் திருநாளும் முன்பு எழுந்தருளி வருகிறபடியே எழுந்தருளுவிக்கக் கடவோமாகவும். திருக்கா..கொ....த்திருநாள் முதல் எழுந்தருளி வருகிற நாள் ஏழுடனே இத் திருநந்தா விளக்கு எட்டுக்கும் மூன்று நாள் ஏற்றிப் பத்து நாளாக முப்பத்தெட்டாவது சித்திரைத் திருநாள் முதல் எழுந்தருளுவிக்கக் கடவோமாகவும். இம் மூன்று நாளுக்கும் அமுதுபடி சாத்துப்படி, போக த்ரவிய, வ்யஞ்ஜனம் உள்ளிட்ட தேவைகளும் முன்பு எழுந்தருளி வருகிற நாள் ஒபாதி நாளொன்றுக்கு சென்று வந்தபடியே, ஏற்றின நாளுக்கும் குறைவிறுத்து எழுந்தருளுவிக்கக் கடவோமாகவும். இப்படி முட்டாமே சந்திராதித்யர் உள்ளதனேக் காலமும் எழுந்தருளுவிக்கக் கடவோமாக, சிலாலேகை பண்ணிக்குடுத்தோம், உத்தர மேலூரான ராஜேந்திர சோழ சதுர்வேதி மங்கலத்து மஹா சபையோம். ஸபையுள் இருந்து பெருமக்கள் பணிக்க எழுதினேன் இவ்வூர் மத்யஸ்தன் செக்குறி நீறணிந்தான் சதிரன் ராஜேந்திர சோழப் பிரியனேன் எழுத்து. சபையுள் இருந்து பெருமக்கள் பணிக்க எழுதினேன்

மத்யஸ்தன் செக்குறி திருக்காளத்தி உடையான் வரந்தருவானான உத்தர மேலூருடையான் எழுத்து.

[செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சிபுரம் தாலுகா, திருப்புலிவனத்தில் உள்ளது.]

மாறவர்மன் சுந்தர பாண்டியன்-I

(கி.பி. 1228)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ மாறபன்மரான திரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 13ஆவது—மகர நாயற்று, பூர்வ பக்ஷத்து த்ரயோதசியும் திங்கள் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள், கோனுடான கடல் அடையாது இலங்கை கொண்ட சோழ வள நாட்டு நாடும், நகரமும், கிராமங்களும், வன்னியர்களும், படைப் பற்றுக்களும் உடையார், திருநலக்குன்றமுடைய நாயனார் கோயிலில், காங்கேயராயன் திருமண்டபத்திலே, இவ்வனைவரோமும் நிறைவுற நிறைந்து குறைவறக் கூடி, எங்களில் அமைந்து, உடையார் திருநலக் குன்றமுடைய நாயனார் கோயிலில் ஸ்ரீருத்திர, ஸ்ரீமாகேச்வரர், ஸ்ரீ காரியம், தேவகன்மி, கோயில் கணக்கர், இவ்வனைவற்கும் பிடிபாட்டுச் சாதனம் பண்ணிக் குடுத்த பரிசாவது: உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயிலின் திருப்பணிக்கு இக் கோனாடு இருபத்து நாற்காத வட்டகையும் ஊர்வழிதோறும் காணியாளரா யிருக்கும் பிராமணர்,...... செட்டிகள், வெள்ளாளர், இப்படி உள்ள பேருக்கு ஆண்டொன்றுக்கு, பேர் ஒன்றுக்கு, பணம் அரையும்; இளமையாற்கு, பேர் ஒன்றுக்கு, பணம் காலும்; படை பற்றுக்களுக்கு, பேர் ஒன்றுக்கு பணம் காலும்; தண்டிகளுக்கும், மற்றும் குடி மக்களுக்கும், பேர் ஒன்றுக்கு பணம் அரைக்காலும்; பறையர், பள்ளர், பேர் ஒன்றுக்கு பணம் அரைக்காலும்; இப்படியால் வந்த பணம் ஊர் வழி தோறும் வந்து, தானத்தாரும், வயிராகியும், வரும் ஆண்டுகள்தோறும் தண்டித் திருப்பணி செய்விப்பார்களாகவும். தண்டுமிடத்துக் குடாத பேரிடத்தில் வெண்கலமெடுத்தும், மண்கலம் தக[ர்]த்தும் கொள்ளக் கடவார்களாகவும். இதுக்கு வேறு ஒரு ஏற்றச் சுருக்கம் சொன்னாருண் டாகில், நாட்டுத்துரோகி, சிவத்துரோகி பட்டதும் பட்டு, இத்தால் வந்த கேடு உள்ளதும் இவனுக்கே பரமாவதாகவும். இப்படி எங்களில் இசைந்து உடையார் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயில் திருப் பணிக்கு இப்படி பிடிபாட்டுச் சாதனம் பண்ணி, இப்படி சந்திராதித்த வரை செல்வதாகத் திருமலையிலே கல்வெட்டிக் குடுத்தோம், நாடும், நகரங்களும், கிராமங்களும், வன்னியர்களும், படைப்பற்றுக்களும், இவ் அனைவரோம்.

[திருச்சிராப்பள்ளி ஜில்லா, குடுமியாமலை சிகாநாதஸ்வாமி கோயி லில் உள்ளது.]

வேணாட்டரசன் வீர ரவிகேரள வர்மன்

(கி.பி. 1229)

ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் 403-ம் ஆண்டை மகர ஞாயிற்று 15 சென்ற வியாழம் ஓணம் இந்நாளால், இராஜராஜத் தென்னாட்டுக் குறுநாட்டு, கடிகை பட்டினத்து உடையார் கறைகண்டேச்வரத்து மஹாதேவற்க்கு ஸ்ரீ பலிக்கு மியறைப் பறம்பின் மேல் ஒற்றி மாவினால் மூன்று சலாகையும் அச்சு பதினாறும், மேற்படி நிலத்தின் மேலடி கொண்ட விக்கிரமன் அரங்கன் கடங்கொண்ட அச்சு இரண்டேகாலும், தட்டான் பறம்பில் ஒற்றி மாவினால் அச்சு ஐந்தும், நெடுங்கண் ஆதிச்சன் கோதை புருசோத்தமன் உடையானால் ஒற்றி கொண்ட ஒற்றி மாவினால் அச்சு ஏழும், கூட அச்சு முப்பதேகால். இவ் அச்சு முப்பதேய்காலும் கொண்டு, உடையார் கறைகண்டேச்சுரமுடைய நாயனார் கோயிலிற் ஸ்ரீபலிச் செலவுக்கு நாளொன்றுக்குச் செல்லும் அரிசி அறுநாழிக்கும் நெல் குறுணி எழுநாழியும் நித்த நிமந்தம் சந்திராதித்தியற் செல்வதாக கற்பிச்சான், அயிரப்புழை ஆதிச்சன் கோதையான சிவஞான தேவன். இப்படி கடிகைபட்டினத்து ஊர் பணிக்க, இக் கல்வெட்டு எழுதினேன், இக் கோயிலின் தச்சாசாரியன் சூரியன் பொற்கொடியான இரவி வர்ம்ம ஆசாரியன் எழுத்து.

[கன்னியாகுமரி ஜில்லா, பத்மநாபபுரம் டிவிஷன், இரணியல் தாலுகா, கடிகைபட்டினம், உட்கிடை திருநயினார்குறிச்சியில் உள்ள கறைக்கண்டீச்சுரம் கோயிலில் உள்ளது.]

ராஜராஜன்-III

(கி.பி. 1231-32)

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 15-வதில் எதிராமாண்டு, ப்ரதாபச் சக்கரவர்த்தி ஹொய்சண ஸ்ரீ வீரநரசிம்மதேவன் சோழ சக்கரவர்த்தியைக் கோப் பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்தே பிடித்து கொடுவந்து, தன்படையை இட்டு ராஜ்யத்தை அழித்து, தேவாலயங்களும் விஷ்ணஸ்தானங்களும் அழிகையாலே, இப்படி தேவன் கேட்டருளி, '"சோழ மண்டல ப்ரதிஷ்டாசாரியன்" என்னும் கீர்த்தி நிலைநிறுத்தி அல்லது இக் காளம் ஊதுவதில்லை' என்று தோரசமுத்திரத்தினின்றும் எடுத்து வந்து, மக[ர] ராஜ்ய நிர்ம்மூலமாடி, இவனையும் இவன் பெண்டு பண்டாரமும் கைக்கொடு, பாச்சூரிலே விட்டு, 'கோப் பெருஞ்சிங்கன் தேசமும் அழித்து, சோழச்சக்கரவர்த்தியையும் எழுந்தருளிவித்துக் கொடு' என்று தேவன் திருவுள்ளமாய் ஏவ, விடைகொண்டு எழுந்த ஸ்வஸ்தி ஸ்ரீமனு மஹாப்ரதானி பரம விச்வாஸி தண்டிநகோபன் ஜகதொப்பகண்டன் அப்பணதண்ணாக்

கனும், சமுத்திரகோப்பய தண்ணுக்கனும், கோப் பெருஞ்சிங்கன் இருந்த எள்ளேரியும் கல்லியூர்மூலேயும் சோழகோன் இருந்த தொழுதகையூரும் அழித்து, வேந்தன் முதலிகளில் வீரகங்க நாடாழ்வான் சீனத்தரையன், ஈழத்து ராஜா பராக்கிரம பாஹு உள்ளிட்ட முதலி 4 பேரையும்... கொன்று, இவர்கள் குதிரையும் கை கொண்டு கொள்ளிச் சோழ கோன் குதிரைகளையும் கைக்கொண்டு, பொன்னம்பலதேவனையும் கும்பிட்டு எடுத்துவந்து, தொண்டைமானல்லூர் உள்ளிட தமுக்குர்களும் அழித்து, அழி ... ககாடும் வெட்டிவித்து, திருப்பாதிரிப்புலியூரிலே விட்டு இருந்து, திருவதிகை திருவெக்கரை உள்ளிட்ட ஊர்களும் அழித்து, வாரணவாசி ஆற்றுக்குத் தெற்கு, சேந்தமங்கலத்துக்கும் (கு) கிழக்கு, கடலிலே அழிஊர்களும் குடிக்கால்களும் சுட்டும் அழித்தும், பெண்டுகளை பிடித்தும், கொள்ளை கொண்டும், சேந்தமங்கலத்திலே எடுத்துவிடப் போகிற அளவிலே, கோப் பெருஞ்சிங்கன் குலைந்து, சோழச் சக்கரவத்தியை எழுந்தருளிவிக்கக் கடவதாக தேவனுக்கு விண்ணப்பம் செய, இவர் விட்டு நமக்கும் ஆள் வரக்காட்டுகையாலே, சோழச் சக்கரவர்த்தியை எழுந்தருளிவித்துக் கொடு போந்து ராஜ்யத்தே புகவிட்டது. உ

[தென் ஆர்க்காடு ஜில்லா, கூடலூர் தாலுகா திருவகீந்திரபுரம் தேவநாயகப் பெருமாள் கோயிலில் உள்ளது.]

மாறவர்மன் சுந்தர பாண்டியன்-I

(கி.பி. 1232)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ மாறபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் சோணா..ங்கு இரண்டும் கொண்டு, முடிகொண்ட சோழபுரத்து வீராபி ஷேகமும் விசையாபிஷேகமும் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு பதின்ஐஞ்சாவதின் எதிராமாண்டு, கடலடையாது இலங்கை கொண்ட சோழவளநாட்டு, தென்கோனாட்டு, அண்ணவாயிற் கூற்றத்து, விசலூர் ஊராயிசைந்த ஊரோம்—'ஆழ்வாந்தேவன் கடமை யும் அச்சுமிருதே போகையால், இவன் கடமைக்கு நாதகராய் இருப்பா ருண்டாகில், நாட்டுதல், இவன் கடமை நீங்கள் தருதல் செய்யவேணும்' என்று ஊராரை் கோமுற்றமால் தநிக்க—'இவறுக்கு நாதிகளாய் முன் னின்றுஇறுப்பார் இல்லாமையாலே,இவன்கடவ அச்சுவரிக்காசுக்குஇவன் நிலம் குளப்பட்டி விலைக்குற விற்க கொள்வீருளிரோ?' என்று ஒருகாலா வதும் இருகாலாவதும் முக்காலாவதும் முற்கூற, இம்மொழி கேட்டு, மலை மண்டலத்துக் குளத்தூர் சங்கரன் கண்டனை கலி கடிந்த பாண்டியதேவர், 'உடையார் திருநலக்குன்ற முடைய நாயனாற்கு, நான் கண்ட திருவேட் டைத் தோப்புக்கு, நான் கண்ட திருவீதியில், இரண்டு பாகத்துக்கும் எல் லைக் கல்லாகவும், திருவிளக்கெரிக்கைக்கும், இவ்விரண்டுக்குமாக நாட்டின

நல்லறு மதிலும், திருமாற்கழித்திருநாளுக்கும், திருமாசித்திருநாளுக்கும் திருப்பங்கூனித்திருநாளுக்கும், இம் மூன்று திருநாளும் திருவேட்டைத் தோப்புக்குத் திருவீதியில் எழுந்தருளும் நாள், திருவேட்டை எழுந்தருளும் நாள் மூன்று. இத் திருநாள் மூன்றிலும் சுந்தர நாயகர் எழுந்தருளும் நாள் ஆக நாள் ஆறுக்கும், திருவீதிக்குத் திருவிளக்கெண்ணைக்கும், இத் திருநாள் மூன்றிலும் சுந்தர நாயகர் திருத்தோப்பில் லெழுந்தருளும் நாள் மூன்றுக்கும் திருவமுதுபடிக்கும், கறியமுது விஞ்சனங்களுக்குமாகக் கொள்வேன்' என்று பிற்கூற, முற்கூறிய நிலத்துக்கு பெருநான் கெல்லையாவது: கீழ்பாற்கு எல்லை, அரிந்தவன் வெளருமதவன் ஒன்றுயிரம் உள்ளிட்டாரும் உடைய குடிக்காட்டுக்குப் போகிற வாய்க்காலுக்கும் மேற்படியார்கள் ஆந்திக்கும் மேற்கும்; தென்பாற்கு எல்லை, தில்லை செமக வன்னிச் செய்க்கும் வேளாந்கேரளந் அவைய நந்திக்கும் பெரியான் பிள்ளாந் கோதை குன்றன் கயத்துக்கு வடக்கும்; மேல்பாற்கு எல்லை, எட்டி வேளான் தேவடி வயக்கலுக்கும் காடந் பாக்காரி தேவடி வயக்கலுக்கு கிழக்கும்; வடபாற்கெல்லை, உய்யவந்தாந் எட்டி குளப்பட்டிக்கும் அம்பணவற்குன்றன் தேவடி களப்பட்டிக்கு தெற்கும்;—ஆக இசைந்த பெருநான்கு எல்லைக்குள் அகப்பட்ட உண்ணிலம் . ஒழிவின்றியே விற்றுக்குடுத்துக் கொண்ட எம்மில் இசைந்த விலைப் பொருள் அன்றாடு நற்புதுக்காசு ஆயிரத்தஞ் ஞூறும், இந் நிலத்தால் உள்ள கடமை, அந்தராயம், மற்றும் எப்பேற் பட்டிதும் ஊர் ஈந்த வரி ஊராய் ஏற்ட்டு இறுப்போமாகவும். இதுக்கு விலையாக கொண்ட காசு ஐஞ்ஞூறும் ஆக காசு இரண்டாயிரத்திலும்— இச்செய்க்கு விலையான காசு ஆயிரத்தஞ்ஞூற்றில் கோனுட்டுக்கோன் முன்னெற்..ல் காசு ஆயிரம், இச் செய்யுடையவன் கடமைக்கு வாங்கி இட்ட காசு ஐஞ்ஞூறும், ஊராய் இந்நிலத்துக்கு கடமை ஊராயிறுப் போமாக விலை கொண்ட காசு ஐஞ்ஞூறும், ஆகக் காசு 2000. இக் காசு இரண்டாயிரமும் விலை-ஆவணக் களத்தே காட்டேற்றி கைச்செலப் பொருளறக் கொண்டு விலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம், சங்கரன் கண்டனுன கலி கடிந்த பாண்டிய தேவற்கு விசலூர் ஊராய் இசைந்த ஊரோம். இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும். இதுவல்லது வேறு பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை காணவும் காட்டவுங் கடவதல்ல தாகவும். இச்செய்க்கு மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் உயற்பின உயர்த்தவும் குழிப்பிலிகுழிக்கவும் மற்றும் கிழவனுன பாங்காளப்பெறுவனுகவும். இந் நிலத்துக்குப் பெரிய குழியிலே பொது முறையில் மூன்று நாழிகை நீர் விடுவோமாகவும். இப்படி சம்மதித்து விற்று விலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம், விசலூர் ஊராய் இசைந்த ஊரோம், சங்கரன் கண்டனுன கலி கடிந்த பாண்டிய தேவற்கு.

[திருச்சிராப்பள்ளி ஜில்லா, குடுமியாமலை, சிகாநாதசுவாமி கோயிலில் உள்ளது.]

மாறவர்மன் சுந்தர பாண்டியன்-I

(கி.பி. 1236)

பூ மருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்து இருப்ப, நா மருவிய கலைமடந்தையும் சயமடந்தையும் நலம் சிறப்ப, கோள் ஆர்ந்த சினப் புலியும் கொடுஞ் சிலையும் குலைந்து ஒளிப்ப, வாள் ஆர்ந்த பொற்கிரிமேல் வரிக் கயல்கள் விளையாட, இருங் கடல் வலயத்து இனிது அறம் பெருக, கருங் கலி கடிந்து செங்கோல் நடப்ப, ஒரு குடை நிழலில் இரு நிலம் குளிர, மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க, நால்வகை வேதமும் நவின்று உடன் வளர, ஐவகை வேள்வியும் செய்வினை இயற்ற, அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ, எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ, எண் திசை அளவும் சக்கரம் செல்ல — கொங்கணர், கலிங்கர் கோசலர், மாளுவர், சிங்களர், தெலிங்கர், கின்னரர், குச்சரர், வில்லவர், மாகதர், விக்கலர், செம்பியர், பல்லவர், முதலிய பார்த்திவர் எல்லாம், 'உறைவிடம் அருள்' என ஒருவர் முன் ஒருவர், முறை முறை, கடவ தம் திறை கொணர்ந்து இறைஞ்ச; இலங்கு ஒளி மணிமுடி இந்திரன் பூட்டிய பொலங் கதிர் ஆரம் மார்பினில் பொலிய; பனி மலர்த் தாமரைத் திசை முகன் படைத்த மனுநெறி தழைப்ப, மணி முடி சூடி, — பொன்னி சூழ் நாட்டில் புலியாணை போய் அகல, கன்னி சூழ் நாட்டில் கய லாணை கைவளர, வெஞ் சின இவுளியும் வேழமும் பரப்பி, தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்தி, காவியும் நீலமும் நின்று கவின் இழப்ப, ஆவியும் ஆறும் அணி நீர் நலன் அழித்து, கூடமும் மாமதிலும் கோபுரமும் ஆடரங்கும் [மாடமும்] மாளிகையும் மண்டபமும் பல இடித்து, தொழுது வந்து அடையா நிருபர்தம் தோகையர் அழுத கண்ணீர் ஆறு பரப்பி, கழுதை கொண்டு உழுது, கவடி வித்தி, செம்பியனைச் சினம் இரியப் பொருது சுரம் புக ஓட்டி, பைம் பொன் மணி முடி பறித்துப் பாணனுக்குக் கொடுத்தருளி, பாடு அருஞ் சிறப்பின் பருதி வான் தோயும் ஆடகப் புரிசை ஆயிரத் தளியில், சேரா வளவன் அபிஷேக மண்டபத்து, வீராபிஷேகம் பண்ணி, புகழ் விரித்து, நாளும் பரராசர் நாமத்தலை பிடுங்கி மீளும் தறுகண் மதயானை மேற்கொண்டு, நீராழி வையம் முழுதும் பொது விழித்த கூர்ஆழியும் செய்ய தோளுமே கொண்டு போய், ஐயப் படாத அரு மறை தேர் அந்தணர் வாழ் தெய்வப் புலியூர் திருவெல்லையுட் புக்கு, பொன்னம்பலம் பொலிய ஆடுவார் பூவையுடன் மன்னும் திருமேனி கண்டு, மனம் களிப்ப, கோல மலர்மேல் அயனும், குளிர் துழாய் மாலும், அறியா மலர்ச் சேவடி வணங்கி, வாங்கு சிறை அன்னம் துயில் ஒழிய வண்டு எழுப்பும் பூங் கமல வாவி சூழ் பொன்னம ராவதியில், ஒத்து உலகம் தாங்கும் உயர் மேருவைக் கொணர்ந்து வைத்தனைய சோதி மணி மண்டபத்து இருந்து, 'சோலை மலி பழனச் சோணாடும், தான் இழந்த மாலை முடியும் தர வருக' என்று அழைப்ப, — மானம் நிலை குலைய வாளகிரிக்கு அப்புறத்துப் போன வளவன்

உரிமையொடும் புகுந்து, பெற்ற புதல்வனை, 'நின் பேர்' என்று முன் காட்டி, வெற்றி அரியணைக்கீழ் வீழ்ந்து தொழுது இரப்ப, தான் ஓடி முன் நிகழ்ந்த வெம்மை எலாம் கையகல, தானேதகம்பண்ணி, 'தண் தார் முடியுடனே, விட்ட அகலிடம் தன் மாவேளுக்குத் திரிய விட்டபடிக்கு என்றும் இது பிடிபாடாக!' என, பொங்கு திரை ஞாலத்துப் பூபாலர் தோள் விளங்கும் செங்கயல் கொண்டு ஊன்றும் திரு முகமும், பண்டு இழந்த 'சோளபதி' என்னும் நாமமும், தொல் நகரும், மீள வழங்கி, விடை கொடுத்து விட்டருளி, 'ஓதக் கடற் பாரில் வேந்தர் கிளைக்கு உற்ற ஏதங்கள் தீர்க்கும் கடவுள் இவன்!' என்று எண்ணி, 'தளையுற்று அடையாதார் தண்டலிடையில் கிளையுற்றன முழுதும் கேட்டருள்!' என்று ஏத்தி வணங்கும் வடகொங்கன்னை சிறையும் மீட்டு, கணங்கொளரு திருத்தோள் மாலை கழித்து, எல்லாம் வழங்கி யருளிய பின், ஒருநாள், மற்றூர் முழங்கு முரசக் கடல்தானை முன் புகுந்து, தென் கொங்கன் வந்திட்ட தெண்டனுக்கு மின் பொங்கச் சாத்திய ஆபரணம் தக்கது என வழங்கி, ஆரூத பெரு நண்பின் அவன் சிறையும் மீட்டு, திருமால் இரு மருங்கும் சந்திர சூரியர் சேவிப்ப, செங்கண் கரு மால் களிற்றில் வரு முக்கட் கடவுள் என, மாட மதுரையில் தான் போந்து, புவனியிலே கூடவிரு கொங்கரையும் கும்பீடு கொண்டு, அவர்க் குத் தொல்லைப் புவிக்கும் இணங்காமல் தாம் சொன்ன எல்லைக்குள் நிற்ப இசைந்திட்டு, 'மேற்கொண்டு இவனது செய்யாதொழியில், யமனுக்கு வெவ்வேல் விருந்தாக்குதும் உமை' என விட்டருளி, 'முன்னம் நமக்கு முடி வழங்கும் சேவடிக் கீழ் இன்னம் வழிபடுவம்' என்னுது, பின்னொரு நாள், 'காவல், எனது புனல் நாடு!' எனும் களியால் ஏவல் எதிர் செல்லாது இறை மறுத்த சென்னி விடு தூசியும் பேரணியும் ஒக்கச் சுருண்டு ஒதுங்கி, வாசியும் வாரணமும் தேரும் அடற் கருவக் காலாளும் வெட்டுண்ண, கண் இரண்டு மயங்கக் கைக் கொண்டு, வேலா வலயத்து வீழ்ந்தவன் போய் மெய்ந் நடுங்க, அம் பருந்தும் ஆர்த்த கடல் மண்டலிகர் உடல் வெம் பருந்து உண்ண, அக் களத்தில் ஆனையின் வெண் மருப்பும் கையும் குறைத்து, 'எங்கள் மீனவர்க்குப் பாகுடம் ஆம்!' என்று தம் வீரர் கொள, 'மாக முகடு தடவி மழை தடுக்கும் காக நெடும் பந்தர்க் கவந்தத்தின் ஆடலும் கூகையின் பாடலும், கண்டும் கேட்டும், களித்த ஓடல் கருங் கூந்தல் வெள் எயிற்றுச் செவ் வாய்ப் பெரிய சூலக்க வல்லி பலி கொள்க!' என வாழ்த்தி, வென்று வகையின் மிகை ஒழிய, வேந்து அலறக் கொன்று, சினம் தணியாக் கொற்ற நெடு வாள் உயற்கு, செங் குருதி நிறத்து ஒளி செய்து, தெவ் புலத்து, வெண் கவடி வித்தி, வீரம் உழுதெடுத்து, பாடும் பரணி தன் பார் வேந்தர் கேட்பிக்க, ஆடும் திருமஞ்சன நீரில் மண் குளிர, ஆங்கு அவன் இணைக்கட்டணத்துக் கற்பு தனக்காணுய் ஒங்கு உரிமைக் குழாம் ஒருங்கு கைக்கொண்டு, மூரி மணிப் பட்டம் கட்டி, முடி சூட்டி, மார்பில் அணைத்து, 'வளவன் முதல் தேவி' என்று பேர் பெற்ற வஞ்சி

முதலாய பெய்வளையார், பொங்கு புனற் கும்பம் முதலாகப் புலவர் புகழ் மங்கலங்கள் எட்டும் மணிக் கைத் தலத்து ஏந்தி, கொடி கொண்ட நெற்றி நிறைத்தக் கோபுரம் சூழ் முடிகொண்ட சோழபுர மண்டபத்துப் புக்கு, திசைதோறும் செம்பொற் செயத் தம்பம் நாட்டி, வாகைக் கதிர் வேல் வட வேந்தர் தம் பாதம் மேகத் தளை அணிய வீரக் கழல் அணிந்து, விளங்கிய மணி அணி வீரசிம்மாசனத்து, வளம் கெழு கவரி இரு மருங்கு அசைப்ப, கடல் என முழங்கும் களி நல் யானை வடபுல வேந்தர் மணிப்புயம் பிரியா இலகு குழை அரிவையர் தொழுது நின்று ஏத்தும் உலக முழுதுடையாரோடும் வீற்றிருந்தருளிய, ஸ்ரீ கோ மாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள், ஸ்ரீ சோணாடு கொண்டு, முடி கொண்ட சோழபுரத்து வீராபிஷேகம் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 20-வது, நாள் 374-னால் — கீழ் வேம்ப நாட்டுத் திருநெல்வேலிக் கோயிற் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப் பீட மழவராயனில் எழுந்தருளியிருந்து, உடையார் திருநெல்வேலியுடையார் கோயிற் பதிபாதமூலப் பட்டுடைப் பஞ்சாசாரிய தேவகன்மிகள் செய்யத் திருவாய் மொழிந்தருளினபடி, 'காலடிச் சங்கரன் அழகிய பெருமாளான மழவராயர் பூஜித்து, இக் கோயிலில் ஆச்ரய லிங்கமாக எழுந்தருளுவித்த சொக்கனார்க்கு திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கும், இவர் பிறந்த சதயத்து நாள் விசேஷ பூஜை செய்ய அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டுவனவுக்கும், முள்ளி நாட்டு இராஜராஜ சதுர்வேதி மங்கலத்துப் பிடாகை கயத்தான் குறுச்சியில், கார்ப் பசானம் விளை நிலத்து மண்டல முதன்மைக்கு இவர் பிதாக்கள் அப் பாட்டர் மழவராயர்க்கு ஜீவிதமாய், பின்பு இவற்க்கு மண்டல முதன்மைக்கு ஜீவிதமாய் வருகுற நிலத்து, தலைவருசை நிலத்திலே, இவ்வூர் கடமை இறுக்கும் கோலால் ஒன்றரை வேலி நிலம், இருவதாவதின் எதிராம் ஆண்டு முதல், அந்தராயமும் உழுதான்குடியும் உட்பட, தேவதான இறையிலியாய் இருப்பதாக இடப்பட வேணும்' என்று இவர் நமக்குச் சொன்னமையில், இத் தேவற்கு திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கும், இவர் பிறந்த சதயத்து நாள் விசேஷ பூஜை செய்ய அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டுவனவுக்கும், முள்ளிநாட்டு ராஜராஜ சதுர்வேதி மங்கலத்து, பிடாகை கயத்தான் குறுச்சியில், கார்ப் பசானம் விளையும் நிலத்து மண்டல முதன்மைக்கு, இவர் பிதாக்கள் அப் பாட்டர் மழவராயர்க்கு ஜீவிதமாய், பின்பு இவர்க்கு மண்டல முதன்மைக்கு ஜீவிதமாய் வருகிற நிலத்து, தலை வருசை நிலத்திலே, இவ்வூர் கடமை இறுக்கும் கோலால் ஒன்றரை வேலி நிலம், இவ் ஆண்டு முதல் அந்தராயமும் உழுதான் குடியும் உட்பட தேவதான இறையிலியாய் இறுப்பதாக இட்டு, வரியிலார் எழுத்திட்ட உள்வரியும் நம் ஓலையும் தரச் சொன்னோம். 'கைக் கொண்டு திருப்படி மாற்றுள்ளிட்ட நிவந்தங்கள் செல்லப் பண்ணுக!' என்றும், 'இப்படி சந்திராதித்தவற் செல்வதாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டுவித்துக்

கொள்க!' என்று திருவாய்மொழிந்தருளின படிக்கு, இவை திருமல்லி நாட்டு தடங் கண்ணிச் சிற்றூருடையான் சோறன் உய்ய நின்ருடுவானுன குருகுலத்தரசன் எழுத்து. இவை மிழலைக் கூற்றத்து கீழ் கூற்று வெட்சியூரான மும்முடி சோழ நல்லூர் வேடநூருடையான் அரையன் சீவல்லவனுன மாதவராஜன் எழுத்து. இவை செவ்விருக்கை நாட்டுச் சக்கரபாணி நல்லூர் அரையன் விரதமுடிச்சானுன பல்லவராஜன் எழுத்து.

[திருநெல்வேலி ஜில்லா, திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ளது.]

ஜடாவர்மன் வீர பாண்டியன்-II

(கி.பி. 1266)

உ ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீர பாண்டிய தேவற்கு யாண்டு 13-வது, மேஷ நாயற்று, பூர்வபக்ஷத்து த்ரயோ தசியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற அத்தத்து நாள், — கோனுடான கடல் அடையாது இலங்கை கொண்ட சோழ வளநாட்டுக் குன்று சூழ் நாட்டு, உடையார் திருநலக்குன்றமுடைய நாயனுர் கோவில் ஆதி சண்டேச்வர தேவர் அருளால், — இந் நாட்டு [நாட்டு] நாட்டோமும், இக் கோயில் ஸ்ரீ மாஹேச்வரக் கண்காணி செய்வார்கள், தேவர்கன்மி, கோயிற் கணக்கர், கைக்கோளரோமும், இக் கோயில் தேவரடியாரில் து[ர்]க்கையாண்டார் மகள் நாச்சியாற்கு நாங்கள் நில விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது : இந் நாயநார் திருக்கற்றளி ஜீ[ர்]ணிக்கையில் ஜீ[ர்]ணோத்தாரம் பண்ண வேறு உடலில்லாமையால், இதுக்கு உடலாக ந[ாட்டுத்தெ]தவதான இந் நாயனுர் திருநாமத்துக் காணி இலுப்பைக்குடிக் குளமும் வயலிலும் விற்பதான நிலத்துக்குப் பெரு நான்கு எல்லையாவது: கீழ்பாற்கு எல்லை அதியமங்கலத்துக் குளத்து நீர்கோவைக்கும் காவதுகுறிச்சி குளத்து நீர் கோவைக்கு மேற்கும், தென்பாற்கு எல்லை ஓடைப்பள்ளத்து பள்ளவயக்கலுக்கும் திருவேகம்ப முடையான் வயக்கலுக்கும் தென்வயக்கலுக்கும் வடக்கும், மேல்பாற்கு எல்லை மூவரைய வயலுக்கும் சிறுவ[ய]லுக்கும் மருதங்குடி வயலுக்கும் கிழக்கும், வடபாற்கு எல்லை வலயர் பங்கான எல்லைக்கும் அம்மங்கை நல்லூர் வடகடையில் புதுவூர் எல்லைக்கு நாட்டின திருச்சூலக் கல்லுக்கு தெற்கும், இசைந்த அம்மங்கை நல்லூர் வயலும் குளமும் உட்பட நிலமும் குளமும் தென்பாற்கு எல்லையில் தெற்கில் குளத்துச் சிறு குழுமியில் குன்றன் வயலுக்கு. . . . .ம் கிழக்கு மணல் மூன்று தடியும் ஆக, இப்படியால் வந்த நிலத்திலும் குளத்திலும் முன்னுள் இக்கோயிற் தேவரடியாரில், திருச்செந்துரை பாண்டி திருநோக்கழகியாளுக்கு நாங்கள் சண்டேச்வரப் பெரு விலையாக விற்ற நிலம் மூன்று

மா முந்திரிகையும், வடக்கில் குளத்துப் பிறகரையில் பெரிய செய் உள்ளிட்ட தடி மூன்றும், நிலவிழுக்காட்டுப்படி நீரும் நீக்கி, நின்ற நிலமும் குளமும் விற்றுக்குடுத்துக்கொள்வதான எம்மில் இசைந்த விலைப் பொருள், அன்றுடு நற் புதுக்காசு 73300. இக் காசு எழுவத்து மூவாயிரத்து முன்னூறும் ஆவணக்களரியே காட்டேற்றி, ஆதிசண்டேச்வரதேவர் ஸ்ரீஹஸ்தத்தே ஒடுக்குவித்து கொண்டு, விற்று, விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம், துக்கையாண்டார் மகள் நாச்சியாற்கு கோநாட்டு நாட்டோமும் இக்கோயிற் ஸ்ரீ மாஹேச்வர கண்காணி செய்வார்கள், தேவர்கன்மி, கோயிற் கணக்கர், கைக்கோளரோம். இந் நிலத்துக்குத் திருவாசலால் போந்த கடமை கீழிறை இறுக்கக் கடவதாகவும். இறுக்குமிடத்து, பயிர் பார்த்து முதலான நிலத்துக்கு மாத்தால் பதின் கலமாக வந்த நெல்லும், மாத்தால் பதினஞ்சாக வந்த காசும், சந்திராதித்யவத் உடையார் திருநலக்குன்றமுடைய நாயநாற்கே இறுக்கக்கடவதாகவும். இந் நிலம் திருநாமத்துக் காணியாகையால், அந்தராயம், அதரவிநியோகம், ஆட்தேவை, ஊர்புரவுடன் கூட்டி, திறப்பற்கு இறுக்கக்கடவதல்லதாகவும். இந் நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும். இதுவே பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை யாவதாகவும். இதுவல்லது வேறு பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை காணவும் காட்டவும் கடவதல்லவாகவும். இப்படி சம்மதித்து இக் காசு எழுபத்து மூவாயிரத்து முன்னூற்றுக்கும், இந் நிலமும் நிலத்தால் வந்த குளமும், மேல் நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும், விலைக்குற விற்றுப் பொருளறக் கைக்கொண்டு, விற்று, விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம், துக்கையாண்டார் மகள் நாச்சியாற்கு, கோனுட்டு நாட்டோமும் இக் கோயிற் ஸ்ரீ மாஹேச்வரக் கண்காணிசெய்வார்கள், தேவர்கன்மி, கோயிற் கணக்கர், கைக்கோளரோம். இக்காசு எழுபத்து மூவாயிரத்து முன்னூற்றுக்கும், இந்த இலுப்பைக்குடி வயலில், இந் நிலமும் நிலத்தால் வந்த குளமும், மேல் நோக்கிய மரமும் கீ(ழ்)நோக்கிய கிணறும், மற்றும் எப்பேற்பட்டனவும் விலை கலம் தன்மதானத்துக்கு உரித்தாவதாகவும். உயற்பெனில் உய[ர்]த்தவும், குழிப்பெனில் குழிப்பவும், மற்றும் எப்பேற்பட்ட தாநாதந விக்ரயங்களுக்கு உரித்தாவதாகவும். இப்படி சம்மதித்து, விலைக்குற விற்று, பொருளறக் கொண்டு, விற்று, விலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம். கோநாட்டு கடலடையாது இலங்கை கொண்ட சோழவளநாட்டுக் குன்று சூழ் நாட்டு உடையார் திருநலக்குன்றமுடைய நாயனுர் கோயிற் தேவரடியாரில், துக்கையாண்டார் மகள் நாச்சியாற்கு இந்நாட்டு நாட்டோமும் இக் கோயிற் ஸ்ரீமாஹேச்வரக் கண்காணிசெய்வார்கள், தேவர்கன்மி, கோயிற்க் கணக்கர், கைக்கோளரோமும். இப்படிக்கு அண்ணல் வாயில் வளவதரையன் எழுத்து. இப்படிக்கு இவை தென்னவதரையன் எழுத்து. இவை வயலகத்து செம்பியதரையன் எழுத்து. இப்படிக்கு சிகா

நல்லூர் செம்பியன் பல்லவதரையன் எழுத்து. இப்படிக்கு அண்ணல் வாயிற் குருகுலத்தரையன் எழுத்து. இவை வளவன் பல்லவதரையன் எழுத்து. இப்படிக்கு புன்னங்குடி பத்தற்கருள்செயுவான் எழுத்து. இவை வடுகன் சேந்தன் எழுத்து. இவை ஒல்லையூர் மங்கலத்து இராச ராச ஒல்லையூர் நாட்டு வேளான் எழுத்து. இப்படிக்கு திருநலக் குன்றத்து அன்பாண்டான் எழுத்து. இவை திருமுனைப்பாடிநம்பி எழுத்து. இவை அற்புதகூத்தப்பட்டன் எழுத்து. இவை குடுக்குந் தியாகி பட்டன் எழுத்து. இவை குலோத்துங்கப் பல்லவ தரையன் எழுத்து. இவை திருநலக்குன்ற மாராயன் சைந்த்ராதன்மையும் இட்டு, இவை இவ்வூர் கணக்கு செருந்திவனப் பெருமாள் எழுத்து. இவை கீழ்த் தணியத்து வீரசோழ மூவேந்தவேளான் எழுத்து. இவை வளவன் பல்லவதரையன் எழுத்து. இவை இராசேந்திர சோழ வேளான் எழுத்து. இவை விஞ்சத்தரையர் சைந்த்ராதன்மைக்கு இவை பெருமாள்ப் பிள்ளை எழுத்து. இப்படிக்கு நம்பியாரூரனுன கங்கை கொண்ட மாராயன் சயிந்த்ராதன்மையும் இட்டு, இவை கோனுட்டு வயிராகி எழுத்து. இவை ஒல்லையூர் மங்கலத்து பிராண நாயகன் எழுத்து. இடையாற்றூர் ஒல்லையூர் நாட்டு வேளான் எழுத்து. இவை குருகுலத்தரையன் அழகியான் எழுத்து. இப்படிக்கு ஆலத்தூர் உறத்தூர்நாட்டு வேளான் எழுத்து. இப்படிக்கு வடுகன் பிள்ளானுன ஆலாலசுந்தர பட்டன் எழுத்து. இப்படிக்குச் செங் கதிர்ச் சோழ மூவேந்த வேளான் எழுத்து. இப்படிக்கு இவை இடங்கொண்டான் எழுத்து. இப்படிக்கு இவை நெல்வேலி மாறன் நம்பி எழுத்து. இப்படிக்கு காரையூர் பிரமாண்டார் எழுத்து. இப்படிக்கு காரையூர் சோழ திவாகர மூவேந்த வேளான் எழுத்து. இப்படிக்கு இக் கோயிற் சைவாசாரியம் திருவேகம்பமுடையான் திருச்சிற்றம்பல பண்டிதன் எழுத்து. இது அண்ண[ல்] வாயில் உதையப்பெருமாள் எழுத்து. இது புன்னங்குடிச் செம்பியதரையன் எழுத்து. இவை வளவதரையன் எழுத்து. இவை பரம்பையூர் நம்பு செய்வான் எழுத்து. இவை இரா[ஜ]ரா[ஜ]புரத்து வல்லநாட்டு வேளான் எழுத்து. இக்கோயிற் சைவசாரியம் நாலாயிர பட்டன் எழுத்து.

[திருச்சிராப்பள்ளி ஜில்லா, குடுமியாமலை, மேலைக்கோயிலில் உள்ளது.]

சம்புவராயன்

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமுகப்படி. சம்புவராயன் ஓலை — விளாப்பாக்கத்து ஊரவரைக் கண்டு விடைத்து, யாண்டு பதனுலாவதுக்கு எதிராம் ஆண்டு முதல், நஞ்செ புஞ்செக் கடமை ஆயம் உள்பட பல நெல் ஆயங் களும், கோமுற்றமுடைய திருப்புதியது நெல்லும், பொன்வரி அரிசி காணமும், புன் செய் உள்பட திருவாசல் வினியோகம், சந்தி விக்கரமப்

பொன், காத்திகைக் காணிக்கை, ஊர்க் கணக்கர் ஆசு, பொதுக்கள் பேர், கடமை, நாட்டு வரி, மகண்மை, வாசல் ஒட்டு, பழநடைக் காணிக்கை, இழற்கடிவரி, இனவாராய்ச்சி, ஏரி மீன் காசு, நாயனர் காணிக்கையும், உள்ப்பட, துக்கைப்பட்டி, பிடாரி பட்டியும் நீக்கி,— இவ் ஊரில் நாயனுற்குப் பங்கு இரண்டும், உகந்தருளப் பண்ணுகிற பெருமாளுக்கு பங்கு இரண்டும், பிராமணர் பேர் ஐம்பத்திரண்டுக்குப் பங்கு ஐம்பத்திரண்டும், ஆகப் பங்கு ஐம்பத்தாறும் — அகர இறையிலியாகவும், துக்கைப்பட்டி பிடாரி பட்டியும் இம் மரியாதி இறையிலியாகவும், இவ் ஊர் நாற்பாற்கு எல்லையும் உள்பட, உதக பூருவமாக, அகர இறைஇலியாகக் குடுத்தோம். இப்படிக்குச் சன்திராதித்தவரை செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டி, அனுபவிப்பதாகச் சொன்னோம். இந் நாள் முதல் இப்படிச் செய்வதே திருவெழுத்து. பண்ட நாயநார் அருளிச் செயல் ஏற்ற பிராமணர் பேர் ஆறுக்குப் பங்கு ஆறுமாகப் பங்கு அறுபத்திரண்டு.உ.

[வட ஆர்க்காடு ஜில்லா, வாலாஜாபேட்டைத் தாலூகா, விளாப்பாக்கம் கோயிலில் உள்ளது.]

திருக்கோளக்குடி

ஸ்வஸ்தி ஸ்ரீ
வம்பு அலர் கொன்றையும் திங்களும் கங்கையும் வாள் அரவும்
தும்பையும் செஞ்சடை வைத்து, உலகு ஏழும் தொழ, வரையின்
கொம்பு உடனுக நடம் நவில் கோளக் குடி அரனுற்கு
அம்பலம் செய்வித்தான் — அழகிய சேமன் அருள் மன்னனே.

[திருக்கோளக்குடி, சுகோள நாத சுவாமி கோயிலில் உள்ளது.]

குலசேகர பாண்டியன்

(கி.பி. 1275)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ மாறுபன்மத் திருபுவநச் சக்கர வர்த்திகள், ஸ்ரீ குலசேகர தேவற்கு, யாண்டு 7, தைய் மாதம் ஆறகளூர் உடையான் மகதேசன், உலகம் காத்த வாணவகோவரையன், உடையார் திருவண்ணுமலே உடைய நாயனுர் பால் ஆடி அருள, சுரவித் திருமேனி வசமே சந்திராதித்த வரையும் ஆடி அருளவிட்ட பசு 254. இது பன் மாஹேச்வர ரக்ஷை.

[வட ஆர்க்காடு ஜில்லா, திருவண்ணுமலேக் கோயிலில் உள்ளது.]

வீர விசுவநாத தேவன்

(கி.பி. 1295)

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸார்வ பௌம சக்கரவர்த்தி ஸ்ரீ பொய்சள வீர விசுவநாத தேவற்கு 2-வது, நாகையன் பள்ளியான காலிங்கராயச்

சதுப்பேதி மங்கலத்து உடையார் தேசி நாயகற்கு, திரு நாமத்துக் காணியாக, புறமலை நாட்டுத் தாமலூர்ப் பற்று பெழைக்கல் நஞ்செய் புன் செய் நாற்பால் எல்லையும், மேல் நோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும், மனையும் மனைப் படப்பையும், இவ் அனைத்து ப்ராப்தியும், விச்வநாத தேவர் திருமேனிக்கும் திருத்தோளுக்கும் வாளுக்கும் நன்றாக வும், நமக்கு நன்றாகவும், உதக பூரணமாக விட்டேன், உத்தம சோழக்க கங்காதராயனேன். இது மாறுமவன் கெங்கை கரையில் குரால் பசுக் கொன்றான் பிரம்ம ஹத்தி கொள்வான். உ.

[சேலம் ஜில்லா, ஊத்தங்கரைத் தாலூகா, கம்பயநல்லூரில் தேசிநாதேச்வரர் கோயிலில் உள்ளது.]

சித்திர மேழிப் பெரிய நாட்டவர்

ஹரி: ஸ்வஸ்தி ஸ்ரீ. ஸ்ரீ பூமிதேவிக்கு மக்களாகி நிகழ, செந்தமிழ் வடகலை தெரிந்து உணர்ந்து, நீதி கேட்டு, நிபுணர் ஆகி, நறு மலர் வாடாத் திருமகள் புதல்வர் எத் திசைக்கும் விளக்கு ஆகி, இன்சொல் லால் இனிது அளித்து, வன்சொல்லால் மறம் கடிந்து, இச் சதுசாகர பரி மண்டலத்து, சந்திராதித்த வரை இனிது ஓங்க, வாதராசன் காற்று அசைப்ப, வருணராசன் நீர் தெளிப்ப, தேவராசன் திசை விளக்க, எத் திசை மகளிரும் இனிது வீற்றிருப்ப, தெங்கும் பலாவும் தேமாஞ் சோலையும், வாழையும் கமுகும் வளர் கொடி முல்லையும், பூவையும் கிள்ளையும் பொலிவொடும் கெழுமி, வாட்டம் இன்றிக் கூட்டம் பெருகி, அறம் வளரக் கலி மெலிய, புகழ் பெருகப் புரை பணிய, திசை அனைத்தும் செவிடுபடாமல், செங்கோலே முன்னாகவும், சித்ர மேழியே தெய்வமாகவும், செம் பொற் பசும்பையே வேலியாகவும், க்ஷமையினொடும் கருணை எய்தி, சமயதன்மம் இனிது நடாத்தி, நிகழா நின்ற, உத்தம நீதி, உயர் பெருங் கீர்த்தி, முத்தமிழ் மாலை முழுவதும் உணர்ந்த சித்திர மேழிப் பெரிய நாட்டோம் வைத்துக் குடுத்த பரிசாவது — மிலாடாகிய ஜனனாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்து திருக்கோவலூர், எழுபத்தொன்பது நாட்டுப் பதினெண் பூமிச் சித்திர மேழி விண்ணகரான திருவிடைகழி நின்றருளின பெருமாள் கோயில் அனுதியாக மேழித் திருத் தோரணமும் ஸ்ரீ பூமி தேவியும் ப்ரதிஷ்டை பண்ணி, முன்பே நம் தர்மமாய்ப் போதுகையில் இந் நாயனாற்க்கு முன்பு நாம் வைத்துக் குடுத்த வைப்பும், சமைப்பும், செடியும், முகமும், சாதனமும், ராஷ்ட்ர க்ஷேத்ரபங்களிலே கைதப்புகையில், முன்பு வைத்துக் குடுத்தபடியே ஆட்டைக்கு ஏருக்கு(ப்) பதக்கு நெல்லும் ஆளுக்குக் குறுணி நெல்லும் வெற்றாள் உட்படப் பெற வைத்துக் குடுத்தோம். எழுப. . . . .

[தென் ஆர்க்காடு ஜில்லா, திருக்கோவலூரில் திருவிக்கிரமப் பெருமாள் கோயிலில் உள்ளது.]

கொங்குச் சோழர் ஆட்சிக்காலம்

ஸ்வஸ்தி ஸ்ரீ கோநேரின்மை கொண்டான். திரிபுவன சிங்க தேவந் நமக்குத் துரோகியாய்ப் போய், அவன் உடைமை நம்முதாநமையில், ஆளுடையார் திருவான்பட்டி ஆளுடையார்க்கு இராசராசந் சந்தியாக, உச்சிச் சந்தி யொரு சந்தி அமுது செய்தருள, அமுதுபடி அரிசி கலத் துக்கும், கறியமுதுள்ளிட்ட விஞ்சனத்துக்கும், பரிசட்டத்துக்கும், திரு மேற்பூச்சுக்கும், பஞ்சதிரையிம் பஞ்ச அமுதம் ஆடியருளுகைக்கும்,—இவை எல்லாத்துக்குமாகப் பேரூர் நாட்டு வெள்ளலூரில் இவனுடைய நிலங்களும், அதிசய சோழ நல்லூரில் இவன் நிலங்களும், புத்தூரில் இவன் நிலமும், கோளூரில் இவன் நிலமும், குறுச்சியில் இவன் நிலமும், மற்றும் பேரூர் நாட்டில் இவன் நிலமான விளைநிலம் உள்ளவை யெல்லாம்—மூன்ருவதின் எதிர் எதிர் மார்கழி மாதத்து, நாலாந் தியதி நாள், ஆளுடையார் திருக் கையிலே நீர்வார்த்துக் குடுத்தோம். இந் நிலங்க ளால் வந்த இறை, புரவு, சித்தாயம், எலவை, யுகவை, நங்கன்மிகள் பேறு, மற்றும் எப்பேற் பட்டனவும் இறுக்கக்கடவதல்லவாக. இப்படிச் சந்திராதித்தவற் செல்வதாக, செம்பிலும் சிலையிலும் வெட்டிக் குடுத் தோம். நந்தமருமல் பாற்படுத்துவது ..... இவை இராசேந்திர சோழப் பிரம மாராயன் எழுத்து. யாண்டு 3வதுக்கு எதிர் எதிர் நாள், **155**. இவை இலாட சிங்கதேவன் எழுத்து. இது பன் மாஹேச்வர ரக்ஷை.

[கோயம்புத்தூர் ஜில்லா, கோயம்புத்தூர்த் தாலூகா, பேரூர்க் கோயிலில் உள்ளது.]

கொங்குச் சோழ மன்னன் வீர ராசேந்திர தேவன்

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநச் சக்கர வர்த்திகள் வீர ராசேந்திர தேவற்கு யாண்டு பந்நிரண்டாவது—பொங்கலூர்க்கா நாட்டு கீரனூரான கொழு மங் கொண்ட சோழநல்லூர் இருக்கும் கோன்களில், குருளன் கூத்தனுன உத்தமக் கோனேன்—இவ்வூர்த் திரு வாகீச்வரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு துளை கழஞ்சு பொன் சிரி பண்டாரத்தில் ஒடுக்கினேன், உத்தமக் கோனேன். இப்பொன் கைக் கொண்டேன், இக் காணி உடைய சிவப் பிராமணன் காசிபன் பாண்டிய தனஞ்சயன் சைவேச்சர முடையானுன சைவ்வ சக்கரவர்த்தியும், பாண்டிய தனஞ்சியீச்வரனுன குலோத்துங்க பட்டனும். சந்திராதித்தயவத் குடம் கொடு கோயில் புகுவார் இவ் விளக்கு எரிப்பராக கல் வெட்டிக் குடுத்தோம். பன் மாஹேச்வர ரக்ஷை.

[மதுரை ஜில்லா, மேலூர்த் தாலூகா, கீரனூரில் உள்ளது.]

பாகன்

ஸ்வஸ்தி ஶ்ரீ

[குலசேகர ஆழ்வார் எழுதியதாகக் கருதப்படும் 'முகுந்தமாலை'யின் ஆருவது சுலோகம்.]

ஸ்வஸ்தி ஶ்ரீ திருச் செல்வம் பெருக. புக்கமான அரிவ[ர்]த் தனபுரத்து நானாதேசி விண்ணகராழ்வார் கோயில் திரு மண்டபமுஞ் செய்து, திருக்கதவும் இட்டு இந்த மண்டபத்துக்கு நின்று எரிகைக்கு நிலை விளக்கு ஒன்றும் இட்டேன்—மலை மண்டலத்து, மகோதயர் பட்டணத்து, ஈராயிரன் சிறியானான சீ குலசேகர நம்பியேன். இது ஶ்ரீ இ-தன்மம் மலைமண்டலத்தான்.

[பர்மா தேசத்தில் பாகன் (Pagan) என்னுமிடத்தில் கிடைத்தது.]

மதுரை ஸுல்தான் ஆட்சிக்காலம்

(கி.பி. 1364)

ஆதி சுரத்தானுக்கு ஸு 732-வது, சித்திரை மீ, 15 தியதி, பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் திங்கட்கிழமையும் பெற்ற பூசத்து நாள், பொன்னமராபதி நாட்டு, இரா[ஜ]சிங்க மங்கலத்து ஊராக இசைந்த ஊரவற்கு — கானநாடான விருதராச பயங்கர வளநாட்டு ஆதனூர் ஊராக இசைந்த ஊரவரோம், பாடிகாவல் ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது : துலுக்கர் கலகமாய், எங்குங் கட்டாளும் பிடியாமல் பரிகரித்து, வேறு ஒருவர் இவ்விடங்களில் சிலை நாருங் கொள்ளாமல் பரிகரித்து, செவ்வலூர் அடித்துக் கொண்டுபோன கன்று காலியும் விடுவித்து தந்து, நாங்கள் இங்கு இருக்குமளவும் சொறு பாக்கும் ஆராய்ந்து, எங்களைப் பரிகரித்துக்கொண்டு போந்தபடியாலே, மேலும் எங்களை இப்படி பரிகரித்துக் கொண்டு போக வேணுமென்கிற இத்தை பற்றி, பாடிகாவல் ப்ரமாணம் பண்ணிக்குடுத்தோம்—இரா[ஜ]சிங்க மங்கலத்து ஊரவற்கு ஆதனூர் ஊராக இசைந்த ஊரவரோம். இப்படி பாடிகாவல் ப்ரமாணம் பண்ணிக்குடுத்த இதுக்கு, ஆண்டு ஒன்றுக்கு பதினைங்கல நெல்லுக் குடுப்போமாகவும், குடுக்குமிடத்து, இந் நெல்லு பதினைங்கலமும், பத்திலாறும் பத்தில் நாலுமாக குடுப்போமாகவும். இப்படி பெறுமளவில் பொன்னமராபதி நாட்டில் போந்த களவும் ஆராய்ந்து குடுத்து, வலியுடன் பாய்ந்து கொண்டு போந்த சோமமும் ஆராய்ந்து தருவார்களாகவும். எங்களையும் பரிகரித்துக் கொள்வார்களாகவும். இப்படி சம்மதித்து, பாடிகாவல் ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம்—இரா[ஜ]சிங்க மங்கலத்து ஊரவர்க்கு ஆதனூர் ஊராக இசைந்த ஊரவரோம். இப்படிக்கு இவை மூவாயிரத்தொருவர்

எழுத்து. இப்படிக்கு இவை உமையொருபாகர் சொக்கனூர் எழுத்து. இப்படிக்கு இவை சுந்தர நாயனூன உலகுடையார் எழுத்து. இப்படிக்கு திருப்பூவணமுடையார் சொன்னவாராலூரான் வில்லவராயர் எழுத்து. இப்படிக்கு சொக்க ஞானசம்பந்தன் பெருமாள் எழுத்து. இப்படிக்கு ஆதித்தன் சூரியதேவன் எழுத்து. இப்படிக்கு இ. . . . . .

[திருச்சிராப்பள்ளி ஜில்லா, திருமெய்யம் தாலூகா, ராங்கியம் பூமீச்வரர் கோயிலில் உள்ளது.]

இராஜநாராயண சம்புவராயர்

(கி.பி. 1342)

ஸ்வஸ்தி ஸ்ரீ இராஜ நாராயண சம்புவராயர்க்கு யாண்டு அஞ்சாவது — திருஒற்றியூர் வியாகரண தானன் திருக்காவணத்து — முதலியார் பிக்ஷாமடத்து முதலியார் திரு முன்பாக—கீழ மடத்து முதலியாரும் சோழ மண்டலத்தில் தனி மாகேச்வரரால் சித்தயாபரண மும் இத்திருக்காவணத்து ஸ்ரீ மகேசுவரரும், ஸ்தானத்தாரும், நாட்டா ரும், வீர சோழ அணுக்கரும், கைக்கோளரும், இருந்து — பதியிலார் தேவரடியார் கோவில் சேவகத்துக்கு இவர்கள் பொருந்த அறுதியிட்ட படிக்கி கல் வெட்டின படிக்கு: முன்னுள் பெருமாள், எம்மண்டலமும் கொண்ட பெருமாள், சுந்தர பாண்டிய தேவர் நாளில் கொத்தப்ப ராயர் ஆன வாணராயர் இவ்வூரிலே அதிகாரமாய் இருந்த நாளில், நாங்கள் அனவரும் பொருந்த நிச்சயித்தபடி, பதியிலார் செத்தும் கெட்டும் போய்ச் சுருக்கமாகையில், இவ்வூர்களுக்கு உதவியாக இஷபத்தளியிலாரை புகுத விடுகயில், தேவரடியார் முன்பு செய்து போந்தனமையான திருவலகு, திருமெழுக்கு, தளிகை, விளக்கு, அமுது படிக்கு அரிசி குத்தளக்கிறயிதுவும் தவிர்த்து, இதுக்கு ஓர் நிமந்த மும் கட்டி, பதியிலார் சந்திக்குனிப்பமிடும் பொழுது, தேவரடியார் நாச்சியார்க்கு சந்திக்குனிப்பமிடவும், நாச்சியார்க்குப் பகலோலகம் இல்லாதிருக்க இதுவும் குடுத்து, திருக்கோயிலுடன் ஓலக்கமாக இருக்க வும் குடுத்து, வெண்சாமரமும் கவரியும் பணிமாருமிடத்து, பெருமாளுக்கு முதலியார்க்கும் பதியிலார் முன்பும் தேவரடியார் இவர்கள் பின்புமாக பணிமாரக் கடவார்களாகவும். தேவரடியார் திருநீற்றுக் காப்பு, புஷ்பதளிகை எடுக்கு மிடங்களில், எல்லாமிடங்களும் எடுக்கவும். இஷவத்தளியிலாரும், அகமார்க்கமும் வரிக்கோலமும் ஆடவும். திருத் தோப்பில் திருஓலக்கத்துக்கு வரிக்கோலம் ஆடக் கடவார்களாகவும். பதியிலார் சொக்கமாடும்பொழுதும், சந்திக்குனிப்பமிடுபொழுதும், இஷபத்தளியிலார் பாடக்கடவார்களாகவும். பதியிலார் பாடும் இடங் களிலும் சிரி பலிக்குப் பாடும்பொழுது, இஷபத் தளியிலார் பாடவும். திருவெண்சாமரம் திருவந்திக் காப்பும் இஷபத்தளியிலார் எடுக்கக்

கடவார்கள் அல்லவாகவும். பதியிலாரும் தேவரடியாரும் சேவிக்கு மிடத்து, சேவுகத் தாழ்வு படாதபடி சேவிக்கக் கடவார்களாகவும். பதியிலார் முன்பு ஆண்டு ஒன்றுக்கு பெறும் நெல்லு முப்பதிங்கலமும் பெறக்கடவார்களாகவும். தேவரடியார்க்குப் பொழுதுப்படியே பேர் ஒன்றுக்கு நாழி சோறு பெறக்கடவார்களாகவும். இப்படிக்குச் சேவுகத் தாழ்வு படாமல் சேவிக்கவும். இந்த திட்டப்படி அழியச் செய்தாருண்டாகில், தம்பிரானுர் ஆணை மறுத்தார் பட்டதும், சிவதுரோகிகள் பட்டதுவும், இன துரோகிகள் நாட்டு துரோகிகள் சமய துரோகிகள் பட்டதுவும், பட்டு — இப்படிக்கு இதுவே சாக்ஷி பத்திரமும், இதுவே கொடையும், இதுவே கோவில் கச்சமும், இதுவே கை ஓலையும், வாய் முட்டுமாக கொண்டு, கை முறுத்து கொள்ளக் கடவதாகவும் சம்மதித்து, இசைவு முறி இட்டோம் — பதியிலாரும், வீர சோழ அணுக்கரும், தேவரடியாரும், திருக்காவணத்து கைக்கோளரும், இவ் அனைவரோம்.உ.

[செங்கற்பட்டு ஜில்லா, திரு ஒற்றியூரில் உள்ளது.]

திருப்புத்தூர்

(கி.பி. 1387)

ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று ஒன்பதின்மேல் செல்லா நின்ற பிரபவ வருஷத்து, மேஷ ஞாயிற்று இரண்டாம் தியதியும், பூர்வ பக்ஷத்து நவமியும், பிரகஸ்பதி வாரமும், பெற்ற பூசத்து நாள், கேரள சிங்க வளநாட்டு பிரம்மதேயம் திருப்புத்தூர் உடையார் திருத்தளியாண்ட நாயினுர் கோயிலில் ஸ்ரீ ருத்ர, ஸ்ரீ மாகேச்வர, ஸ்ரீ கார்யஞ் செய்வார்களும், மடாபத்தியம் செய்வானும், முப்பது வட்டத்து சிவப்பிராமணரும், தானத்துக்கு அமைந்த தானத்தாரும், ஆக இவ் அனைவோமும், இக்கோயிற் கணக்கு பிரம்மபிரியனுக்கும், இந் நாட்டு மட்டியூரான நிருபசேகரச் சதுர்வேதி மங்கலத்து சொக்க நாராயணன் கரியமாணிக்காழ்வானுக்கும், அதளையூர் நாட்டு தேனுற்றுப் போக்குச் சிறுவயலுடையான் வேண்ட வளந்தான் ஆயப் பிள்ளைக்கும், ஆக, இம் மூவற்கும் கணக்கெழுத்துக் காணியாட்சி விலை பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது : கணக்கன் குலாலன் அம்பலத்தாடுவானுன ஆயிரத் தெழுநூற்று மூவேந்த வேளான் தனக்கு கிராமத்தில் மனையும் முதலெழுத்தும் முதல் வழக்கமும் இல்லையாயிருக்க, [இடுததானறிந்த தாக] சிவத்துரோகமாக காணுமல் களவினுல் ஆயிரத்தெழுநூற்று தட்டானை ஆட்பிடித்து, கற்தச்சன் அலைவாயுகந்தானைக் கொண்டு, தன்னுதென்று கல் வெட்டுவிக்கையில், இப்படி செய்த இந்த சிவத் துரோகம் வெளிப்பட்டு, அம்பலத்தாடுவான் ஓடிப் போகையில், தட்டானையும் கற்தச்சனையும் கைக்கொண்டு, கண்மாளர் கையிலே காட்டிக் குடுத்து, கண்மாளரும் இவர்களை அழியச் செய்து, தானத்துக்குப்

பொருந்த பிராயச்சித்தம் பண்ணிவிடுகையாலும், இந்தச் சிவத்துரோகியான அம்பலத்தாடுவான் முன்னில்லாமல் ஓடிப் போகையாலும், கோயிற் கணக்கெழுத்துக் காணியாட்சியில் பிரம்மபிரியன் காணியாட்சி ஒன்று பாதி நீக்கி, இவனேபாதி ஒன்று பாதிக்கும் விலை நிச்சயித்த ஆடுர் பணம் முந்நூறு. இதில் தேவர் விசையாலய தேவர்க்குக் கற்பூரம் முதலாக குடுத்த ஆடுர் பணம் இருநூறு. ஸ்ரீ பண்டாரத்துக்கு முதலான பற்றின ஆடுர் பணம் நூறு. ஆக ஆடுர் பணம் முந்நூறு. இப் பணம் முன்னூற்றுக்கும் கணக்கெழுத்துக் காணியாட்சியும் சுதந்தரங்கள் எப்பேற்பட்டனவும் சந்திராதித்யவது செல்ல, விற்று, விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம், உடையார் திருத்தளியாண்ட நாயினர் கோயிலில் ஸ்ரீ ருத்திர, ஸ்ரீ மாஹேச்வர, ஸ்ரீ கார்யஞ் செய்வார்களும், மாடாபத்தியஞ் செய்வானும், முப்பது வட்டத்து சிவப்பிராமணரும், தானத்துக்கமைந்த தானத்தாரும், ஆக இவ்வோமும் — பிரம்மபிரியனுக்கும், கரிய மாணிக்காழ்வானுக்கும், ஆயப் பிள்ளைக்கும், ஆக இம் மூவற்கும்.

[இராமநாதபுரம் ஜில்லா, திருப்புத்தூரில் உள்ளது.]

கலிங்க தேசத்துக் கங்கவமிசத்து மன்னன் வீர நரஸிம்ஹ தேவன்

(கி.பி. 1396)

ஸ்வஸ்தி ஸ்ரீ வீர நாரஸிம்மதேவற்கு யாண்டு 22-வது — கார்த்திகை மாசத்து, க்ருஷ்ண சப்தமி ரவி வாரமுமான அன்று, ஸ்ரீ கீ[ர்]த்தி வாசத்தில் சித்தேச்வர மடத்தில், (த்)தபராஜ முனிகள் துர்க்கா பட்டர்க்கு, இம்மடத்து வாக்ர மாராவில் பூமி 12-வட்டி பெரிய நரஸிம்ஹ தேவன் ஏகாதச ருத்ர ப்ரீத்யர்த்தமாக மாகேச்வர போஜனம் பண்ணிவிக்கக் குடுத்த பூமி பணியமாக வைத்துத் தநிசு வா[ங்]கின மாடை 148-பு இம்மாடை 148-வும் குடாதே சிவலோகப்பிராப்தி பண்ணின விடத்து, இம்மடம்(த்) தபச்சக்கரவர்த்திகளுக்கு ஆன விடத்து, இவருக்கும் துர்க்காபட்டர்க்கும் ராசி மைத்ர மாகையில், இவர் கைய்யில் தாராபூர்வமாக இம் மாடை 148-வும் இழந்து, இவர் மாமநாராந உத்தரேசுவர நாயக்கர் பக்கல் தனசு வாங்கின மாடை 10-வும், நெல் 30-பொட்டியும், தாமே ஏற்ட்டுக் கொண்டு, இவர் கைய்யிலே நீர் வார்த்து குடுத்து, இது வீர நாரஸிம்ஹ தேவர்க்கு ஆயுராரோக்கிய ஐச்வர்யார்த்தமாக மூன்று மண்டலத்திலே பிறந்து, மடா மடத்து சம்பிரதாயமாய், ஆசாரவான்களான தபஸ்விகள் சிக்ஷை பண்ணக்கடவது. இதுக்கு சாக்ஷி ஆதித்ய சந்திரா வனிலா இத்யாதி.

[ஒரிஸா ராஜ்யத்தில் உள்ள புவனேச்வரத்தில் கிடைத்தது.]

கொங்குச் சோழர் ஆட்சிக்காலம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான், தென் கொங்கில் கண்மாளர்க்கு, தங்களுக்கு பதினெஞ்சாவது ஆடி மாதம் முதல், நன்மை தின்மைக்கு இரட்டைச் சங்கும் ஊதி, பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும், தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்கு பாதரக்ஷை கோத்துக் கொள்ளவும், தங்கள் வீடுகளுக்கு சாந்திட்டுக் கொள்ளவும் சொன்னோம். இப்படிக்கு நம் ஓலை பிடிபாடாகக் கொண்டு, சந்திராதித்தவரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டும் இடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க. இவை விழுப்பாத ராயந் எழுத்து. யாண்டு 15, நாள் 129. இவை கலிங்க ராயந் எழுத்து. உ.

[கோயமுத்தூர் ஜில்லா, கோயமுத்தூர்த் தாலூகா, பேரூர்க் கோயிலில் உள்ளது.]

கோனேரி(ன்)மை கொண்டான்

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவத்திகள் கோனேரிமை கொண்டான் பொன்னமராவதி நாட்டார்க்கு, ஆற்காடு கிழார் திருவெண்காடுடையாரான வாணுதராயர் பொன்னமராபதியில் வைத்த தண்ணீர் பந்தலுக்கு, இப் பற்றில் விராத்தலை மூன்றாவது தை மாத முதல் முதலடங்க இறையிலியாக விட்டு, இவ்வூர்க்கு நான்கு எல்லைக்கு உட்பட்ட நத்தமும், நத்தப்பாடும், நஞ்செய், புன்செய்க்கும் செய்க்கடமை, மாவடை, மரடை, குளவடை, ஆயம், உட்பட பல கடமைகளும், முன்பிலாண்டுகளும் இறுக்கும் முதல்களுக்கு உபாதி, வட்டம், தெற்றிலக்கை, கடைக்கூட்டு இலக்கை, விடைப்பேர் பேறு, பஞ்சுபீலி, சந்திவிக்ரஹப் பேறு, வாசல் வினியோகம், ஓலை எழுத்து வினியோகம், இலேச்சனை வினியோகம் நித்தப் பச்சை, காத்திகப் பச்சை, எடுத்துக்காட்டும் பச்சை, எண்ணெப் பந்தம், வீட்டுத் தேவை, ஆட்தேவை, மதிட்தேவை, தச்சுத்தேவை, கொற்தேவை, ஆனைச்சாலை, குதிரைப்பந்தித் தேவை, அரிசிகாணத் தேவை, ஆள்வரி, மனைவரி, ஏர்வரி, இனவரி, இடைவரி, தறி இறை, செக்கிறை, தட்டொலி, தட்டார்ப்பாட்டம், ஊசிவாசி, உட்பட அனைத்து உபாதிகளும், வரிகளும் உட்பட்ட, முதல் முதலடங்க இறையிலியாக, தங்கள் நாட்டுக்கு நிற்செயிப்பான முதலிலே, வரியிலார் கணக்கிலும் கழிக்கச் சொன்னோம். இப்படிக்கு சந்திராதித்யர்வரை செல்வதாகச் செம்பிலும் சிலையிலும் வெட்டி அனுபவித்துப் போதும்படி பண்ணுக. இத் தன்மம் சந்திராதித்தர் வரையாக நாட்டார் ரக்ஷிக்கவும் பார்க்க. இவை ஒக்கூருடையான் எழுத்து. யாண்டு மூணாவது நாள் நூற்றெண்பத்தைஞ்சு. இவை வில்லவராயர் எழுத்து. ஆண்டொன்

றுக்குத் திருமெய்ப் பூச்சுக்குப் பதினெட்டுப் பணமும், இத் தண்ணீர்ப் பந்தலில் சென்ற திசை வென்ற பிள்ளையார்க்குத் திருவிளக்கெண்ணைக்கு ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு பணமும் தொந்தோம். ஆண்டிராபதி . . . லே சந்திராதித்யர் வரையும் பெற்று உள்ளிலும் பந்தலிலும் திருமலையிலும் கல்லுவெட் . . . .

[திருச்சிராப்பள்ளி ஜில்லா, திருமெய்யம் தாலூகா, பொன்னமராபதி சோளேச்வரர் கோயிலில் உள்ளது.]

விஜயராய மஹாராயர்

(கி.பி. 1446)

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹா மண்டலேச்வரன், ஹரி இராய விபாடன், பாஷைக்குத் தப்புவராய கண்டன், மூவராய கண்டன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான், சதுர் சமுத்திராதிபதி, கெச வேட்டைக் கண்டருளிய, ஸ்ரீ வீர பிரதாப விஜயராய மஹாராயன் பிருதிவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1368 — இதின்மேல் செல்லா நின்ற க்ஷய ஸம்வத்ஸரத்து, துலா நாயற்று, பூர்வ பக்ஷத்து வெள்ளிக் கிழமையும் தசமியும் பெற்ற அவிட்டத்து நாள் — வழுதிலம்பட்டு உசாவடி நாட்டு, காணித் தரும தொண்டமானும், மகாராயர் கச்சிராயரும் கூடியிருந்து, ராயர் செய்த பிரமாணத்துக்கு நாகரச உடையார் நிருப படிக்கு, இனவரி இடங் கை வரி கழித்து, கல்லு வெட்டுவித்தபடி: இந்த இராச்சியத்தில் வலங்கை இடங்கை இரண்டு வகையில் பல குடிகளையும் பிரதான தளமான மந்திரங்கள் தோறும் காணிக்கை கொண்டு, இத்தாலே குடிகள் உள்ளத்தும் நலங்கி, பிற ராச்சியமே ஓடிப் போய், இத்தாலே தேவஸ்தானங்களும் பூஜை புனர்க்காரம் திருநாளும் குலைந்து, இராச்சியம் விசரதியும் ஆய், மனித்தர் உள்ளத்தும் செத்து நலங்கினபடியினாலே — இராயர் திருவுள்ளம் பற்றி அருளி, 'வலங்கையில் இடங்கையில் உண்டான குடிகளுக்கும் காணிக்கை கொள்ளக் கடவதில்லை' என்று அண்ணப்ப உடையார்க்கு இராயர் தம் திருவுள்ளம் பற்றி அருளின அளவில் — இந்த இனவரியும் இடங்கை வரியும் கழித்து, அண்ணப்ப உடையார் சிலசில இடங்களுக்கு கல்லு வெட்டுவித்தும், சிலசில இடங்களுக்கு கல்லு வெட்டாதபடியால், இந்தச் செய்திகள் நாகரச உடையாருக்கு விண்ணப்பஞ் செய்தபடிஆலே, இம்மரியாதிக்கு நாகரச உடையார் நிருபம் தருகையில், இந்நாள் முதலுக்கு வலங்கை இடங்கையில் பல குடிகளுக்கும் இனவரி இடங்கை வரி என்றும் கொள்ளக்கடவது அல்ல ஆகவும். இதுக்கு இராசகரத்துக்கு உட்குடுத்துக்கலை [வவிச்சிரித்துவ] சைவத்துரோக, இராச துரோக, நாட்டு துரோக, இனத் துரோக பட்டதும் பட்டு, கங்கைக் கரையில் கபிலை வதை பண்ணின பாவத்திலே

போகக் கடவார்களாகவும். [நாகரசன் எழுத்து. பொன்னம்பலன் எழுத்து]. கொங்கராயர் எழுத்து. கரும ஊர் காங்கையர் எழுத்து. இராய விபாட கொங்கராயர் எழுத்து. கரும ஊர் சேதிராயர் எழுத்து. இராய விபாட காங்கையர் எழுத்து. குலசேகர காங்கையர் எழுத்து. வீரபாண்டிய காங்கையர் எழுத்து. திருக்கோவலூர்ப் பற்றுக் கருணாகர நம்பி எழுத்து. காங்கைய எழுத்து. திரு அண்ணாமலை காங்கயன் எழுத்து. களப்பாளர் எழுத்து. [கரண சோமநாதன் எழுத்து. சிதணன் யெழுத்து. தேவரசன் எழுத்து]. இரண்டாற்றுக்கு நடு உடைய நாட்டார் எழுத்து.

[தென் ஆர்க்காடு ஜில்லா, திருக்கோவலூர்த் தாலூகா, கீழையூர் வீரட்டானேசுவரர் கோயிலில் உள்ளது.]

அரிகேஸரி பராக்கிரம பாண்டியன்

(கி.பி. 1452)

சுபமஸ்து. பூமிசை வனிதை மார்பினில் பொலிய, நாமிசை கலைமகள் நலனுற விளங்க, புயவரைமீது சயமகள் புணர, கயலிணை உலகின் கண்ணெனத் திகழ, சந்திர குலத்து வந்து அவதரித்து, முந்தையோர் தவத்தின் முளை என வளர்ந்து, தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து, மன்பதை புரக்க மணி முடி புனைந்து, சங்கர சரண பங்கயஞ் சூடி, செங்கோல் ஓச்சி, வெண்குடை நிழற்றி, வான வாரியும் மன்னருள் வாரியும் தான வாரியும் தப்பாது அளித்து, மறக்களை பறித்து, நல் அறப் பயிர் விளைத்து, சிங்கையில் அனுரையில், இராசையில் செண்பையில், விந்தையில், அறந்தையில், முதலையில், வீரையில், வைப்பாற் ெ. . . . ன்னரை வென்கண்டு, எப்பால் திசையும் இசை விளக்கு ஏற்றி, பதினெண் . . . . . கம்போற்ற, பதினெண் பாஷைப் பார்த்திபர் அனைவரும் திறையும் சின்னமும் முறை முறை குணர்ந்து, குறை பல இரந்து குரைகழல் இறைஞ்ச, அவரவர் வேண்டியது அவரவர்க்கு அருளி, அந்தணர் அனேகர் செந்தழல் ஓம்ப, விந்தை முதல் அகரம் ஐந்திடத்து இயற்றி, சிவநெறி ஓங்கச் சிவார்ச்சனை புரிந்து, மருதூர் அரற்கு மண்டபம் அமைத்து, முன் ஒருதூர் மூங்கிலுள் புக்கு இருந்த சிற்பரர் தம்மைத் திருவத்தசாமத்துப் பொற்கலத்து அமுது பொலிவித்தருளி,— சண்பக வனத்துச் சங்கரர்தமக்கு மண்டபம் அமைத்து, மணி முடிசூட்டி, விழா அணி நடாத்தி, விரைப்புனல் ஆடல் வழாவகை நடாத்த நின் மன்னருள்தன்னால், 'வற்றா வருவும் வற்றி, வற்கடம் உற்ற இக்காலத்து உறுபுனல் நல்கு' என வேண்டியப் பொழுதே வேறிடத்து இன்றி, சேண் தரு புனலில் செழும் புனல் ஆட்டி, — மின் கால் வேணி விச்வநாதர்க்குத் தென்காசிப் பெருங் கோயில் செய்து, நல் ஆகம வழி நைமித்திகமுடன் எல்லாப் பூசையும் எக் கோயிலினும், பொருள் முதல் அனைத்தும்

புரை அற நடாத்தி, திருமலி செம்பொற் சிங்கா தனமிசை உலகம் முழுதும் உடையாருடனே, இலகு கருணை இரண்டு உருவென்ன அம்மையும் அப்பனுமாய் அனைத்து உயிர்க்கும் இம்மைப் பயனும், மறுமைக்கு உறுதியும், மேம்பட நல்கி வீற்றிருந்தருளிய ஸ்ரீ அரி . . . . தேவரான பராக்ரம பாண்டிய தேவற்கு, யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது . . . . ற்று இருபத்தொன்றும் தியதியும் பூர்ணையும் வெள்ளிக் கிழமையும் பெற்ற சோதி நாள் — தென்வாரி நாட்டு சித்ர நதி உத்தர தீரத்தில், தக்ஷிண காசியிலே, உடையார் விச்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி ஸ்தூபி பர்யந்தமுந் திருப்பணி செய்து — உடையார் விச்வநாதனையும் ப்ரதிஷ்டித்து — அர்த்த மண்டபம், இடை நாழிகை, மஹாமண்டபம், ஸோபாநம், இவையுந் திருப்பணி செய்து — திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாக உள்ள திருவுடம்பு களும் ஏறி அருளப்பண்ணுவித்து, ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து, மேல் உடையார் விச்வநாதன் பூஜைக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருமாலை, திருப்பரிவட்டம், திருவிளக்கு, உட்பட்ட பல நித்ய நியமங் களுக்கும், பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும், முன்னுள் இரண்டா வதின் எதிர் இருபத்து மூன்றுவது — முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட பற்றுகளில், தென்வாரி நாட்டுத் தென்காசிக்குப் பெரு நான்கு எல்கையாவது: கீழ் எல்கை, புலியூற் பற்றான காராண்குளத்தில் நீர் நக்கலுக்கும் பரிம்புக்கும் புலியூர் அகரம்பற்றில் புஞ்சைக்கும் நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறத்தில் மேல் எல்கைக்கு மேற்கும்; தென் எல்கை, சித்ர நதிக்கு வடக்கு; மேல் எல்கை குன்றக்குடிப் பரிம்புக்குக் கிழக்கும்; வ . . . . சென்னுய்ப் பொற்றைக்கும் குத்துக்கல்லுக்கும் தெற் கும், ஆக இன்னுன்கெல் . . . . ட்ட பற்றும்,— இந்த நதிக்கு தக்ஷிண தீரத்தில், வாயுளான் குடிப்பற்றுக்குப் பெரு நான்கு எல்கையாவது: கீழ் எல்கை, புலியூர் அணைக்கும் திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் ஆழங் காலுக்கும் மேற்கும்; தென் எல்கை, திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் பராக்ரம பாண்ட்ய சதுர்வேதி மங்கலத்து பட்ட[ர்]கள் அகரப்பற்றில் வட எல்கைக்கும், உடையார் திருக்குற்றாலமுடைய நாயனுர் பழந் தேவதானத்துக்கு வடக்கும்; மேல் எல்கை, வாயுளான்குடி அணைக்குக் கிழக்கும்; வட எல்கை சித்ர நதிக்குத் தெற்கும்; ஆக இன்னுன்கெல் கைக்குட்பட்ட பற்றும் — குன்றக்குடிப் பற்றுக்குப் பெரு நான்கெல்கை யாவது: கீழ் எல்கை, இடைமலைப்பரிம்புக்கு மேற்கும்; தென் எல்கை, சித்ர நதிக்கு வடக்கும்; மேல் எல்கை, செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூற்குப் போகிற பெருவழிக்குக் கிழக்கு; வட எல்லை, கடமா குளத்துக்குத் தெற்கு; ஆக இன்னுன்கெல்கைக்குட்பட்டபற்றில், உடையார் திருக்குற்றாலமுடைய நாயனுர் தேவதானமான நிலம் ஒன்பது மா முந்திரிகையின் மூன்று மா முக்காணியும் நீங்கலாக உள்ள பற்றும் — பராக்கிரம பாண்டிய நல்லூற் பற்றுக்குப் பெரு நான்கெல்கை யாவது: கீழ் எல்கை, இலுப்பைத் தொண்டிற் பெருவழிக்கு மேற்கும்;

தென் எல்கை, இக் குளத்தில் நீர் நக்கலுக்கு வடக்கும்; மேல் எல்கை, உடையார் திருக்குற்றாலமுடை . . . .ர் பழந்தேவதானமான திருச் சாலைக்குடிப்பற்றுக்குக் கிழக்கும்; வட எல்கை, சித்ர . . . . தெற்கும், ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றில் இருங்கிண்டி பத்மநாபன் தாந இறையிலி நிலம் இரண்டு மாவும் நீங்கலாக உள்ள பற்று—நல்லூற் பற்றில் வள்ளை முட்டமும், இக்குளத்தில் நீர்பாயும் நிலமாய் வடவூற் பற்றில் நின்றுங்கூட்டின நிலம் மூன்றுமா அரையும், ஆக இப்பற்றுக்குப் பெரு நான்கெல்கையாவது: கீழ் எல்கை, காடேற்றிப்பற்றுக்கு மேற்கும்; தென் எல்கை வடவூற்பற்றில் செங்குளத்தில் நீர் பாயும் நிலத்துக்கும் தஞ்சாவூற் பெருங்காலுக்கும் அனுபோக மழகியான் குளத்தில் நீர் பாயும் பற்றுக்கு வடக்கும்; மேல் எல்லை, இக் குளத்தில் நீர் நக்கலுக்கும் தவணைப் பற்றுக்கும் கிழக்கு; வட எல்கை, தஞ்சாவூரில் நின்றும் தவணைக் குப் போகிற பெருவழிக்குத் தெற்கும்; ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றும்—வடவாரி நாட்டுப் பைம்பொழிற் பற்றில் நல்லாண்பிள்ளைப் பெற்றானுக்கும் விச்வநாதப் பேரேரிக்கும் பெருநான்கெல்கையாவது: கீழ் எல்கை, செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூறக்குப் போகிற பெருவழிக்கு மேற்கு; தென் எல்கை, ஆற்றுக்கு வடக்கு; மேல் எல்கை, பைம்பொழிலில் நின்றும் நல்லூற்குப் போகிற பெருவழிக்கும் முழங்கால் முட்டிப் பாறைக்குங் கிழக்கு; வட எல்கை தேனிடுபொற்றைக்குத் தெற்கு; ஆ . . . . . . ன்கு எல்கைக் உட்பட்ட பற்றும்—முப்பதாவது மேஷ ஞாயிற்று இருபத்தெ. . தியதி யும், பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புணர் பூசத்து நாள், நாம் முன்பு விட்ட பற்றுக்கள் நீங்கலாக, நாளது பூஜைச் சிலவுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுலராம நல்லூரான புலியூற் பற்றுக்குப் பெரு நான்கெல்கை: கீழ் எல்கை, திருவெண் காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப் பற்றுக்கு மேற்கு; தென் எல்கை, சிற்றாற்றுக்கு வடக்கு; மேல் எல்கை, பழந் தேவதான மான தென்காசிப் பற்றுக்குக் கிழக்கு; வட எல்கை, ஆயக்குடி பற்றுக்குத் தெற்கு; ஆக இன்னான்கெல்கைக்கு உட்பட்ட பற்றில், உடையார் திருக் குற்றாலமுடைய நாயனார் தேவதானமும், உடையார் விக்ரமபாண்டீச் வரமுடைய நாயனார் தேவதானமும், நயினார் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டமும், ஸ்ரீ க்ருஷ்ணன் திருவிடையாட்டமும், பராக்ரம பாண்டிய நல்லூரில் நயினார் திருவேங்கடநாதன் திருவிடையாட்டமும், முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறமும், அகரப்பற்றும், நீங்கலாக, இன்னான்கெல்கைக்கு உட்பட்ட பற்றும்—வீரபாண்டிய நல்லூருக்குப் பெரு நான்கு எல்கையாவது: கீழ் எல்கை, தட்டான் குளத்துப் பரிம்புக்கு மேற்கு; தென் எல்கை, திருச்சிற்றம்பலத்துக் காலான இராசகுலரா . . . காலுக்கு நயினார் திரு விருந்த பெருமாள் திருவிடையாட்டமான ஆகவராம . . . துக்கும் வடக்கு; மேல் எல்கை, திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக்குறிச்சிப்

பற்றுக்குக் கிழக்கு; வட எல்கை, விந்தனூர்ப் பெருவழிக்குத் தெற்கு; ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றும்—ஆக இப் பற்றுகளில்ப் பெரு நான்கெல்கைக்கு உட்பட்ட நஞ்செய், புஞ்சை, மாவடை, மரவடை, பட்டடை, கொடித் தோட்டம், செக்கிறை, மற்றும் உள்ள ஸமஸ்த ப்ராப்திகளும், முப்பதாவது பசானமுதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு, இம்மரியாதியிலே இவ்வோலை பிடிபாடாகக்கொண்டு, ஆசந்த்ரதாரவத் இவ் ஆலயம் உள்ள அளவும் கையாண்டு, கல்லிலும் செம்பிலும் வெட்டி, பூசையும் தாழ்வற நடத்திப் போதவும். பாற்க. இவை கிடாரத்தூருடையான் எழுத்து. உ. துல்யம்.

[திருநெல்வேலி ஜில்லா, தென்காசி விசுவநாதர் ஆலயத்தில் உள்ளது.]

உறங்காவில்லி தாசனுன மாவலி வாணுதிராயன்

(கி.பி. 1454)

ஏதத் த்ரைலோக்ய நிர்மாண த்ராண ஸம்ஹார காரணம், ஸ்ரீமன் ஸ்ரீரங்கநாதஸ்ய சாசனம் சாஸ்வதம் பரம்.

'பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர் கோன் விஷ்ணுசித்தன்'[1]

கோதைக்கு நாம் வரக்காட்டின ப்ரணய பத்திரிகை :

'பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்து, நாடும்
சித்தர்களும் தொழுதிறைஞ்ச, திசை விளக்காய்
நிற்கின்ற'[2]

'நல்லார்கள் வாழும் நளிர் அரங்கப் பெரு நகருள்,' நம் வீட்டில், சேரனை வென்றான் மண்டபத்துச் சுந்தர பாண்டியன் பந்தல்கீழ், அரிய ராயன் கட்டிலில் இருந்து, உம்பரும் தும்புரு நாரதர் வந்து முகம் காட்ட, அவர்களுக்கு அழகு ஓலக்கம் கொடுத்து இருக்கச் செய்தே, நம் வீட்டில்—குடவர், கோவணவர், பூவிடுவர், தழை விடுவர், தண்ணீர் சுமப்பார், தண்டெடுப்பார், அணுக்கர், கணக்கர், மற்றும் நம் காரியத்துக்குக் கடவர் எல்லோரும் வந்து,— நம் கோதை வீட்டி னின்றும் அர்ச்சகர், குடவர், கோவணவர், தண்டெடுப்பார், 'ஸ்ரீ ராமாநுஜ உடையார் வந்தார்கள்' என்று, நாமும் சர்வ பரிகரமும் அனைத்துக் கொத்துள்ளாரையும் எதிரே போகவிட்டு, தம் வீட்டில் உள்ளாரையும் கூட்டிக் காண்பித்துக் கொள்ளும் அடைவிலே காண் பித்துக் கொண்டு, தாம் வரக்காட்டின சம்மானமும் சுவீகரிக்கும் அடைவிலே சுவீகரித்தோம். தாம் வரக் காட்டின சாசனமும் வாசித்துக்

காட்ட அறிந்து கொண்டோம். தாம் சொல்லிவரக் காட்டின படியாவது: 'நாம் பதினுருமாயிரவர் தேவிமாருடனே, பெரிய மண்டபத்திலே, விநோதித்திருந்தோம்' என்று, தம் சுற்றத்துத் தோழிமார் தமக்குச் சொல்ல, அப்பொழுது தாம் புண்ணிற் புளி பெய்தாற் போலேயும், வேலால் துன்னம் பெய்தாற் போலேயும், நெஞ்சு ஊடுருவ வேவுண்டு, நிலையும் தளர்ந்து,

'கொள்ளும் பயன் ஒன்று இல்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில்
எறிந்து என் அழலைத் தீர்வேனே'[3]

என்றும் உள்ளே உருகி நைந்து, தாம் நம்மைப் பொருத்தமிலி என்றும் புறம்போல் உள்ளும் கரியான், பெண்ணின் வருத்த மறியாத பெருமான், 'வஞ்சக்கள்வன் மாமாயன்,' 'பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல் நாவும் இரண்டுள வாய்த்து நாணிலி'[4] என்றும், தாய் சொல்லிவரக் காட்டினது தாம், மாமிமார் மக்களாகையாலும், நாம் மாமனுர் மக்களாகையாலும், நந்திறத்து ஊடல் கண்டு உவப்ப வேண்டிச் சொன்னதாயிருக்கும். நாம் 'முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்ப்பது' காரியம் ஆகவும், தேவரகசியமாகவும், பெரிய மண்டபத்தில் இருந்தோம். தாம் மணவாளர் வைத்த பரிசிலே இருந்தோம் என்றும், நாங்கள் எம்மில் இருந்து ஒட்டி அகச்சங்கம் நானும் அவனும் அறிந்தும் என்றும்.

'பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்கு, பண்டு ஒரு நாள்
மாசு உடம்பில் நீர் வாரா மானம் இலாப் பன்றி ஆம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனுர்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே'[5]

என்றும்,

'திண் ஆர்ந்திருந்த சிசுபாலன் தேசு அழிந்து,
அண்ணுந்து இருக்கவே ஆங்கு அவனைக் கைப்பிடித்த
பெண்ணுளன்'[6]

என்றும், 'செம்மையுடைய திருவரங்கர்'[7] என்றும் சொன்னபடியே — நாம் தம்மை அல்லது வேண்டுவதில்லை. தம் வீட்டில் உள்ளவர்களைத் தாட்க நிறுத்தி நில்லாமல் வரக் காட்டச் சொன்னபடியே, அவர்களுக்கு வேண்டும் சத்காரங்களும் செய்து, தமக்கு நாம் என்றும் பல்லக்கும் நாம் இருக்கும் குடையும், நாம் பூணும் கண்டமாலை ஆபரணங்களும், பட்டு பருத்தி ஸுகந்த திரவியங்களும் வேண்டுமதும் கொடுத்து, தமக்கு அடுக்களைப் புறமாக நமக்குப் பூர்வம் நடந்து வருகிற சீர்மையில் விட்ட சகாப்தம் 1375 மேல் செல்லாநின்ற ஸ்ரீமுக வருஷம், மீன ஞாயிற்று, பூர்வ பக்ஷத்து, ஏகாதசியும் புதவாரமும் பெற்ற உத்திரத்து

நாள், உறங்கா வில்லிதாஸன் ஆன மஹாபலி வாணாத ராயர் — சீர்மையான மதுரை மண்டலத்து, முட்டநாட்டுத் திடியன் ஆன திருவரங்க நல்லூர் எல்லையாவது : மேல் எல்லை, புத்தூர் மலைக்கும் வயிரவன் பற்றுக்கும் கிழக்கு; வட எல்லை, வாரந்தூர்ப்பற்றுக்குத் தெற்கு; கீழ் எல்லை, கருமாத்தூரில் குளத்துக்கு மேற்கு; தென் எல்லை புளியஞ்சோலைக்கும் குத்துக்கல்லுக்கும் வடக்கு; இந் நான்கு எல்லைக் கும் உள்பட்ட, மாவடை, மரவடை, பட்டடை, பதிமுதல் மற்றும் எப்பேற்பட்ட சமஸ்தப் பிராப்திகளும் கைக்கொண்டு, கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும். இப்படிக்குத் திருவாய் மொழிந் தருளினமைக்கு அருளால் திரு மந்திர ஓலை நாயகம் ஸ்ரீரங்கநாதப் பிரியன் எழுத்து.

[இராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர், சூடிக் கொடுத்த நாச்சியார் கோயிலில் உள்ளது.]

(சாசனத்தில் குறித்த மேற்கோள்: 1. நாச்சியார் திருமொழி 1:10; 2. பெரியாழ்வார் திருமொழி 4, 9, 6; 3. நாச்சியார் திருமொழி 13, 8; 4. நாச்சியார் திருமொழி10, 3; 5. நாச்சியார் திருமொழி 11,8; 6. நாச்சியார் திருமொழி 11:9; 7. நாச்சியார் திருமொழி 11: 10.)

அரிகேஸரி பராக்கிரம பாண்டியன்

(கி.பி. 1462)

சிவமஸ்து. ஸந்தார்யமேதத் ஸததம் ஸமஸ்த ஸுரமௌலிபி: சாஸநம் விச்வநாதஸ்ய சம்போர்ஜ் ஜயதி சாச்வதம்॥ சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று எண்பத்து நாலின் மேற்செல்லா நின்ற, ஸ்வஸ்தி ஸ்ரீ, கோ ஜடிலவர்மராந த்ரிபுவநச் சக்கரவர்த்திகள், பெருமாள் அரி கேஸரி தேவர் என்று திரு நாமம் உடைய பொன்னின் பெருமாள் பராக்ரம பாண்டிய தேவர் இருந்தருளிய இடத்துக்கு, யாண்டு முப்பத் தொன்றுவதின் எதிர் ஒன்பதாவது, மிதுந நாயற்று, இருபத்தெட்டாம் தியதியும், அபரபக்ஷத்து த்ரயோதசியும், சுக்ரவாரமும் பெற்ற நம் முடைய இருந்தருளிய இடத்தின் திருநாள் ஆன ம்ருகசீர்ஷத்து நாள், ஜநமும், பதினெட்டு நாட்டு வெள்ளாழரும், இரண்டு பத்திரிவழியும், மற்றும் அஞ்சுவகைப்பட்ட பரிகரமும், கூடிக் கற்பித்த காரியமாவது: உடையார் விச்வநாதன், 'உத்தரகாசியில் எழுந்தருளியிருந்த சிவாலயம் ஜீர்ணமாகையாலே, தென்னரி நாட்டுச் சித்ரநதி உத்தர தீரத்திலே, நமக்கு தக்ஷிண காசியாக ஆலயம் செய்து தரவேணும்' என்று, எங்கள் கர்த்தர் பெருமாள் அரிகேஸரி தேவர் என்று திருநாமமுடைய பொன் னின் பெருமாள் பராக்ரம பாண்ட்ய தேவர் இருந்தருளிய இடத்தின் உடனே ஸ்வப்நத்திலே திருவுள்ளம் பற்றி அருளுகையாலே, முன்னாள் சகாப்தம்ஆயிரத்துமுன்னூற்றுஅறுபத்தெட்டின் மேல், ரிஷப ஞாயற்றுப்

பத்தாந் தியதியும் பூர்வ பக்ஷத்து தசமியும் சுக்ரவாரமும் பெற்ற உத்திரத்து நாள், மீன முகூர்த்தமாக கர்ஷணையும் செய்து, தக்ஷிண காசியாகத் திருப்படைவீடும் உண்டாக்கி, உடையார் விச்வநாதனையும் நாச்சியார் உலகமுழுதுமுடைய நாச்சியாரையும் ப்ரதிஷ்டித்து, இந் நாயனுர்க்குத் திருக்கோயில் உபாநாதி ஸ்தூப்யந்தமாகவும், அர்த்த மண்டபம், இடை நாழிகை, மஹாமண்டபம்,ஸோபாநம் ஆவரண கோபுராதிகளும்திருப்பணிசெய்து—நாச்சியார் உலகமுழுதுடைய நாச்சியார்க்கும் திருக்கோயிலும் ஆவரணமும் குறைவற திருப்பணியும் செய்து— கோபுரமும் ஆரம்பித்து, ஸஹஸ்ரலிங்காலயமும் சக்திபீடாலயமும் செய்து, ரிஷபதேவர் முதலாக உள்ள பரிவார நாயன்மாரையும் ப்ரதிஷ்டித்து, ஸஹஸ்ரலிங்கமும் சக்தி பீடமும் ப்ரதிஷ்டித்து, அரிகேசரி நங்கை என்று திருநாமமுடைய பிடாரியையும் பிரதிஷ்டித்து, பிடாரி கோயிலும் மேலை அஞ்சாந்திருவீதியில் அரிகேஸரிப்பிள்ளையார் திருக்கோயிலும், ஆருட்டுமண்டபமும், வெச்சமுது மண்டபமும், மற்றும் இக்கோயில்களிலுள்ள திருப்பணிகளும் மஹாகோபுரமும் எங்கள் கர்த்தர் இருந்தருளிய இடம் முன்னுள் இரண்டாவதின் எதிர் இருபத்திரண்டாவது, வைகாசி மாதம் துடங்கி, முப்பத்து ஒன்ருவதின் எதிர் ஒன்பதாவதுவரை, பதினேழு வருஷத்துக்குள்ளுத் திருப்பணி செய்து நிறைவேற்றின இது மானுஷ மல்ல, தைவீகம் என்று எல்லாரும் அறிந்து கொள்ளவும். எங்களுடைய கர்த்தர் இருந்தருளிய இடம் திருவுள்ளம்பற்றியருள, நாங்களும் கர்ஷணை துடங்கி, இந்தத் திருப்பணியெல்லாம் கூடச் செய்கையுஞ் செய்து, எங்கள் இருந்தருளிய இடம்,இந் நாயனுர்க்கும் நாச்சிமார்க்கும், மற்றுள்ள நாயன்மார்க்கும், பூஜாங்கத்துக்கு வேண்டும் அனைத்துக் கொத்திலுள்ளாரையும் கற்பித்து, திருவாபரணமும் பரிகல பரிச்சிஹ்நமுங் குடுத்து, பூஜையு[ம்] குறைவற நடத்தி, மாசி மாதத்தில் மஹத்து நாள் தீர்த்தமாக நடந்து போதுகிற திருநாளும் நடத்தி— பூஜைக்கு வேண்டும் அமுதுபடி, கறியமுது, சாத்துப்படி, கற்பூரம், குங்குமம், பன்னீர், திருமாலை, திருப்பரிவட்டம், திருவிளக்கு, உட்பட்ட பலவகைக்கும் மற்றும் வேண்டும் நித்ய நைமித்திகங்களுக்கும்— தேவதானமாக விட்ட தென்னுரிநாட்டுத் தென்காசியும், இலஞ்சி, குன்றக்குடி, புலியூர், பாட்டக்குறிச்சி, வீரபாண்டிய நல்லூர், உள்ளிட்ட பற்றும்— நல்லூர்ப் பற்றில் தஞ்சாவூர் காடேற்றி வள்ளைமுட்டம், பன்றிமுட்டம், தண்ணபை, கற்றுச்செற்றை உள்ளிட்ட மற்றும் குறுமறைநாட்டுத் துவரங்காடும், இடைதவணையும், காக்குடிநாட்டு மானநிலைநல்லூர் அகவயலில் நடுவில்த்தலை கூற்றில் விட்ட பற்றும்— இப்பற்றில் தென்கரை காரிகுறிச்சி பிள்ளையார்குளம் உள்ளிட்ட பற்றும் ஆக இப்பற்றுக்களும் விட்டு, இவை நீங்கலாக இதுக்கு முன்பு குளமும் காலும் அணையும் அன்றி, வன்காடாய்க் கிடந்த காடுகளிலே பல இடங்களிலும் ஏர்வை . . . .

[திருநெல்வேலி ஜில்லா, தென்காசி விசுவநாதர் ஆலயத்தில் உள்ளது.]

முதலியார் ஓலைகள்

(கி.பி. 1467)

பெருமாள் சீபத்மனப பெருமாளுக்கு நாம் கல்ப்பித்த சங்கர நாராயண மார்த்தாண்டன் பூசை நடக்கும் சீபத்மநாபன் திருமடத்தில் பூசைக்கும் நமக்காரம் உள்பட்ட வகைக்கும், நாஞ்சிநாட்டு அழகிய பாண்டியபுரத்தில் கிழப்பற்றில் தெக்கடைய விட்டுக்கொடுத்த பற்றுக்கு எல்கையாவிது: கீழ் எல்கை தெய்வேந்திரன் குன்றுக்கும் பொய்கைப் பட்டி மலைக்கும் மேற்கு, தென் எல்கை செவ்வரி வீரன் மலைக்கும் மலையில் நின்றும் தென் பாறை குளத்துக்கு பாயிற காலையாற்றுக்கும் தெள்ளாந்தி குளத்தின் நீர்நக்கலுக்கும் வடக்கு, மேல் எல்கை வட பாறை பற்றில் தோப்புக்கும் அரசடி கோணத்திற்க்கும் கேசவ நல்லூர் குளத்தின் நீர் நக்கலுக்கும் அலத்துறை காலுக்கும் கிழக்கு, வட எல்கை அலத்துறை ஆத்துக்கும் தெற்கும், ஆக இன்னன்கு எல்கைக்கும் உள்ளும்—முன்னுள் இம் மடத்துக்கு விட்டுக்குடுத்த வடபாறை பற்றையும் திரு சரம்கோப்பு பற்றையும் உள்பட கையாண்டு போதுகிறபற்று, உடன் விட்டுக்குடுத்த பாட்ட உளவான கொற்றன் பாறை பற்றில், கல்பகமங்கல கேசவன் கீழ்ணன் தானம் நிலம் இரண்டு மாவும்—காராம்புசெட்டு திரு வெங்கிடமுடையான் சரசோதி தானம் நிலம் இரண்டு மாவும்—ஆக தானம் நிலம் நாலு மாவும் நீக்கி உள்ள நிலமும், அரியன் காடேற்று உள்ளிட்ட பற்று நிலவும், ஆக பற்று இரண்டினுல் உள்ள நிலம் அடங்க லும், கரவும் காராண்மை உள்படவும், விட்டுக்கொடுத்து—தங்கள் காணியாட்சை பற்றுன கடம்போடு விளாகம், சுந்தரம் குழி, புயங்கன் காடேறு, வாகுவிளைத்திருத்து, பூவன்குழி, முத்தலைப் பறம்பு, மேட்டு முத்தலை பறம்பு, வாழைவல்லான், பெறைபள்ளச்சை பழனம், கணக்கன் கோணம், பள்ளச்செய், பள்ளச்செய்பத்தல் முகம், கீள் பள்ளச்செய், குருகார்பள்ளம், பட்டாரிகோணம், தலைசெட்டு காடேறு, காரி காடேறு, புறவடைப்பு, கொல்லன் காடேறு, வாகையோடு காடேறு, (தென்னுஞ்சிகுளம், தென் சோதி புது) குளம், கசந்தவிளைத் திருத்து, துடிக்கொம்பு, ஆற்றன்கால், பரசுராமன் திருத்து, நாகன் காடேறு,—ஆக பற்று 27-னுல் இறங்கல்முது தருசு உள்பட நிலம் நூற்றி அன்பத்திரண்டு மாகாணியின் கீழ் மாகாணியும்—மற்றும், இவ்வெல்கைக்குள் காடுமேடும், கரைப்பற்று, மலைப்பற்று, பட்டி வாரியம், ஊத்தைபாட்டம், காணுப்பாட்டம், பாசிவிலை, ஆனைமறை, குற்றதெண்டம், புறமுதல், செக்கு இறை, தறிகடமை, பட்டடை, தரகு, உள்ளாயம், இடங்கை, வலங்கை, கொழுந்துகடமை, வெருகும், புலியும், கும்புளும், ஆயணியும், மரவடை மாவடையும், மற்றும் நாம் கொள்ளு கோழ்முறைப்பாடு எற்பேர்ப்பட்டதும், கூட அறு நூற்று நாற்பத்திமூணும் ஆண்டு கார்முதலுக்கு ⌐விட்டுத்தரவும் குடுத்த அளவுக்கு தாங்களும் இம்மரியாதியிலே, இன்னுள் முதல்கு சீபராங்குச

தாஸர்க்கு குடிமையும் வழங்கி, இவ் எல்கைக்கு உள்பட்ட பற்றில் வகைப்படியே உள்ள நெல் வக கரைப்பற்று பணவகை உள்பட கொண்டு போதும்; கொள் முறைப்பாடு எற்பேர்பட்டதும், ஷெ பற்றில் மடத்தில் கொண்டு சென்று குடுத்து போதும்படி, 642 ஆண்டு ஆனி மாதம் 31வ கற்பித்தளவுக்கு, இம்மரியாதியிலே, இவ் எல்கைக்கு தோரணவும் இடுவித்துகொண்டு, குடிமையும் வழங்கி, நெல்வகை பண வகை உள்பட முதலாம் முதல் அடங்கலும், மேற்படி மடத்தில் கொண்டு சென்று, குடுத்து போதும்படி அழகிய பாண்டியபுரம் நகரத்தாருக்கு நீட்டு இட்டு விடு என்று திருவுள்ளமாய நீட்டு.

திருக்கழுக்குன்றம்

'முந்தும் வானத்து அரி பிரமாதிகள்,
முனிவர், முப்பத்து முக்கோடி தேவர்கள்,
வந்து சேவிக்கப் போதாது இடம் என்று
மண்டபம் திருமுன்னே வகுத்தவோர்
கந்த வாவித் திருக்கழுக்குன்றனுர்
கச்சி வாழ்தொண்டனைக் காந்தராயனை,
சந்த வாரித் தலமன்னர் யாரினும்
சாப சாதன் இவன் எனத் தந்ததே.

[செங்கற்பட்டு ஜில்லா, திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீசுவரர் கோயிலில் உள்ளது.]

கிருஷ்ணதேவ மஹாராயர்

(கி.பி. 1518)

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகா மண்டலீசுவரன், அரிய ராய விபாடன், பாஷைக்குத் தப்புவராயிர கண்டன், கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான், பூர்வ தெக்ஷண பச்சிம உத்தர சமுத்திராதிபதி, எம் மண்டலமும் கொண்டு எழுந்தருளிய ஸ்ரீ கிருஷ்ணதேவ மஹாராயர் ப்ருதிவீராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் 1440. இதன் மேல் வெகுதானிய வருஷம் உத்தராயணத்து மிதுந நாயற்று அபர பக்ஷத்து அமாவாசியையும் மங்கலவாரமும் விருத்தி யோகமும் பெற்ற இற்றை நாள், சூரிய கிரகண புண்ணிய காலத்து, திருமலை நாட்டுத் திருக்கொடுங் குன்றத்து நயினுர் நல்ல மங்கை பாகற்கு, அறந்தாங்கி அரசு அச்ச மரியாத பெருமாள், அலைவிலஞ்சாத பெருமாள், முகிலின் கீழ்த்திரியும் ஈள வன்னியர் மீசுர கண்டன், ஆட்டுக்கு ஆனைவழங்கும் பெருமாள், ஏழுநாளையில் ஈழந்திறை கொண்ட பெருமாள், கோன் பாட...

யாத பெருமாள், காஞ்சீபுரவராதீசுரன் ஆவுடைய தம்பிரானுர் ஸ்ரீ பாத பக்தன், ஏகப் பெருமாள் தொண்டை மானுர் புத்திரன் பொன்னம்பல நாத தொண்டைமானுர் நாயினுர் நல்லமங்கை பாகற்கு உபயமாகக் கட்டின சிறுகாலச் சந்திக்கு, அமுதுபடி சாத்துபடி உள்ளிட்டு வேண்டும் நித்தம் நிமந்தங்களுக்கு, நம் பேரால் கட்டின பொன்னம்பல நாத தொண்டைமானுர் சந்தியாக அமுது செய்யும் படிக்குக் குடுத்த இன்னயினுர்க்குத் தேவதானத் திருநாமத்துக்காணியாக, சோழ பாண்டிய வள நாட்டு, மேலூர் பெருநான்கு எல்லைக்குள் பட்டதும், சஹிரண்யோதக தாராபூர்வமாக திருநாமத்துக் காணியாக, சந்திராதித்தவற் செல்லக் குடுத்தபடிஆலே, இதுக்குள் உள்பட்ட நிதி நிக்ஷேப, ஜலபாஷாண, கூப தடாகாதியும் தம்பிரானுர்க்கே உரித்தாக கடவதாகவும். இவ்வூற்கு வரும் கடமை, காணிக்கை, வேண்டுகோள், விநியோகம், மற்றும் எப்பேற்பட்ட வரி உபாதியும் கழித்துக் குடுத்தபடிஆலே, சந்திராதித்த வற் செல்ல, சர்வமானியம் ஆக, திரு நாமத்துக் காணி ஆக அனுபவித்துக் கொள்ளவும். கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொண்டு, திருநாமத்துக் காணி ஆக சந்திராதித்தவற் செல்ல, அனுபவித்துக் கொள்ளவும். இந்த தன்மத்துக்கு அகிதம் பண்ணினவன் கங்கைக் கரையில் கபிலையும் பிராமணனையும் மாதாபிதாவையும் குருவையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவானுகவும். இந்த நேரிலே சறுவ மானியமாகப் பற்றி அனுபவித்துக் கொள்ளவும். அறந்தாங்க்கிக் கணக்கு அடியார்க்கு நல்லான் கற்பூரக் காலிங்கராயன் எழுத்து.

[இராமநாதபுரம் ஜில்லா, திருப்புத்தூர்த் தாலூகா, பிரான்மலை மங்கைநாதேசுவரர் கோயிலில் உள்ளது.]

விஜயநகர அரசன் சதாசிவ தேவ மஹாராயர்

(கி.பி. 1545)

சுபமஸ்து. ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹா மண்டலேச்வர சது சமுத்திராதிபதி, ஸ்ரீமந் சதாசிவ தேவ மஹாராயர் பிருதிவீ ராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாத்தம் 1466-ன் மேல் செல்லா நின்ற குரோதி சம்வற்சரத்து, மீன நாயற்று, பூர்வ பக்ஷத்து, உத்துவாநத் துவாதெசியும், சோமவாரமும் பெற்ற உத்திரட்டாதி நக்ஷத்திரத்து நாள் — வீரப் பிரதாப ஸ்ரீமநு மஹாமண்டலேசுவர, இராம இராஜ விட்டல தேவ மகா இராஜர் — சோழ மண்டலத்து, காவேரி தீரத்து, தென்கால் உய்யக் கொண்ட சோழ வளநாட்டு, திரைமூர் நாட்டுத் திருவிடை மருதூர். திருவிடை மருதூருடைய தம்பிரானுற்கு தற்ம சிலாசாசனம் பண்ணிக் குடுத்த படி : மருதப்பர் திருநாமத்துக்காணியாய் பூறுவம் நடந்த புத்துஆற்றுக்கு வடக்கு, ஆவணமும் சிற்ருடியும். இந்த இரண்டு கிராமமும் பூறுவம் கோயிற் பற்ருக நடக்கயிலே, அன்னுளிலே,

பண்டார வாடை காறர் கட்டிக் கொண்டு, பண்டாரவாடைஆகப் போகயில், இப்பொழுது இது காரியமாக திருவிடைமருதூருடைய தம்பிரானுர் திருக்கோயில் தேவகன்மிகளில் திருச்சிற்றம்பலபட்டர் மங்காமற் காத்தார். இந்நயினுர் கோயிற் பற்று என்று நமக்கு விண்ணப் பம் செய்து, நாம் திருவடி பேரிலே தண்டுவந்த பொழுது, நம்முடனே கூட தெற்கு அனந்தசயனம், வடக்கு முதுகல்லு சஹிதமாகத் தண்டு பண்ணி, 'பூறுவம் கோயிற்பற்று' என்று பலகாலும் நமக்கு விண்ணப்பஞ் செய்து, நாமும், 'அந்த கிராமங்களிலே மருதப்பர் முத்திரை எல்லைக் கல்லு நிற்கறது உண்டோ!' என்று நம்முட முத்திரை வாங்கி இலிங்கயர் மனுஷரையும் தூளி நயினுரையும், நாம் முதுகல்லிலே யிருந்து திருச் சிற்றம்பல பட்டர் சொன்னுப் போலே எல்லைக் கல்லு நிற்குதோ என்று பார்க்க அனுப்பிவரக் காட்டி விசாரித்து, 'பூறுவம் கோயிற்பற்று என்கிறத்துக்கு இரண்டு ஊரிலும் கல்லு நிற்குது' என்று பாத்து வந்து, நமக்கு விண்ணப்பம் செய்கையில் நாமும் அந்தப்படிக்கு இராயசமும் வாங்கிக் குடுத்து, சங்கிறம புண்ணிய காலத்திலே திருச்சிற்றம்பல பட்டர் கையிலே உதகம் பண்ணிக் குடுத்து, நம்முட இராயஸமும். . . .

[தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூகா திருவிடைமருதூர்க் கோயிலில் உள்ளது.]

விஜய நகர அரசன் வேங்கடபதி

(கி.பி. 1592)

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகா மண்டலேசுவரன், கண்ட கட்டாரி, சாளுவ, ஸ்ரீ வேங்கடபதி தேவ மகா ராயர் பிரிதிவீ ராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாத்தம் 1514-க்கு மேல், செல்லா நின்ற நந்தன ஸு தை மீ 6உ, திருவிரிஞ்சபுரம் மாற்க சகாயீசுரன் சன்னதியில், சிதம்பரம் குரு நமசிவாய மூற்த்தி அடியார் ஆனந்த நமசிவாய பண்டாரம் அவர்களுக்கு, வாண்டராயன் திரு வீதியில் வடசிறகில் மனே, வேலூர் மாய நாயக்கர் குமார சங்கரப்ப நாயக்கரயன் அவர்களுக்கு புண்ணியமாக புன்னுற்றூர் பெரிய எறம நாயக்கர் கட்டளையிட்ட மடம். இந்த மடத்து மனே திறியம்பக மனேக்குக் கிழக்கு, மூற்தி மாணிக்கத்தின் மனேக்கு மேற்கு, மனே [1] அடி நாற்பத்தொன்று. மனேப்படப்பையும் இந்த மட தற் மத்துக்கு நாள் ஒன்றுக்கு ஒற்றி பிறசாதம் குறுணியும், ஊறண்டன் தாங்கல் அக்கிராரத்தில் நில ஒற்றி சம்பந்தமும், தாராப் பூறுவம் பண்ணிக் குடுத்தோம். இந்த மடம் சீஷ பரம்பரை, புத்திர பரம்பரை யும் சந்திராதித்தவரையும் அனுபொசித்துக் கொள்ளக் கடவராகவும். யிந்த மடதன்மத்துக்கு யாதொருவர் அகுதம் பண்ணின பேர் கெங்கை கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போகக் கடவராக வும்.

[வட ஆர்க்காடு ஜில்லா விரிஞ்சிபுரத்தில் உள்ளது.]

கர்நாடக நவாப்பு

(கி.பி. 1793)

சாலியவாகன சகார்த்தம் 1714-ம் ஸு இதன்மேல், செல்லாநின்ற, பரிதாபிஸு பங்குனிமீ 4வ - புதன்கிழமையும், சுக்கிலபட்சத்தில் துதிகை ரேபதி நட்சத்திரமும், சூலநாமயோகமும், பாலவாகரண(மும்) கூடிய சுபதினத்தில் அசரதகேபிலே நபாபு சாயபு அவர்கள் ராட்சியம் ஆளுகிற நாளையில் — மாடல்கூடின மதுரைச்சீமை அமீ காதர்சாயபு அவர்கள்மாமுலத்துச் செய்கிறபோதும், துரை பாண்டி பதினுலுதலத்தில் திருப்பரங்குன்றம் தலத்தில் நடந்த வயனம்: அசரது திரிசுரபுரம் நபாபு சாயபு அவர்கள் திவானிசு ருய ஸ்ரீ கோபாலராயரவர்கள் நாளையில், தலத்தில் ரிசுமிட்டு வெள்ளைக்காரர் பாளையம் வந்து இரங்கி சொக்கனதர் கோவிலும் இடித்து, பழனியாண்டவன் கோவிலையும் இடித்து, ஊரையும் ஒப்புக்கொண்டு, ஆஸ்தானமண்டபம் கைக் கொண்டு, அட்சகோபுரவாசல் கதவையும் வெட்டி, கலியாணமண்டபத்துக்கு வருகிற பக்குவத்தில் — திருவிழாவும் நின்று தலமும் ஊரும் எடுபட்டுப்போரதாயிருக்கிறது என்று, தலத்தாரில், சுந்தரபட்டர், தெய்வேந்திரபட்டர், குட்டிபட்டிபட்டர், சிதம்பரம்பிள்ளை, விழுப்பாத ராயர், ஆறு நிறுபாகக்காரர் உள்ளிட்டாரும் — நாட்டாண்மை முத்து கருப்பபிள்ளை உள்ளிட்டாரும் — காவல் ஆறு கரைப்பேர் உள்ளிட்டாரும் கூடி, வயிராவி முத்துக்கருப்பன் மகன் குட்டியைக் கோபுரத்திலேரி விழச்சொல்லி, அவன் விழுந்து, பாளையம் வாங்கிப்போனபடியினலே, அவனுக்கு ரக்தகாணிக்கை பட்டயம் எழுதிக் கொடுத்தோம்: ரக்த காணிக்கை நிலம்: தெங்கால் புரவில் அம்மாபாகத்துக்குத் தெற்கு, மதுரை பாதைக்கும் குளத்துக்கரைக்கும் கிளக்கு, வீரப்பபிள்ளை தெப்பக்குளத்துக்கு மேற்கு, தெப்பக்குளம் வாய்க்காலுக்கு வடக்கு,— இன்னுங்கெல்கைக்கு உள்ப்பட்ட திருத்தல் நிலம் ஒருமாவும், கிர்ஷ்ண புரம் குடியிருப்புக்கு மேற்கு, சுந்தரபட்டர் ஆண்டிச்செய்க்கி கிழக்கு, சரவணப்பெருமாள்பட்டர் திருத்தலுக்கும் வாய்க்காலுக்கும் தெற்கு, மதுரைப் பாதைக்கும் வடக்கு, இன்னுங்கெல்கைக்கு உள்ப்பட்ட ஊரடிநிலம் ஒருமாவும், ஆக ரெண்டுசெய்யும்—உளவடை, மேல்வாரம், கட்டுச்சுவந்திரம், சர்வசுத்தமானிபம் பண்ணி, கோவிலில் நித்தியபடி அரைப்படி அரிசி சாதமும்கொடுத்து, கிராமத்து வரி நலொட்டுவரி ஆயும் உள்பட சுத்தமானியமாய், கல்லும் காவேரி புல்லும் பூமியும் சந்திராதித்யருள்ளவரைக்கும், புத்திர பவுத்திர பாரம்பரியாய் ஆண்டு கொள்வாராகவும். இதுக்கு விகாதம்பண்ணினவன் கெங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்றதோஷத்தில் போவாராகவும். குமரன்துணை. உ.

[திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் உள்கோபுரத்தில் உள்ளது.]

இத் தொகுதியுள் அடங்கிய சாசனங்களின் அகராதி

அரிகேஸரி பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1452) ... 49

அரிகேஸரி பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1462) ... 54

இராஜகேசரிவர்மன் (கி.பி. 884) ... 12

இராஜகேசரிவர்மன் (கி.பி. 896) ... 13

இராஜநாராயண சம்புவராயர் (கி.பி. 1342) ... 44

இராஜாதிராஜன்-II (கி.பி. 1176) ... 24

இலங்கை அரசன் விசயபாகு (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) ... 22

உறங்காவில்லி தாசனுன மாவலி வாணாதிராயன் (கி.பி. 1454) ... 52

கர்நாடக நவாப்பு (கி.பி. 1793) ... 60

கலிங்க தேசத்துக் கங்கவமிசத்து மன்னன் வீர நரஸிம்ஹ தேவன் (கி.பி. 1396) ... 46

கன்னர தேவன் (கி.பி. 962) ... 14

கிருஷ்ணதேவ மஹாராயர் (கி.பி. 1518) ... 57

குலசேகர பாண்டியன் (கி.பி. 1275) ... 40

குலோத்துங்க சோழன்-I (கி.பி. 1090) ... 20

குலோத்துங்கன்-II (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) ... 23

குலோத்துங்கன்-III (கி.பி. 1204) ... 27

குலோத்துங்கன்-III (கி.பி. 1214) ... 28

கொங்கு கலிமூர்க்க விக்கிரம சோழன் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு)... 20

கொங்குச் சோழ மன்னன் விக்கிரம சோழ தேவன் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) ... 26

கொங்குச் சோழ மன்னன் வீர ராசேந்திர தேவன் ... 42

கொங்குச் சோழர் ஆட்சிக்காலம் ... 42

கொங்குச் சோழர் ஆட்சிக்காலம் ... 47

கொங்கு நாட்டுச் சோழர்கள் ஆட்சிக்காலம் ... 26

கோ மாறஞ் சடையன் (கி.பி. 9-ஆம் நூற்றுண்டு) ... 12

கோனேரி(ன்)மை கொண்டான் ... 47

சம்புவராயன் ... 39

சித்திர மேழிப் பெரிய நாட்டவர் ... 41

திருக்கழுக் குன்றம் ... 57

திருக்கோளக்குடி ... 40

திருப்புத்தூர் (கி.பி. 1387) ... 45

தேனிமலே ... 13

பராந்தகன்-I (கி.பி. 922) ... 13

பராந்தகன்-I (கி.பி. 944) ... 14

பராந்தகன் நெடுஞ்சடையன் (கி.பி. 770) ... 7

பல்லவ சிம்ம வர்மன் (கி.பி. 6-ஆம் நூற்றுண்டு) ... 5

பல்லவ பரமேச்வர வர்மன் (கி.பி. 8-ஆம் நூற்றுண்டு) ... 6

பல்லவ மகேந்திர வர்மன்-I (கி.பி. 600-630) ... 6

பாகன் ... 43

பாண்டியன் மாறஞ் சடையன் (கி.பி. 770) ... 11

பாண்டியன் மாறஞ் சடையன் (கி.பி. 773) ... 11

மதுராந்தக உத்தம சோழன் (கி.பி. 983) ... 14

மதுரை ஸுல்தான் ஆட்சிக்காலம் (கி.பி. 1364) ... 43

மாறவர்மன் சுந்தர பாண்டியன்-I (கி.பி. 1228) ... 30

மாறவர்மன் சுந்தர பாண்டியன்-I (கி.பி. 1232) ... 32

மாறவர்மன் சுந்தர பாண்டியன்-I (கி.பி. 1236) ... 34

மிக முற்பட்ட சாசனங்கள் ... 5

முதலியார் ஓலேகள் (கி.பி. 1467) ... 56

ராஜராஜன்-I (கி.பி. 1010) ... 16

ராஜராஜன்-III (கி.பி. 1231-1232) ... 31

ராஜேந்திரன்-I (கி.பி. 1035-1036) ... 17

விஜயநகர அரசன் சதாசிவ தேவ மஹாராயர் (கி.பி. 1545) ... 58

விஜயநகர அரசன் வேங்கடபதி (கி.பி. 1592) ... 59

விஜயராய மஹாராயர் (கி.பி. 1446) ... 48

வீர பாண்டிய தேவன் ... 26

வீர விசுவநாத தேவன் (கி.பி. 1295) ... 40

வேணுட்டரசன் வீர ரவிகேரள வர்மன் (கி.பி. 1229) ... 31

ஜடாவர்மன் வீர பாண்டியன்-II (கி.பி. 1266) ... 37

Printed by S. Viswanathan at the Central Art Press,
'Acton Lodge', 11 McNichol Road, Chetput, Madras 31.